Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24 ரூபா 30.00
ஒக்ரோபர் 10 - 16, 2013


# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1035



## கூட்டமைப்பின் ஆளும் அரசியல்;



# கடினமான பயணம்



# காலம் கடந்த மு.கா.வின் ஞானம்!



# அமெரிக்க பட்ஜெட் சர்ச்சை! அரசதுறை இழுக்குமா மூச்சை?

## ஆலிலையில் தூங்குவது ஏன்?

தாவர வகைகளிலேயே மிகவும் உயர்ந்த இடத்தை பெறுவது ஆலமரம். ஆலமரத்தின் நிழலில் அமர்ந்துதான் தட்சிணாமூர்த்தி ஞானம் தருகிறார். பொன், பொருள், குடும்ப சுகம் மட்டுமின்றி மறைந்த முன்னோர்கள் மோட்சம் பெற பிதுர் தர்ப்பணத்துக்குரிய பிண்டம் போடும் சடங்கை ஆலமரத்துக்கு கீழே அமர்ந்துதான் செய்வார்கள். எனவே தான் ஞானமும் கர்மத்திற்குரிய பலனையும் தருகின்ற ஆலமரத்தின் இலையில் கண்ணன் படுத்துக்கொண்டான். மேலும் ஆலிலைக்கு ஒரு விசேஷசக்தி உண்டு. இது வாடினாலும்கூட நொருங்கிப் போவதில்லை.

ஆலிலையில் படுத்திருக்கும் கண்ணன் நமக்கு ஒரு பாடத்தையும் போதிக்கிறான். அடே பக்தனே! நீ எதற்கும் கவலைப்படாதே. என்னைப் போலவே நீ குழந்தை உள்ளத்துடன் இருந்தால், உலக வாழ்க்கை என்ற கொடு மையான அலையால் தாக்கப்படமாட்டாய். குடும்பம் என்ற சம்சாரக்கடலில் அனுபவிக்கும் இன்பதுன்பங்களை ஒரு விளையாட்டாக எடுத்துக்கொண்டு என்னைப்போல் ஆனந்தமாய் இரு என்கிறான். இதுதான் கண்ணன் ஆல்மர இலையில் மிதக்கும் தத்துவம் ஆகும்.

ஆன்மீகம்

## தாழ்ந்தோரால் மாட்சி!

"தம்மைத் தாமே தாழ்த்துவோர் உயர்த்தப்படுவர்" என்னும் இன்றைய மையக் கருத்தினை முதல் மற்றும் நற்செய்தி வாசகங்களில் காண்கிறோம். மானிட வாழ்வின் சுவைமிகு முரண்பாடுகளுள் இதுவும் ஒன்று. வலிமையுடையோர் எப்போதும் வெற்றி பெறமுடிவதில்லை. வலிமை குன்றியவர்களும் வெல்லமுடிகிறது.

அதுபோல, நெஞ்சிலே செருக்குற்றோர் எப்போதும் இறைவனால் சிதறடிக்கப்படுகின்றனர். தம்மையே தாழ்த்திக்கொள்பவர்களுக்கு இறைவனின் முன்னிலையில் பரிவு கிடைக்கும் என்று இன்றைய முதல் வாசகம்– சீராக்கின் ஞானநூல் தெரிவிக்கிறது. "ஆண்டவரின் ஆற்றல் பெரிது. ஆயினும், தாழ்ந்தோரால் அவர் மாட்சி பெறுகிறார்" என்று வாசிக்கிறோம்.

எனவே, "குழந்தாய், நீ செய்வது அனைத்தையும் பணிவோடு செய்". நம் இதயத்தில் தாழ்ச்சியை, பணிவை வளர்த்துக்கொள்வோம்.

## அல்லாஹ்வின் கருணையைப் பெறுவோம்

எம்மை படைத்து பரிபாலிக்கும் அல்லாஹ் கூறுகின்றான்: நான் உமக்கு கருணை புரிய வேண்டு மாயின் நீர் மற்றவர்களுக்கு கருணை காட்டும்.

எவர் அவ்வாறு கருணை காட்டினாரோ, நிச்ச யமாக அவருக்கு நான் கருணை காட்டுவேன்.

இன்னும் என் கருணையைப் பொழிந்து அவரை சுவர்க்கத்தில் புகுத்துவேன் என்று.

ஆம். இறைமறை இப்படி வலுவூட்டுகிறது. உங்களுடைய அல்லாஹ் கருணையை தன்மீது கடமையாக்கிக் கொண்டான்.

அல்குர்ஆன் 6:54

இக்கருணையைத்தான் பிஸ்மில்லா ஹிர்ரஹ் மானிர் ரஹீம் அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் என்ற சொற்றொடர் எமக்கு சொல்லிக்கொண்டு இருக்கிறது.

எனவே நாம் அல்லாஹ்வை நேசித்து அவன் சிருஷ்டியான மனிதனையும் கவனித்து அல்லாஹ்வின் கருணையைப் பெறுவோம்.

எம்.சீ.கலீல், கல்முனை-05

## கவிதைப்போட்டி இல 1032



### சாதிக்க பிறந்தவன் மனிதன்

பா ரா ட் டு க் கு ரி ய து

மானிடா! நீ
கன்னத்தில் கை வைத்து
கைதியை போல் அமர்ந்திருக்கிறாய்

ஆனால் இவன்
மரத்தில் கால் வைத்து
ஒரு காலிலே
உலகை சாதனையில் ஆழ்த்த
திட்டம் தீட்டுகிறான்

இன்னும் எத்தனை நாள்
பிறர் சாதிப்பதையே
பார்த்துக் கொண்டிருக்கப்
போகிறாய்?

மனிதா
நீ சாதிக்க பிறந்தவன்.

த.பவதாரணி
இல.27, டன்பார் வீதி,
ஹட்டன்.

## கவிதைப் போட்டி இல 1035



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 14. 10. 2013

கவிதைப் போட்டி இல. 1035 தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## அப்பனுக்கே ஆச்சரியம்!

புலிக்குப் பிறந்தது
பூனை யாகுமோ? –
ஒரு
புருஸ்லியின்
தாக்கம் – மறு
சக்கிச்ஷானின்
ஊக்கம்...
"இப்படியே
இவன் பயின்றால்
எதிர் கா(ல்)லத்தில்
அடியுதையில்
இவனுமொரு
பறந்தடிக்கும்
பந்து!" எனப்
பாத்திருக்கும் –
இவ்
வப்பனுக்கே
ஆச்சரியம்!.

பாண்டியூர் பொன்.நவநீதன்.

## கடுகு

பெரியவன் தரையில்
இரு காலூன்றி
மரநிழலின் ஒருபுறம்
ஓய்வெடுக்க – சிறுவனோ
விருட்சத்தில் ஒரு காலூன்றி
மறுபுறம் ஓய்வெடுப்பது
'கடுகு சிறிது காரம் பெரிது'
என்பதையல்லவா
அடித்துக் கூறுகிறது.

அ.சந்தியாகோ, கண்டி.

## காணி சுவீகரிப்பு

எவரும் எங்கும்
வாழலாம்
அரசு கூறுகிறது!
நானோ வீதியில்
வாழ்கிறேன்
மற்றவர்கள்
எனது காணியில்
வாழ்வதால்!

த.நகுலேஸ்வரன்
கல்லடி, வேலூர்
மட்டக்களப்பு.

## கராட்டிக் கலை

இளமையில் கல்வி
சிலையில் எழுத்து
சிறுவனின் முயற்சி
சிறிதும் பிசகா
கராட்டிக் கலையை
கற்று ஓங்க
பிள்ளை முன்னிற்க
பிதா பின்னிற்கிறார்.

எம்.சீ.கலீல், கல்முனை 05.

## உங்கள் பக்கம்

### மின்சார சபையினரின் அசமந்தப்போக்கு

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு என்னும் பிரதேசத் தில் பாண்டியன்குளம் என்னும் இடம் அமைந்திருக்கின்றது. இங்குள்ள பிரதான போக்குவரத்துப் பாதையின் அருகில் உள்ள மின்கம்பம் ஒன்றுடன் வாகனம் ஒன்று மோதியதால் குறித்த மின் கம்பம் சேதமடைந்து சரிந்த நிலை யில் காணப்படுகின்றது. குறித்த சம்பவம் இரண்டு மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்றிருந்தது.

அப்போது இதுதொடர்பாக இலங்கை மின்சாரசபை பிரதேச காரியாலயத்திற்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அங்குவந்த மின்சார சபை ஊழியர்கள் அவற்றைப் பார்வையிட்ட துடன் குறித்த மின்கம்பத்துக்குப் பதிலாக புதிய மின்கம்பம் நிர்மாணிக்கப்பட வேண்டும் என்ற அறிக்கையுடன் சென்றிருந்தனர்.

ஆனால், இன்றுவரை குறித்த மின்கம்பம் மாற்றியமைக்கப்படாத நிலையில் சரிந்துவிழும் நிலையில் உடைந்திருக்கின்ற மின்கம்பத்தி னூடாகவே குறித்த பிரதேசத்திற் கான மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

குறித்த வீதிவழியாக மாணவர் கள் கால்நடையாகச் சென்று வருவதாலும் வாகனப் போக்குவரத் துக்களின் போது, மின் அழுத்தத் தினால் பாதிக்கக்கூடிய ஏதுநிலை கள் இருக்கின்ற போதிலும் மின்சார சபையினர் அசமந்தமாகச் செயற்படுவதாகப் பிரதேச மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தா.அருள்ராஜா,
பாண்டியன்குளம்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:– 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :–0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com




## வாசகர் சாலை

### பெறுமதி தேவை

வித்தியாசமான கருத்துக்களை சுவைபட தொகுத்து வழங்குகின்றது தினமுரசு. எப்போதுமே வாசகர்களுக்கு எது பிடிக்கும், எது பிடிக்காது என அறிந்து வழங்குவதில் ஒரு தனிப்பட்ட தன்மை உண்டு என்பதில் அலாதி ஆவல் உன் மேல் கொண்டுள்ளேன்.

முரசில் காத்திரமான - பெறுமதியான அம்சங்கள் குறைவு என்றே கருதுகின்றேன். போட்டிகளுக்கு மத்தியில் இடம்பெறும் எதுவானாலும் அவைகளில் பெறுமதி இருக்கவேண்டும். அதையே நான் இங்கும் எதிர்பார்க்கின்றேன். முரசின் காத்திரம் குறைவதால் அதற்கான காரணத்தை நாமும் தேடவேண்டிய அவசியம் ஒன்று உள்ளது. முரசு வீறுநடை போடவேண்டிய அவசியம் கட்டாயம் தேவை.

ஜே.லொசியா, கொழும்பு-15.

### நிறைவேறியது எதிர்பார்ப்பு!

நீண்ட நாட்களுக்குப் பிறகு தினமுரசுடன் தொடர்புகொள்ளும் வாய்ப்பு கிடைத்திருக்கின்றது.

பல்சுவை அம்சங்களை சுவைபடத் தரும் முரசுக்கு நன்றி. நீண்ட நாட்களுக்குப் பிறகு கோவை நந்தனின் கட்டுரை பிரசுரமாயிருக்கிறது. சிரியாவை அல்லோலகல்லோத்தைப் பற்றி விளக்கியுள்ளார். கட்டுரையாளர் கோவை நந்தன் அவர்களுக்கு பாராட்டுக்கள். முரசின் தினப்பதிப்பையும் படித்துவருகின்றேன்.

க.ஆரபி, கண்டி.

### நல்வழிகாட்டிடுவாய்!

ஆயிரம் இதழ் கண்டு
இப்போது
ஆயிரத்து முப்பத்தைந்தாய்
ஆர்ப்பரிப்புகள்....
ஆரவாரங்கள் இன்றி
அமைதி காத்து
எம்மனதில் அச்சமின்றி
ஆறிய மனதுடன் தகவல்
பலசொல்லி
சீரும் சிறப்புடன் வாழ
வைக்கின்றாய்
வாழி நீ..!
வாசகர்களாகிய எம்மை
நல்வழிகாட்டிடுவாய்!

A.M.இர்பான், மட்டக்களப்பு.

### காத்திருப்பு!

அன்பான இனிய முரசே! மக்களுக்கு ஓர் வழிகாட்டியாய் இருந்துவருகின்றாய். பாலர் முதல் முதியவர் வரை வாசிக்கக் கூடியவகையில் தகவல்கள் அருமையாக எம்மை வந்தடைவதில் மகிழ்ச்சிதான். சினிமா பக்கத்தில் படங்கள் மட்டும் கிளாமர் ஆக வந்தால் போதாது. அதில் வரும் செய்திகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். பழைய சினிமா நடிகர்களின் வரலாறுகளை தரலாமே. நான் அதற்காக காத்திருக்கின்றேன்.

தெ.அம்பலவாணர், கண்டாவளை

# ஆபத்தான அரசியல் சூழல் மக்களின் வாழ்வை சீர்குலைத்துவிடும்

## - சந்திரகுமார் எம்.பி



**நாட்டில் ஆபத்தான அரசியல் சூழல் நிலவுமாயின் அது மக்களின் நிம்மதியான வாழ்க்கைச் சூழலை சீர்குலைத்துவிடும். எனவே சீரான அரசியல்போக்கை பாதுகாக்கும்வகையில் அரசியல்சார் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என முகாவில் பகுதிக்கு மின்விநியோகத்தினை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், வடபகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் சில அரசியல்வாதிகள் வெளிப்படுத்துகின்ற நிதானமற்ற அரசியல் கருத்துக்களுக்கு தென்பகுதி அரசியல் சக்திகள் பதிலளிக்கின்ற சந்தர்ப்பங்களில் நாட்டில் அரசியல் பதற்ற நிலைமைகள் உருவாக சாத்தியமுள்ளது எனவே இங்குள்ள அரசியல்வாதிகள் மக்களின் பாதுகாப்புக்களை கருத்தில் கொண்டு செயற்படவேண்டும். மாறாக இனவாதத்தை தூண்டுகின்ற பேச்சுக்களும் வீராவேச வார்த்தைப் பிரயோகங்களும் நாட்டில் ஆபத்தான அரசியல் சூழலையே உருவாக்கும். அது எமது மக்களின் நிம்மதியான வாழ்வை சீர்குலைத்துவிடும்.

அதேவேளை, எமது இனத்தின் தேசியத்தை பாதுகாக்கின்ற பொறுப்பிலிருந்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் ஒருபோதும் பின்நின்றதில்லை. அதனை பாதுகாப்பதற்கும் தொடர்ந்தும் முன்னேற்றத்தின் பாதையில் பயணிப்பதற்கும் நாம் உழைத்து வருகின்றோம், எனவும் குறிப்பிட்டார்.

## கட்டுநாயக்க அதிவேக பாதை இம்மாத இறுதிக்குள்

கொழும்பு கட்டுநாயக்க அதிவேக் போக்குவரத்துப் பாதை இம்மாத இறுதிக்குள் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்படவுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

சீனாவின் அனுசரணையில் நிர்மாணிக்கப்பட்டுவரும் 25.8 கிலோமீற்றர் நீளமுடைய இந்த அதிவேக வீதியை அமைக்கும் பணிகளுக்காக 350 மில்லியன் அமெரிக்க டொலர் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சு அறிவித்துள்ளது. நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டுக்கு வருகைதரும் பல நாட்டுத் தலைவர்கள் இந்த வீதியைப் பயன்படுத்தக் கூடியவாறு கட்டுநாயக்கவிலிருந்து கொழும்பை சுமார் 20 நிமிடங்களில் வந்தடைவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இயற்கையான சூழலுடன் கடல் மணலைப் பயன்படுத்தி இலங்கையில் நிர்மாணிக்கப்படுகின்ற இரண்டாவது அதிவேகப் போக்குவரத்து வீதி இதுவாகும்.

## 32 வருடங்களாக தீர்க்கப்படாத பிரச்சினை!

குடிநீர் பிரச்சினையை நிவர்த்திக்க கோரியும் சீரற்ற பாதையை புனரமைத்து தருமாரு கோரியும். ஹட்டன், ரொசல்ல மாணிக்கா வத்தை வீடமைப்பு திட்டத்தில் உள்ள சுமார் 120 குடும்பங்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்பிரதேச மக்களுக்கு மண் கலந்த குடிநீர் கிடைப்பதாகவும் பாதை சீரின்மையால் அவசர தேவை களை கூட நிறைவேற்றிகொள்ள முடியாத நிலைமைக் காணப்படுவ தாகவும் கூறி அம் மக்கள் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர். 32 வருடகால மாக இந்த பிரச்சினைகள் இருப்பதாக மக்கள் சுட்டிக்காட்டினர்.

## கூட்டமைப்பின் அணுகுமுறைக்கு புத்திஜீவிகள் பாராட்டு!

வடக்கு மாகாண சபை தேர்தல் வெற்றியை தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் ஆகியோரின் செயற்பாடுகளும் கருத்துக்களும் தமிழ மக்களுக்கு ஆறுதல் தரும் ஆக்கபூர்வமான முறையில் இருப்பதாக, நாடளாவிய ரீதயில் புத்திஜீவிகள் தமது வரவேற்பைத் தெரிவித்து உள்ளனர்.

மேலும், இத்தகைய அரசியலை தமிழ்க் கூட்டமைப்பு முப்பது வருடங்களுக்கு முன்னர் அல்லது இறுதி யுத்தம் இடம்பெற ஆரம்பித்த காலப் பகுதியிலாவது மேற்கொண்டிருந்தால் மக்களும், நாடும் அழிவுகளைச் சந்திக்காமலேயே தீர்வினைக் கண்டிருக்கலாம் எனவும் புத்திஜீவிகள் கருத்துத் தெரிவித்தனர்.

எது எவ்வாறிருப்பினும் இனிவரும் காலங்களில் இருதரப்பும் பரஸ்பரம் விட்டுக்கொடுப்புக்களுடன் செயற்பட்டு இனப்பிரச்சினைக்கு நல்லதோர் தீர்வினைக் காண முயற்சிக்கவேண்டும் எனவும், அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு வெளியே வந்து அரசாங்கத்தை விமர்சிப்பது போன்ற கடந்த கால செயற்பாடுகள் போலல்லாது எதிர்காலத்தில், தமிழ்க கூட்டமைப்பு உண்மையான இதய சுத்தியுடன் பேச்சுக்களில் ஈடுபட வேண்டும் எனவும் புத்திஜீவிகள் தெரிவித்தனர்.

## அனைத்து குடும்பங்களுக்கும் வீட்டை நிர்மாணிப்பதே இலக்கு

### - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ -



நாட்டிலுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் வீடொன்றை நிர்மாணித்துக் கொடுப்பதே தமது இலக்கு என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ குறிப்பிட்டுள்ளார். சர்வதேச குடியிருப்பாளர் தினத்தை முன்னிட்டு, சொய்சாபுர தொடர்மாடி வீட்டுத்திட்ட பகுதியில் நடைபெற்ற தேசிய நிகழ்வில் ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

நாட்டிலுள்ள மக்களுக்கு மின்சாரம், நீர் மற்றும் தற்போது புதிய வீதிக் கட்டமைப்பு வசதிகளை வழங்கியுள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, கிராமத்திலுள்ள அழகை நகரங்களுக்கும், நகரங்களிலுள்ள வசதிகள் மற்றும் ஆடம்பரம் என்பவற்றை கிராமங்களுக்கும் கொண்டு செல்லவுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளார்.

வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த செயற்பாடுகளூடாக, வெற்றிகளை பாதுகாத்துக்கொண்டு, முன்னோக்கி பயணிக்க வேண்டுமெனவும் சிறந்த சமூகமயமாக்கல் மூலம் அனைத்து விடயங்களும் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## குதிரையை முத்தமிட்டதால் கிடைத்தது விவாகரத்து!

சவுதி அரேபியாவைச் சேர்ந்த பெண் ஒருவர் ஒரு குதிரைக்கு முத்தமிடும் போட்டோ வெளியானதை அடுத்து, அந்தப் பெண்ணை விகாகரத்து செய்துள்ளார் கணவர். தமது மனைவியை குதிரையை முத்தமிட்ட போட்டோவை சமூக வலைத்தளத்தில் கண்ணுற்ற கணவரே, கதிகலங்கி விவாகரத்து வரை போய்விட்டார். பெயர் வெளியிடப்படாத இந்தப் பெண், பிராணிகளில் அன்புகொண்டவர் என தெரிவித்துள்ள பத்திரிகை ஒன்று, விவாகரத்து குறித்து அந்தப் பெண் கவலைப்படவில்லை எனச் செய்தி வெளியிட்டுள்ளது.

ரியாத் நகர் அருகேயுள்ள பண்ணை ஒன்றுக்கு சென்ற இந்தப் பெண், அங்கு நின்றிருந்த குதிரை ஒன்றுடன் போட்டோ எடுத்துக்கொள்ள விரும்பினார். குதிரைக்கு அருகே சென்று தட்டிக்கொடுத்து முத்தமிட்டு போட்டோ எடுத்துக்கொண்டார். அதை தமது சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்டும்விட்டார். இந்த போட்டோவை பார்த்த கணவர், உடனடியாக அந்த பெண்ணை விவாகரத்து செய்துவிட்டார்.

"மனிதர்களுக்கும், பிராணிகளுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை அறிந்திராத கணவர் விவாகரத்து செய்தது குறித்து தாம் கவலைப்பட போவதில்லை" எனத் தெரிவித்த அந்தப் பெண், அரேபியக் குதிரைமீது உள்ள என்து அன்பை அந்த போட்டோமூலம் வெளிப்படுத்தியதில் பெருமையடைகிறேன் எனவும் கூறியுள்ளாராம்.

## விமான விபத்தின் மர்மம் என்ன?

நைஜீரியா தலைநகரில் விபத்துக்குள்ளான விமானத்தின் கறுப்புப்பெட்டி கிடைத்ததை அடுத்து, விபத்துக்கான காரணம் என்ன என்பதை கண்டறிய ஆய்வுகள் தொடங்கப்பட்டுள்ளன. அசோசியேட்டட் ஏர்லைன்ஸ் என்ற நிறுவனத்துக்கு சொந்தமான Embraer ரக விமானம் இது.

தலைநகர் லாகோஸில் இருந்து அகுரே என்ற நகரை நோக்கி சென்றுகொண்டிருந்த விமானம், பறக்க ஆரம்பித்து சிறிது நேரத்திலேயே வானில் இருந்து தரையில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. விமானத்தில் பயணம்செய்தவர்களில் 13 பேர் அந்த இடத்திலேயே மரணமடைந்தார்கள். மற்றைய பயணிகள் பலத்த காயங்களுடன் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

விபத்தின்பின் எடுக்கப்பட்ட போட்டோக்களில் இருந்து விபத்து எப்படி நடந்திருக்கும் எனப் புலனாய்வாளர்கள் ஊகிக்கக் கூடியதாக உள்ளது.

விமானத்தின் முன்பகுதி முழுமையாக சேதமடைந்திருக்கிறது. அதன் அர்த்தம், விமானத்தில் மூக்கு பகுதி தரையில் மோதும் விதத்தில் விமானம் தரையை நோக்கி வந்துவிழுந்திருக்கிறது. அதாவது, விமானத்தை மிதக்க வைக்கக்கூட விமானியால் முடியவில்லை.

இந்த விமானம் டேக்-ஓ.ஃப் செய்யப்பட்ட சிறிது நேரத்தில் அதில் யந்திர கோளாறு இருப்பது பைலட்டுக்கு தெரியவந்து, மீண்டும் லாகோஸ் ஏர்போர்ட்டுக்கே திரும்பி வர அனுமதிகேட்டதாக தெரியவருகிறது. அதற்காக 180 பாகை கோணத்துக்கு விமானி விமானத்தை பொசிஷன் பண்ணவேண்டிய தேவை உள்ளது.

குறுகிய தொலைவில் இதை செய்வதென்றால், விமானத்தை ஒரு பக்கமாக சரிக்கவேண்டியிருக்கும். அப்படி செய்யும்போது விமானம் வீழ்ந்திருந்தால்கூட, மூக்கு நிலத்தில் அடித்து விழுந்திருக்க முடியாது.

ஆக, ஒரு சாத்தியம், விமானி விமானத்தை முன்புறமாக சரித்திருக்கவேண்டும். ஆனால், அப்படி செய்ய வேண்டிய தேவை ஏதும் இந்த சூழ்நிலையில் கிடையாது.

இன்னொரு சாத்தியம், விமானத்தின் வெயிட்-அண்ட்-பேலன்ஸ் சரியாக திட்டமிடப்படவில்லை. விமானத்தின் முன்புற எடை அதிகமாக திட்டமிடுவதை, நோஸ்-ஹெவி பிளானிங் என்று சொல்வார்கள். பிளைட் பிளானர்கள், சில சந்தர்ப்பங்களில் அதை செய்வதுமுண்டு. இந்த விமானத்துக்கும் அப்படி பிளைட் - பிளானிங் செய்யப்பட்டிருக்கலாம்.

தற்போது கறுப்புப்பெட்டி கிடைத்துவிட்டதால், விபத்து எப்படி நடந்தது என்று தெரியவந்துவிடும்.



வாரமலர்
தினமுரசு

த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## பொறுப்பும் புதுப் பயணமும்

"இலங்கை மத்திய அரசுடன் மோதி மக்களுக்கு ஆற்றவேண்டிய பணிகளை நிறைவேற்றுவது கடினமாக இருக்கும்"

இப்படி வாஸ்தவம் பேசியிருப்பவர் கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தன். இத்தனை ஆண்டுகள் எதிர்க்கட்சி ஆசனங்களிலேயே இருந்துவிட்டதால் இதைப்பற்றி சிந்தித்திருக்கவில்லை.

அரசுடன் உறவு வைத்திருந்தவர்களை துரோகிகள் என்றும். அரசின் கைக்கூலிகள் என்றும் இன்னும் எதையெல்லாமோ வசதியாக கூறிக் கொண்டிருந்தவர்களுக்கு தற்போது சம்மந்தன் கூறுகின்ற யதார்த்தங்கள் கசப்பானதாகவே நிச்சயம் இருக்கும்.

இலங்கை மத்திய அரசுகளுடன் புரிந்துணர்வு அடிப்படையில் செயற்படுவதானது தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை காட்டிக் கொடுப்பதாகவோ. அல்லது அதை மறந்து அரசுடன் கலந்து மெய்மறந்து போவதோ அல்ல. அது அரசியல் தேவை உணர்ந்த கடினமான வேலைத்திட்டமாகும்.

தொடர்ந்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா கூறிவருவதும். கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தன் கூறுவதும் ஒன்றுதான். அதற்கு தமிழ் ஊடகங்களும். புத்திஜீவிகள் என்போரும் கொடுத்த அர்த்தங்கள் அல்லது வியாக்கியானங்களே பொருட்பிழைகளை தமிழ் மக்களிடம் ஏற்படுத்தியுள்ளது என்பது இப்போது தெளிவாகின்றது.


வடக்கு மாகாண சபையை தமிழ் மக்களின் பலமான அரசாக கட்டியெழுப்புவதற்கு தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் உண்மையான அர்ப்பணிப்புடன் தமது பங்களிப்பைச் செய்த அனைவரும் கருத்துபேதங்களைக் கடந்து முன்னின்று உழைக்கவேண்டிய தருணம் இதுவாகும்.

வரலாற்று முக்கியமிக்க இக்கால கட்டத்தில் பதவிகளுக்காக முட்டி மோதிக்கொள்வதும். அர்த்தமற்ற அரசியல் காழ்ப்புணர்வுகளை சுமத்துவதையும் தவிர்த்து. வடக்கு மாகாண சபையை பொறுப்பேற்றிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்படவேண்டும்.

தமிழ் மக்கள் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் வழங்கியிருக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆணையானது எழுச்சிமிக்கதொரு புதிய வரலாற்றை படைப்பதற்காகவே பிரயோகிக்கப்படவேண்டும். மாறாக பதவிச்சண்டையால் மக்களின் நோக்கத்தை போட்டுடைப்பதற்கல்ல. புரிந்துகொள்வோம். புதிய பயணம் செல்வோம்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



# காலம் கடந்த மு.கா.வின் ஞானம்!

முஸ்லிம்களின் உரிமைகளையும் அபிலாஷைகளையும் வென்றெடுப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அவசியம் மிகவும் உணரப்பட்டிருக்கின்ற இக்கால கட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் எந்த சக்திக்கும் விட்டுக்கொடுக்காமலும் அஞ்சாமலும் சமூகப்பற்றுடனும் துணிச்சலுடனும் அரசியல் நகர்வுகளை முன்னெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பைச் சுமந்திருக்கின்றது.

இந்த இக்கட்டான கால கட்டத்தில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றோம் என்பதற்காக இதுவிடயத்தில் நாம் வாய்மூடி மௌனிகளாக இருப்போமாயின் மு.கா என்கின்ற சமூக இயக்கம் முஸ்லிம்களுக்கு எந்தவகையிலும் தேவைப்படாத ஒன்றாகவே மாறி விடும் என்பதை மறுக்கமுடியாது.

அந்தவகையில் இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் சிறுபான்மை சமூகங்களுக்குத் தேவையான அதிகாரப்பகிர்வை மேற்கொள்ளக்கூடிய சமூக ரீதியிலான காப்பீடுகளைத் தரவல்லதுமான அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிப்பதற்கு பேரினவாத சக்திகள் குரலெழுப்பிக் கொண்டு திரிகின்றன.

இவற்றை முறியடிக்க எமது கட்சியும் தலைமைத்துவமும் மிகமிக உறுதியான நிலைப்பாட்டை எடுத்துவருகின்றது.

அதுபோன்று ஏனைய முஸ்லிம் தலைமைகளும் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்களும் 13வது திருத்தச் சட்டத்தைப் பாதுகாத்து சிறுபான்மையினரின் உரிமைகளை உறுதிப்படுத்தவேண்டும்.

13ஆவது திருத்தச்சட்டத்தை வலுவிழக்கச் செய்வதற்கான பிரேரணைகள் சில மாகாணசபைகளில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கிழக்கு மாகாணத்திலும் பிரேரணை கொண்டுவரப்பட்டால் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களாகிய நாம் அதனை முற்றாக எதிர்த்து தோற்கடிப்போம். எனினும் அப்பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டாலும் சமர்ப்பிக்கப்படாவிட்டாலும் 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை வலுவிழக்கச் செய்ய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் நோக்கிலும் 13ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரிக்கும் நோக்கிலும் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கிழக்கு மாகாண சபையில் எமது தலைமைத்துவத்தின் வழிகாட்டலில் நான் தனிநபர் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிப்பேன். இவ்வாறு கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவரும் மாகாண சபை உறுப்பினருமாகிய ஏ.எம். ஜெமீல் அவர் கொண்டு வரப்போவதாகத் தெரிவித்த தனிநபர் பிரேரணை பற்றி அதிக எதிர்பார்ப்புக்களையே உருவாக்கியிருந்தார். மு.காவினால் குற்றஞ்சாட்டப்படுகின்ற 13 ஜ வலுவிழக்கச் செய்யும் முயற்சிகள் பற்றிய செய்திகள் நீண்டகாலமாகவே வெளியாகிக் கொண்டிருக்கின்றது.

ஆனால், அரசாங்கத்தில் நீதி அமைச்சராகவும், பங்காளிக் கட்சியாகவும் இருக்கின்ற மு.கா.வும் அதனுடைய தலைமையும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மௌனம் காத்தே வந்திருக்கின்றனர். 13ஐ வலுவிழக்கச் செய்வதற்கான சட்டமூலமென்று பலதரப்புக்களினாலும் குற்றஞ்சாட்டப்பட்ட திவிநெகும சட்டமூலத்தினை கிழக்கு மாகாண சபையில் வெற்றியடையச் செய்த பெருமை மு.கா கட்சிக்கே இருக்கின்றது. இவ்வாறு பல சந்தர்ப்பங்களிலும் முஸ்லிம் கட்சிகள் மௌனமாக இருந்ததன் விளைவே முஸ்லீம் மக்களுக்கு எதிரான பேரினவாத சக்திகளின் செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்தது என்ற குற்றச்சாட்டு முஸ்லீம் மக்களினாலேயே முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில், தமக்கு எதிராக கிளம்புகின்ற அதிருப்திகளை தணிப்பதற்கான ஓர் முயற்சியாகவே மு.கா வினுடைய குறித்த தீர்மானம் கிழக்கு மாகாண சபையில் கொண்டுவரப்பட்டுள்ளதாக அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர். எப்படியாயினும் இது, முஸ்லீம் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில், ஓர் காலம் கடந்த ஞானமாகவே அரசியல் விமர்சகர்களால் பார்க்கப்படுகின்றது.

இதேவேளை 13 ஐத் திருத்துவதற்கு எதிராக கிழக்கு மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிக்கும் என்று தம்பாட்டுக்கு அவர்களும் ஒருபடி மேலே சென்று அறிக்கைகளை வெளியிட்டனர்.

கிழக்கு மாகாண சபையின் ஜுலை மாதத்திற்கான அமர்வு ஜுலை 23 கூடும்போது 13ஆவது அரசியலமைப்புச் சட்டத்தை திருத்தம் செய்யும் நடவடிக்கைக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரேரணை ஒன்றை முன்வைக்கவுள்ளதாக கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர் குழுவின் தலைவருமான சி.தண்டாயுதபாணி அப்போது தெரிவித்திருந்தார்.

தமது இந்தப் பிரேரணைக்கு மு.கா. உறுப்பினர்களும் இணைந்து வாக்களிப்பார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார். எனினும் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எந்த விதமான பிரேரணைகளையும் கொண்டுவரவில்லை.

13ஆவது திருத்தச் சட்டமூலத்தை இல்லாதொழிக்கும் விடயம் சிறுபான்மையினரின் நலன்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாலேயே தாம் எதிர்ப்பைக் காட்டுவதாகவே இந்த இருசாராரும் வாதிடுகின்றனர்.

தாம் கொண்டுவரும் பிரேரணைக்கு ஐ.தே.க மற்றும் த.தே.கூ ஆகியவை இணைந்து ஆதரவைத் தெரிவிப்பதன்மூலம் தமது பிரேரணை அமோக ஆதரவினால் வெற்றியீட்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஹஸனலி அப்போது பெரும் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

கடந்த அமர்வின்போது அவசர பிரேரணையாகவும் இம்மாத அமர்வுக்காக கடந்த இருவாரங்களுக்கு முன்னதாகவே சாதாரண பிரேரணையாகவும் தான் சமர்ப்பித்ததாகவும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல் அப்போது சுட்டிக் காட்டியிருந்தார்.

தான் சமர்ப்பித்த பிரேரணை நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளப்படாமல் விடப்பட்டமைக்கு அவர் ஆட்சேபனை தெரிவித்ததுடன் கட்டாயம் விவாதத்திற்கு எடுத்தாகவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

எனினும், நேரமின்மை காரணமாகவே இந்த விடயத்தை ஆளும் கட்சிக் கூட்டத்தில் ஆராய்வது எனத் தீர்மானித்ததாக கிழக்கு மாகாண சபைத் தவிசாளரினால் அப்போது கூறப்பட்டது.

அதன்படி பின்னர் இடம்பெற்ற ஆளுங்கட்சிக் கூட்டத்தில் ஏ.எம். ஜெமீல் காரசாரமான கருத்துக்களை முன்வைத்து பிரேரணையை விவாதத்திற்கு எடுக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

தன்னால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை விவாதத்திற்கு எடுக்குமாறு மு.கா குழுத்தலைவர் ஏ.எம்.ஜெமீல் கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது வேண்டுகோள் விடுத்தார்.

இதன்போது கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்த முஸ்லிம் காங்கிரஸின் ஏனைய உறுப்பினர்கள் ஐவரும் ஜெமீலுக்கு ஆதரவாக குரல்கொடுத்தனர்.

13ஆவது திருத்தம் தொடர்பாக ஆராய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பதால் நமது சபையில் இதனை அவசரமாக விவாதத்திற்கு எடுக்கவேண்டிய தேவை இல்லை என கிழக்கு மாகாண சபைத் தவிசாளர் ஆரியவதி கலப்பதி பதிலளித்தார்.

எனினும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் இதற்கு இணங்காமல் தொடர்ந்தும் கருத்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருந்தபோது சபை அமர்வை மீண்டும் ஆரம்பிக்கவேண்டியுள்ளது எனத் தெரிவித்து தவிசாளர் கூட்டத்தை மீண்டும் முடிவுக்குக் கொண்டுவந்தார்.

இதனைத் தொடர்ந்து சபை அமர்வு மீண்டும் ஆரம்பமானபோது ஒழுங்கு பிரச்சினையை எழுப்பிய முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவர் ஏ.எம்.ஜெமீல், 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான பிரேரணையை ஏன் சேர்த்துக் கொள்ளவில்லை எனக் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த ஆரியவதி, இது செப்டம்பர் 24ஆம் திகதி உள்ள அந்த மாதத்திற்குரிய அமர்வில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவித்திருந்தார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை வலுவிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை எதிர்த்து 13ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரிக்கும் பிரேரணை தொடர்பில் மாகாண சபையின் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

அதன்பின்னர் 13ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் விஷேட அமர்வின்போது விவாதிக்க கிழக்கு மாகாண சபையின் கட்சித் தலைவர்கள் இணக்கம் கண்டனர்.

இதனை விவாதிப்பதற்கு அதிகநேரம் தேவை என்பதால் இதனை ஒரு விஷேட அமர்வின் போது விவாதிப்பது என தீர்மானிக்கப்பட்டது என்று ஜெமீல் கூறியிருந்தார்.

13ஆவது திருத்தச் சட்டத்தை அரசியல் அமைப்பிலிருந்து நீக்கி விடுவதற்கோ அல்லது அதன் அதிகார வலுவை இழக்கச் செய்வதற்கோ முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் இணங்கமாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவையெல்லாம் கடந்த ஜுலை மாதம் நடந்த விடயங்கள்.

குறிப்பிட்டபடி செப்டம்பர் 24 அன்று கிழக்கு மாகாண சபையில் விவாதம் இடம்பெற்றது.

பல போராட்டங்களுக்கு மத்தியில் கொண்டுவரப்பட்ட ஜெமீலின் 13ஆவது திருத்தச் சட்டத்தை பலப்படுத்துவதற்கு ஆதரவான பிரேரணை கிழக்கு மாகாண சபையில் 15 மேலதிக வாக்குகளினால் அன்றையதினம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தனிநபர் பிரேரணையை அவர் ஜுலை மாதம் 23ஆம் திகதி சமர்ப்பித்து வாக்கெடுப்பு நடத்துமாறும் கோரிநின்றார்.

வாக்கெடுப்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர் பிரியந்த பத்திரன எதிராக வாக்களித்த அதே சமயம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மாகாண அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவும், துரையப்பா நவரெட்னராஜாவும் ஆதரவாக வாக்களித்தனர்.

இதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களும் சேர்ந்து பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர் ஆதரவாக வாக்களித்த அதே வேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரன், கிருஷ்ணபிள்ளை துரைராஜசிங்கம், மற்றும் திருகோணமலையைச் சேர்ந்தகுமாரசாமி நாகேஸ்வரன் ஆகியோர் விவாதத்திலும் வாக்கெடுப்பிலும் கலந்துகொள்ளவே இல்லை என்பது கசப்பான செய்தி.

இதனைத் தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் தமிழ் ஊடகங்களும் இருட்டடிப்புச் செய்துவிட்டன என்பதும் யாவரும் அறிந்த பரமரகசியம்.

மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் வேண்டும் என்று முதலமைச்சராக இருக்கும்போது உரக்கக் குரல் கொடுத்துவந்த சிவனேசதுரை சந்திரகாந்தனும் இந்தப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது சபையில் இருக்கவில்லை.

அதேவேளை எந்நேரமும் சிறுபான்மை முஸ்லிம்களின் நலன் பற்றிப் பிரஸ்தாபிக்கும் றிசாத் பதியுதீன் தலைமையிலான கட்சியின் மாகாண சபை உறுப்பினர்களும், அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான கட்சியின் மாகாண சபை உறுப்பினர்களும் இந்தப் பிரேரணை வாக்களிக்கும்போது சமூகமளித்திருக்கவில்லை.

ஒற்றுமைப்பட்ட சிறுபான்மை இனங்களைக் கண்டு கொள்வதற்கு இன்னமும் அதிக காலமெடுக்கத்தான் செய்யும்.

அந்தக் கனவை உடனடியாக அடைந்துகொள்வதற்கு தற்போது உள்ள சிறுபான்மை இன அரசியல்வாதிகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு தடையாகவே இருப்பர்.

**ஏ.எச்.ஏ.ஹுஸைன்**

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# நீங்கேனம்மா — இயக்கமானீங்க



உங்கடை அக்காக்கள் போல எங்கடை அண்ணாக்கள் பொல்லாதவங்களில்லை.... அப்ப எனக்கு அடிவிழாதுதான்.... இல்ல... நானிருக்கிறன்.... என்றவனில் நம்பிக்கை வைத்து அவனைக் கனவுகளில் ஏற்றிக் கொண்டாள்.

அவளது விருப்பத்தை அறிந்து கொண்டவன் மேலிடத்திற்குத் தனது விருப்பையறிவித்தான். இவளது பொறுப் பாளருக்கு விடயம் அறிவிக்கப்பட்டு இவள் பொறுப்பாளர் அக்காவின் முன் அழைக் கப்பட்டாள்.

காதலோ? ஓமக்கா...? அவர்தான் கடிதம்... சொல்லிமுடிக்க முதல் வாயைப் பொத்திவிழுந்த அடியில் மீதிச்சொற்கள் வரவேயில்லை. காதலுக்கான தண்டனைகள் ஏற்கனவே அறிந்திருந்தும் அந்த நிமிடம் வரை அதன்வலியை அவள் உணரவே இல்லை.

காதலுக்காக 10 பச்சைப்பனம் மட்டைகள் முறியும்வரை பொறுப்பாளர் அக்கா அடித்த அடிக்காயம் ஆறமுதல் காதலித்த குற்றத் திற்காக களமுனைக்கு அனுப்பப்பட்டாள். அவள் களத்திற்குச் செல்லப்பின்னடிக்காமல் தானாகவே போகிறேன் எனப் போனாள். களமுனை போன 4வது நாளில் காலொன்றில் காயமடைந்து பதுங்கு குழி வாசலில் விழுந்து கிடந்தது மட்டுமே ஞாபகம். பின்னர் கண்விழித்தபோது மருத்துவ மனையில் இருந்தாள்.

ஒரு வெள்ளிக்கிழமை அவளுக்கு காதல் சொல்லி பச்சைமட்டையடி வாங்க வைத்தவன் வந்திருந்தான். விழுந்த பச்சை மட்டையடிதான் நினைவுக்குவந்தது. வாங்கிய அடிகூட அவனைக்கண்ட போது வலிக்க வில்லைப் போல சிரித்தாள்.

ஐயோ திரும்பியும் 10 பச்சைமட்டை அடி வாங்க என்னாலை ஏலாது... இடத்தைக் காலிபண்ணுங்கோ. பனம்மட்டையைக் கண்டாலே காய்ச்சல்வரும் போலையிருக்கு... இனி இப்பிடியெல்லாம் நடக்காது. ஆனா ஒரு சின்ன மாற்றம்... என இழுத்தான்.

என்ன...? உங்களுக்கு அரசியல் வகுப் பெடுத்த ஆளைத் தெரியுமா? ஓம் புகழண்ணா... ம்... அவன் உங்களைக் கனநாளா விரும்பியிருக்கிறான்... நான் அவனுக்கு உங்களை விட்டுக்குடுக்கிறன்.... அவனைக் கலியாணம் செய்யுங்கோ.... நல்ல பெடியன்....என இன்னொருவனுக்கு சான்றிதழ் வழங்கிச் சிரித்தான்.

என்ன நான் சின்னப்பிள்ளையெண்டோடனும் ஆளாளுக்கு விளையாடுறீங்களா? உண்மை யிலேயே கோபித்தாள். நான் உங்களைத் தான் விரும்பினான்... புகழண்ணாட்டை போய்ச் சொல்லுங்கோ... எனச் சினந்தாள். அவன் சொல்ல முயற்சித்த சமாதானம் எல்லாவற்றையும் மறுத்து முகத்தை மூடிக்கொண்டு படுத்தாள்.

என்னடா இது... வில்லங்கத்துக்கு காத லெண்டாங்கள்... பிறகு இன்னொருத்தனுக் காக விட்டுக் குடுக்கிறதெண்டு... சிலவேளை அவன் விளையாட்டாகத்தான் தன்னைக் காதலித்தானோ என நினைத்தாள். கொஞ்சம் குழப்பமாகவும் இருந்தது.

அன்றைய பின்னேரமே புகழ் வந்திருந் தான். புகழோடு அவள் காதலித்து காதலித் ததற்காக பச்சைமட்டயைடி வாங்க காரண மாயிருந்த பயிற்சியாசிரியனும் அவளது பொறுப்பாளரும் வந்திருந்தார்கள். புகழை அவள் திருமணம்செய்வதே பொருத்த மென தீர்ப்பு இறுதி முடிவாகியது.

நான் மாட்டன் என்னாலை ஏலாது.... மறுத்தாள். இறுதி முயற்சியாக புகழ் அவளோடு தனியே கதைக்க வழிவிட்டு இருவரும் ஒதுங்கினார்கள். போதகர்களின் ஓதல் போல புகழின் பேச்சு... அவள் மீதான தனது காதலை வெளிப்படுத்த அவன் எடுத்த முயற்சிகள் பற்றியெல்லாம் புகழ் கதைகளாய் சொன்னான். ஆனால் அவளது முடிவு புகழ் வேண்டாமென்ற தாகவே அமைந்தது.

அவள் நேசித்தவன், அவள்ளை ஒரு- தரம் சந்தித்தபோது சொன்னான்.

புகழைநீங்க கட்டாட்டி நானும் கட்டமாட்டன்....!

அப்ப நீங்கள் முடிவெடுத்திட்டீங்களா? ஓம்.... புகழ் பாவம்.... அவனும் நானும் பயிற்சியெடுத்தது இயக்கத்துக்கு வந்தது எல்லாம் ஒண்டாத்தான்.... அவனுக்காக இல்லாட்டியும் எனக்காக ஓமெண்டு சொல்லுங்கோ.... கடைசி முயற்சியாக இப்படித்தான் சொல்லிவிட்டுப் போனவன் பிறகு அவளைச் சந்திக்கவில்லை.

சிலமாதங்கள் இடைவெளி முடிந்து காயம் மாறி திரும்பியும் சண்டைக்குப் போகப்போவதாக அடம்பிடித்து பொறுப் பாளரின் முன்போய் நின்றாள். அவளைச் சந்திப்பதற்கான காரணங்களை ஏற்படுத்திக் கொண்டு அவளது இடத்திற்கு புகழ் போய்வரத் தொடங்கினாள். களமுனைக்கு செல்லவும் அனுமதி மறுக்கப்பட்டு அரசி யல் பணிக்கு அனுப்பப்பட்டாள்.

மெல்லெனப்பாயும் நதியாய் புகழ் கல்லாயிருந்த அவளைக் கரையச் செய்தான். ஒருவருட முடிவில் புகழுக்கும் அவளுக்கும் திருமணம் நிகழ்ந்தது. திருமணத்திற்கு அவள் நேசித்தவனும் வந்திருந்தான். எதுவும் நடக்காதமாதிரியே அவனது கதைகள் இருந்தது. அவனைக் கண்டதும் நெஞ்சுக் குள் ஒரு வலி அவளைத் தாக்கிச் சென்றது பொய்யில்லை. எனக்குக் கலியாணம் பேசவேணும் ரெண்டு பேரும்தான்.... புதிய குண்டொன்றை இருவருக்கும் போட்டுவிட்டுப் போனான் அவள் முதல் நேசிப்புக்கு உரியவன்.

(தொடரும்...)



# புலிகளின் வதை முகாமில்

## வதை 82

## மணியம்

அத்துடன் தான் இயக்கத்தில் அரசியல் வகுப்புகள் எடுப்பது உட் பட பல முக்கியமான பொறுப்புகளில் இருப் பதால், தன்னை அங் குள்ள சாதாரண புலனாய் வாளர்கள் மட்டுமின்றி, அங்குள்ள பொறுப்பாளர் காந்தி கூட விசாரிக்க முடியாது என்றும் சொன்னார். பெரும் பாலும் புலிகளின் பிரதித் தலைவர் மாத்தையாதான் தன்னை விசாரிக்க வருவார் என்றும் சொன்னார்.

அத்துடன்தான் இங்கு வரும்வேளையில் புலிகள் மாணவர்களுக்காக நடாத்தும் 'சாளரம்' என்னும் மாத சஞ்சிகை யின் பொறுப்பாளராக இருந்த தாகவும், அதில் முன்பு எமது கட்சியில் இருந்தவரும், என்னு டன் சுன்னாகம் ஸ்கந்தவரோ தயாக் கல்லூரியில் கல்வி பயின்றவருமான அ.கௌரி காந்தனும் முக்கிய பொறுப்பு வகிப்பதாகவும் சொன்னார். அதுமாத்திரமின்றி நான் கைது செய்யப்பட்டபின்னர், எனது மனைவி கைக்குழந்தையான எனது மகளுடன் எனது விடுத லைக்கு உதவி செய்யும்படி கோரி 'சாளரம்' காரியாலயத் துக்கு கௌரிகாந்தனைச் சந்திக்க வந்ததாகவும் சொன்னார்.

இந்த இடத்தில் ஒன்று சொல்ல வேண்டும் நான் புலிகளால் கைதுசெய்யப்பட்ட பின்பு உடைந்து போன எனது மனைவி, கண் ணீரும் கம்பலையுமாக எமது கைக்குழந்தையான மகளுடன் இயக்கத்தில் முக்கிய பொறுப்பு களில் இருந்த, எமக்கு உதவி செய்யக்கூடியவர்கள் என்று கருதிய பலரிடம் சென்று எனது விடுதலைக்கு உதவும்படி வேண் டியிருக்கிறார். (ஒரு சோதிடரின் ஆலோசனைப்படி, எனது விடு தலைக்காக ஒரு இலட்சம் தட வைகள் 'ஸ்ரீராம ஜெயம்' என்ற சொல்லையும் எனது மனைவி எழுதிப் பார்த்திருக்கிறார்!)

அவ்வாறு எனது மனைவி யால் அணுகப்பட்டவர்களில் ஒருவர் புலிகளின் அப்போதைய அரசியல் பொறுப்பாளர் மூர்த்தி. (பிற்காலத்தில் புலிகளின் அரசி யல் பொறுப்பாளராக இருந்த தமிழ்ச்செல்வனின் கூடப்பிறந்த அண்ணன்) மூர்த்தி முன்பு எமது கட்சியில் (பின்னர் அவர், அ.கௌரிகாந்தன் போன்றோர் காமினி யாப்பா தலைமையிலான கீழைக்காற்று இயக்கத்திலும் இணைந்து வேலை செய்தனர்) இருந்தவர் என்றபடியால், அவர் ஏதாவது உதவி செய்யக்கூடும் என்றரீதியில் அவரை எனது மனைவி அணுகினார். நான் ஏதோ குற்றம் செய்தபடியால் தான் கைதுசெய்யப்பட்டுள்ளேன் என்றும், அதனால் தன்னால் இதில் எதுவும் செய்யமுடியாது என்றும் மூர்த்தி கையை விரித்துவிட்டார்.

எனது மனைவி அணுகிய அடுத்தவரும் முன்பு எமது கட்சி யில் இருந்தவர்தான். அவர் வேறு யாருமல்ல, புலிகளின் ஆஸ்தானக் கவிஞராகவும், கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பா ளராகவும் இருந்த (இறுதியுத்த நேரத்தில் இராணுவத்திடம் சரணடைந்ததாகக் கூறப்படும்) புதுவை இரத்தினதுரை. அவர் எனது மனைவிக்குச் சொன்ன பதிலோ, மூர்த்தி சொன்ன பதிலைவிட மோசமானது!

### இடதுசாரிகளைப் புலிகள் வைத்திருந்த இடம்

வேறு இன்னும் சிலரிடமும் எனது விடுதலை சம்பந்தமாக எனது மனைவி சென்று உதவி கோரினார். அவர்களில் ஒருவர் அ.கௌரிகாந்தன் (காந்தன்). அவரும் நான் சுன்னாகம் ஸ்கந்த வரோதயாக் கல்லூரி யில் கல்விகற்ற காலத்தில் அங்கு கல்விகற்றதுடன், என்னை யும் நா.யோகேந்திர நாதனையும் (அவரும் அங்குதான் கல்வி கற்றார்) போல, படிப்பை இடையில் துறந்துவிட்டு புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியில் முழுநேர ஊழியராகச் சேர்ந்தவர்தான்.

நாங்கள் மூவருமே 1966 ஜனவரி முதல் முழுநேர ஊழியர் களாகச் செயற்படத் தொடங்கி னோம். நான் கிளிநொச்சிப் பிரதேசத்தைத் தேர்ந்தெடுத்தேன். எனது சொந்த ஊரான முகாவில் (இயக்கச்சி) கிளிநொச்சிப் பிரதேசத்தில் அடங்கியிருந்ததே அதற்கான காரணம். யோகேந்திரநாதன் ஒரு வருடம் சுன்னாகத்தில் கட்சிக் காரியாலயம் எடுத்து அங்கு செயல்பட்டுவிட்டுப் பின்னர் கிளிநொச்சிப் பகுதிக்கு வந்து சேர்ந்தார். கௌரிகாந்தன் வவுனி யா பிரதேசத்தைத் தேர்ந்தெடுத் தார். அதற்குக் காரணம் வவுனியா பூவரசங்குளத்தைச் சேர்ந்த வி.பரம் சோதி என்ற ஒரு தோழர் எம்முடன் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கல்விக்கற்றதனால், அவருடைய தொடர்பைப் பயன்படுத்தி கௌரி காந்தன் வவுனியாவைத் தேர்ந் தெடுத்தார்.

ஆனால் 1971ல் ஜே.வி.பியின் முதலாவது கிளர்ச்சி ஏற்படுவதற்கு முன்னரே, அதாவது 1969 வாக் கில் கௌரிகாந்தன் தோழர் காமினி யாப்பா (விமல் ரணசிங்க) அமைத்திருந்த கீழைக்காற்று இயக்கத்தில் சேர்ந்து வேலை செய்ய ஆரம்பித்திருந்தார். இந்த காமினி யாப்பா என்பவர் எமது கட்சியின் மத்திய குழு உறுப்பின ராகவும், கண்டி மாவட்டச் செயலா ளராகவும் இருந்தவர். சிறிது காலம் கட்சியின் 'கம்கறுவா' என்னும் சிங்களப் பத்திரிகைக்கு காமினி யாப்பா ஆசிரியராகவும் இருந்தவர். அக்காலகட்டத்தில் கட்சியின் வேலை முறைகள் குறித்தும், கட்சிப் பொதுச் செயலாளர் நா.சண்முகதாசனின் நடைமுறை கள் குறித்தும் விமர்சனங்களை முன்வைத்ததால், சண்முக தாசன் குழுவினரால் காமினி யாப்பா கட்சியிலிருந்து வெளியேற் றப்பட்டார். அதன்பின்னர் அவரும், கட்சியிலிருந்து வெளியேற்றப் பட்ட இன்னொருவரான ஹிங் குரான்கற்றவைச் சேர்ந்த தோழர் விமல் விஜயக்கூன் என்பவரும் சேர்ந்து கீழைக்காற்று இயக்கம் என்ற அமைப்பை உருவாக்கி வேலைசெய்யத் தொடங்கினர்.

ஆனால் கௌரிகாந்தன் அவர்களுடனும் நீடித்து இருக்க வில்லை. அந்த இயக்கத்தின் அதிதீவிர இடதுசாரிப் போக்கு களால் அவ்வியக்கம் அடக்கு முறைக்குள்ளாகி, பல நெருக்கடி களைச் சந்தித்து ஸ்தம்பித நிலையை அடைந்த காலகட்டத் தில், தேசிய இனப்பிரச்சினை கூர்மையடைந்து, தமிழ் இளைஞர்களின் சட்டவிரோதப் போராட்டங்கள் எழுச்சியடைந்து கொண்டிருந்தன. எனவே கௌரிகாந்தன் கீழைக்காற்று இயக்கத்திலிருந்து வெளியேறி புளொட் இயக்கத்தில் இணைந்து 'சுப்பையா மாஸ்டர்' என்ற பெயருடன் வேலை செய்யத் தொடங்கினார்.

அந்த இயக்கத்தில் ஒரு கட்டத்தில் டி.சிவராமும், கௌரிகாந்தனும் அந்த இயக்கத்தின் தத்துவ ஆசிரியர் கள் போலச் செயற்பட்டார்கள். அசோக் (யோகன் கண்ண முத்து) தளத்தில் முக்கியமான வராக இருந்த காலத்தில் நடைபெற்ற தள மாநாட்டின் போது, டி.சிவராம், அ.கௌரி காந்தன், வ.ஐ.ச.ஜெயபாலன் ஆகியோர் தமிழ்நாட்டிலிருந்து வந்து பிரமுகர்களாக ஓடித் திரிந்ததைப் பலர் அறிவர்.

இருந்தும் கௌரிகாந்தன் புளொட்டிலும் அதிக காலம் நீடிக்கவில்லை.

(தொடரும்...)



# நிலமெல்லாம் இரத்தம் 71

பா.ராகவன்

அதுதான் யூதர்கள். அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள். அப்படி மட்டுமே அவர்களால் இருக்கமுடியும். வேறு எந்தவகையிலும் சிந்தித்துப் பார்க்கக்கூட அவர்களால் முடியாது! தனிநாடு என்றால் பாலஸ்தீன் மட்டுமே. அது ஒன்றைத்தான் அவர்கள் தங்கள் சொந்தமண்ணாக நினைத்துப் பார்ப்பார்கள். தமக்கான தனிநாடு விஷயமாக ஒரு யுத்தம் செய்ய நேருமானால்கூட அராபியர்களுடன் யுத்தம் செய்யத்தயாராக இருப்பார்களே தவிர, ஐரோப்பாவிலோ, அமெரிக்காவிலோ மாட்டார்கள்.

இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று பொதுவான காரணம். பாலஸ்தீன் யூதர்களுக்குச் சொந்தபூமி என்பது. இரண்டாவது, முஸ்லிம்கள்மீது அவர்களுக்கு இருந்த வெறுப்பும் விரோதமும். இஸ்லாத்தின் வளர்ச்சி என்பது யூதர்களுக்கு எத்தனை கோபத்தையும் வெறுப்பையும் விளைவித்தது என்பதை வெறும் வார்த்தைகளால் சொல்லிவிடமுடியாது. என்ன செய்தும் கட்டுப்படுத்த முடியாததொரு சக்தியாக ஒட்டுமொத்த மத்திய ஆசியாவையும் இஸ்லாம் ஆளத்தொடங்கியதை யூதர்களால் ஜீரணிக்கவே முடியவில்லை. அதனால்தான் எத்தனை முறை முஸ்லிம்கள் நேசக்கரம் நீட்டியும் அவர்களால் எதிர்க்கரம் கொடுக்கமுடியாமலேயே இருந்தது.

தங்களை இனத்தோடு கொல்லும் கிறிஸ்தவர்களை மன்னித்தாலும் மன்னிப்பார்களே தவிர, முஸ்லிம்களோடு சமரசம் செய்துகொள்ளவே முடியாது என்கிற யூதர்களின் நிலைப்பாடு, ஒரு பார்வையில் சிரிப்பை வரவழைக்கும். இன்னொரு பார்வையில் வெறுப்பைத்தான் வரவழைக்கும்.

ஜியோனிஸம் பற்றிய மிகச்சுருக்கமான அறிமுகத்தைச் சென்ற அத்தியாயத்தில் பார்த்தோம். விரிவாகப் பார்க்கவேண்டிய தருணம் இது. ஏனெனில் இந்த இயக்கத்தின் எழுச்சிதான் இன்றைய இஸ்ரேல் என்கிற தேசத்தைப் பிறகு தோற்றுவித்தது. இந்த இயக்கத்தின் உறுப்பினர்கள் சிந்தியவியர்வையும் இரத்தமும்தான் காலகாலமாக சொந்த தேசம் என்று ஏதுமில்லாமல் நாடோடிகள் போல் அலைந்து திரிந்துகொண்டிருந்த யூதர்களுக்கு அப்படியொரு கனவை நனவாக்கித்தர அடித்தளமிட்டது.

முதலில் ஜியோனிஸம் இப்படியெல்லாம் வளர்ந்து, உயர்ந்து பெருகும் என்று யாரும் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. அதைத் தோற்றுவித்தவரான தியோடர் ஹெரஸில் கூட ஏதாவது செய்யமுடியுமா, பார்க்கலாமே என்றுதான் முதலில் நினைத்தார். திட்டவட்டமான யோசனைகள் எதுவும் முதலில் கைவசம் இல்லை. ஆனால் மிகக் குறுகிய காலத்திலேயே ஹெரஸிலுக்கு, தம்மைப் போலவே சிந்திக்கும் வேறு பல யூதர்களும் பல்வேறு தேசங்களில் இருக்கிறார்கள் என்கிற விவரம் தெரிந்துவிட்டது. அதன்பின் அவர்களை ஒருங்கிணைப்பதோ, செயற்திட்டங்களை வகுப்பதோ பெரிய காரியமாக இல்லை.

ஹெரஸிக்கு என்ன பிரச்சினை என்றால், அன்றைய ஜெர்மனியில் இருந்த யூதர்கள் யாரும் தம்மை யூதர் என்று சொல்லிக்கொள்ள முடியாமல் இருந்தது. அதாவது அடையாளத்தை மறைத்து மட்டுமே வாழமுடியும். இதே நிலைமைதான் ரஷ்யாவிலும் இருந்தது.

யூதர்களின் பெருமை என்னவென்றால், தாங்கள் ஒரு யூதர் என்று நெஞ்சு நிமிர்த்திச் சொல்லிக்கொள்வது. அதுதான், அந்த ஒன்றுதான் அவர்களை உயிர்வாழவே வைத்துக் கொண்டிருந்தது. அதுகூடச் சாத்தியமில்லாமல் இதென்ன நாய்ப்பிழைப்பு என்று ஜெர்மானிய யூதர்கள் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இதற்கு ஏதாவது செய்யமுடியாதா என்றுதான் ஹெரஸில் ஆரம்பித்தார்.

ஏதாவது செய்யமுடியாதா என்கிற எண்ணம் தோன்றிய உடனேயே அவர் இறங்கிய வழி மிக முக்கியமானது. நேராக அன்றைய ஆறு பணக்கார ஜெர்மானிய யூதர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களிடம் போனார். பணக்காரர்கள் என்றால் மிகப்பெரிய பணக்காரர்கள். வட்டித்தொழிலில் கொழித்தவர்கள். அவர்களிடம் சென்று, "யூதர்களுக்கென்று தனியொரு தேசம் வேண்டும். இப்படியே காலமெல்லாம் நாம் சிரமப்பட்டுக் கொண்டிருக்க முடியாது. யாராவது இதற்கான முதல் கல்லை எடுத்துவைத்தே ஆகவேண்டும். நான் அதற்காக இறங்கியிருக்கிறேன். நீங்கள் எனக்கு உதவிசெய்ய முடியுமா?" என்று கேட்டார்.

அந்த ஆறு பணக்கார யூதர்களுக்கும் முதலில் ஒன்றும் புரியவில்லை. குழப்பமாக அவரைப் பார்த்தார்கள்.

ஹெரஸில் பொறுமையாக அவர்களிடம் விளக்கினார். யூதர்களுக்கு ஒரு தனிநாடுவேண்டும். எங்கே, எந்த இடத்தில் என்பதெல்லாம் பிறகு நிதானமாக யோசித்து முடிவு செய்யப்பட வேண்டிய விஷயம்.

ஆனால் முதலில் இந்த எண்ணம் யூதகுலத் தாரிடையே பரவவேண்டும். இதற் காக உழைக்கவேண்டும். நமக்கான தேசத்தை யாரும் நமக்குத் தூக்கிக் கொடுக்கமாட்டார்கள். நாமேதான் உருவாக்கவேண்டும். தேசம் என்றால் என்ன? நிலப்பரப்பு. பெரிய நிலப்பரப்பு. அவ்வளவுதானே? ஒரு வீடு கட்ட வேண்டுமென்றால் நிலம் வாங்க முடிகிறதல்லவா? அதைப்போல் நாம் ஒரு தேசம் கட்டுவதற்கு நிலத்தை வாங்குவோம். அத்தனை யூதர்களும் பணம்போட்டு, நிலம் வாங்குவோம். ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு ஆளுக்குக் கொஞ்சமாக நிலம் வாங்குவோம். மொத்தமாகப் போய் வசிக்க ஆரம்பிப்போம். கொஞ்சம் கொஞ்சமாக அந்தப் பகுதி நம்முடைய தேசமாகிவிடும்.

ஒரு புரட்சிகரத் தமிழ் சினிமா போல் இருக்கிறதா?

இதில் சிரிப்பதற்கு ஒன்றுமில்லை. இதுதான் உண்மை. பின்னால் இதுதான் நடந்ததும்கூட! நம்பமுடியாத இந்த அதிசயத்தை விரிவாகப் பார்க்கலாம்.

ஹெரஸில் பேசிப்பேசி முதலில் அந்த ஆறு பணக்காரர்களைத் தம் திட்டத்துக்குச் சம்மதிக்கவைத்தார். யூத தேசிய உணர்வை முதலில் அவர்களுக்கு ஊட்டினார். அவர்கள் அனைவரும் முதலில் ஹெரஸிலின் வீட்டில் அடிக்கடி இரகசியமாகக் கூடிப் பேச ஆரம்பித்தார்கள். பேசிப் பேசிச் செயற்திட்டங்களை வகுக்கத் தொடங்கினார்கள். அப்படியே உலகெங்கும் வசிக்கும் யூதர்களுக்குத் தங்கள் திட்டத்தைத் தெரியப்படுத்தினார்கள்.

ஓரளவு நம்பிக்கை வளரத் தொடங்கியதும் 'உலக யூதர் காங்கிரஸ்' என்னும் அமைப்பைத் தோற்றுவித்து. அந்த அமைப்பின் முதல் மாநாட்டை ஸ்விட்சர்லாந்தில் நடத்தினார்கள். இது நடந்தது 1896ஆம் வருடம். அதாவது 'ஏதாவது செய்ய வேண்டும்' என்று ஹெரஸில் முதலில் நினைத்ததற்கு மறு வருடம்.

மாநாடு என்றால் பந்தல்போட்டு, பொதுமக்களைக் கூட்டி நடத்தப்பட்ட மாநாடல்ல அது. மிக்வும் இரகசியமாக ஒரு சூதாட்ட விடுதியின் அறையொன்றில் நடந்த சிறு கூட்டம்தான் அது. இந்த மாநாட்டில் கலந்துகொண்டவர்கள் மொத்தமே இருபது இருபத்தைந்து பேர்கள்தான். (வெறும் ஆறுபேர்தான் கலந்துகொண்டார்கள் என்றும் ஒரு கருத்து இருக்கிறது) ஆனால், இங்கேதான் ஹெரஸில் சுமார் நூறு பக்க அளவில் ஒரு திட்டத்தைத் தயாரித்து வாசித்தார்.

The Grand Plan சரித்திர ஆசிரியர்கள் இன்றளவும் புகழும் அந்தத் திட்டம் முழுக்க முழுக்க, யூதர்கள் தனக்கென ஒரு தேசத்தை அமைத்துக் கொள்ளவேண்டிய அவசியத்தை வலியுறுத்திச் சொன்னது. ஹெரஸிலின் திட்டத்தை இவ்வாறு சுருக்கிச் சொல்லலாம்.

(தொடரும்...)




மனித உடல் பௌதிக உடல், நுண் உடல் எனும் இரு பகுதிகளைக் கொண்டது. பௌதிக உடல் - உடம்பு எனப்படுகிறது. நுண் உடல் - ஆழ்மனம் எனப்படுகிறது. நித்திரையில் கனவுவருகிறது. இங்கு கனவுக்கும் பௌதிக உடல் - உடம்புக்கும் எதுவித தொடர்பும் இல்லை. நுண்ணுடலே கனவுக்குக் காரணமாகும்.

ஒருவரின் உடம்பிலிருந்து உயிர் - ஆன்மா பிரிதல் மரணம் எனப்படுகிறது. மரணத்தின் பின்னர் ஆன்மாவுக்கு என்ன நடக்கிறது. ஆன்மா நுண்ணுடலுடன் வெளியேறுகிறது. நுண்ணுடலைக் காணும் சக்தி சாதாரண மனிதனுக்கு இல்லை. ஞானிகள், உண்மைத் துறவிகள் இறந்த ஆன்மாக்களுடன் பேசும் சக்தியுடையவர்கள், விஞ்ஞான பூர்வமாக இந்த உண்மை நிருபணமாகியுள்ளது. நமது சமய நூல்களில் ஆவி உலகம் தொடர்பாக கூறப்பட்டுள்ளவை வெறும் கற்பனையல்ல என்பதை அறிந்து கொள்ளவேண்டும். அண்டவெளி என்றும் ஆகாஷவாணி என்று கூறப்படும் கருத்துக்கள் ஏற்புடைவையே. அண்டவெளியில் இருள் உலகம், ஒளி உலகம் என இரு பகுதியுண்டு.

வாழும் காலத்தில் வாழ்க்கைநெறி தவறி வாழ்வோர், இறப்பின் பின்னர் பிரேத ஜென்மம் ஒன்றைப் பெற்று அலைவார்கள். இந்த பிரேத ஜென்மம் காற்றுருபமானது. பஞ்சமாபாதகங்களைச் செய்தலும், தன் உயிரைத்தானே மாய்த்துக்கொள்ளும் பாதகச் செயலாகிய தற்கொலை செய்துகொள்ப்வர்களும் ஆவியாகப் பிரேத ஜென்மம் அடைந்து அலைவார்கள். இவ்வாறு ஆவியாக மாறிய உயிர், தன் மனைவி மக்களையும் சுற்றத்தாரையும் துன்பப்படுத்தும், வீட்டில் உள்ளவர்கள் தங்களுக்கு என உள்ள வசதிகளை அனுபவிக்க விடாமல் இடையூறுகள் செய்யும். பொருட்களை வீணாக்கி யாருக்கும் பயன்படாமல் செய்யும். வம்சம் விருத்தியாகாமல் செய்து குலத்திற்கு நாசம் விளைவிக்கும். குடும்பத்திலுள்ளவர்களுக்கு நோய் உண்டாக்கச் செய்யும். பிரேத ஜென்மம் அடைந்த உயிர் தன் சுற்றத்தார், நண்பர்களுக்கே தீங்குசெய்யும்.

ஆவிகளால் ஏற்படும் தீங்குகள் பலவாகக் காணப்பட்டபோதும், அவை நல்லவர்களை ஒன்றும் செய்யாது. அறநெறிப்படி வாழும் ஒழுக்கமுடையவர்களை ஆவி அணுகமுடியாது. பல புராணங்களில் சொல்லப்பட்டிருக்கும் கதைகள் இவ்வுண்மையை அடியொட்டி எழுந்த கதைகளே ஆகும். இதனால்தான் தர்மநெறி வாழ்வு பற்றி சமயங்கள் எடுத்துக் கூறிவருகின்றன.

நித்திரையில் கனவு காணும்போது, கறுத்த உடல், பயங்கரமான தோற்றத்தில் வந்து பயமுறுத்துகிறது எனப் பலர் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறோம். வைத்தியசாலையில் சில மனநோயாளர்கள் சிகிச்சையும் பெறுகிறார்கள். இந்த நிலையை பாமர மக்கள், "பேய்பிடித்து" விட்டது எனக்கூறி தம் வழியில் மந்திரதந்திரங்களை நாடிச்சென்று பணத்தை விரயம் செய்கிறார்கள். இத்தகையவர்களை மனநோய் வைத்தியரிடம் அழைத்துச்சென்று சிகிச்சை செய்யவேண்டும்.

பூவுலகில் இருந்த காலத்தில் தீயசெய்கைகளை இடைவிடாது செய்து மனம் வைரமேறி இறந்துபோன தீயோரும் தற்கொலை செய்துகொண்டவரும் நுண்ணுடல்வாசிகளாய் இருள் உலகத்தில் தீயநினைவோடுதான் அலைந்து திரிவர். அப்படிப்பட்டவர்களைத்தாம் இங்குள்ளவர்கள் பேய் என்று சொல்லுகிறார்கள். இந்தப் பாவ நுண்ணுடல் வாசிகளை அழைக்கும் ஆற்றல் மந்திரங்களை கற்ற சிலரிடம் உள்ளது. மேலைநாட்டவர்கள் ஆவியை அழைத்துக் காட்டியுள்ள உண்மைச் சம்பவங்கள் பல உண்டு.

இங்குள்ள மந்திரம்தெரிந்த மாயாவிகள் சிலர் அக்கொடிய பேய்களை அழைத்து அவற்றின் உதவியால் சிலருக்குத் தீங்கு செய்து வருகிறார்கள் என்பது உண்மையே; தீயோர் தமக்குள் உண்டாகும் உறவானது சிலநாளில் அவர்கள் எல்லோருக்குமே பெருந்தீங்கினை விளைவித்து, அவர்களைப் பெருந்துன்பத்தில் ஆழ்த்துவது போலத் தீயபேய்களை வரவழைக்கும் மாயாவிகள் சிலநாளில் அவற்றால் தாமும் அழிந்துபோவதையும் காணமுடிகிறது. தீயோர்களான நுண்ணுடல்வாசிகள் பொல்லாத மாயாவிகள் சிலரின் சொல்லுக்கு இணங்கி தீமைசெய்ய முன்வருவதுபோல, மிக நல்லவர்களான ஒளியுலகில் வாழும் நுண்ணுடல்வாசிகள் பிறர்க்குத் தீங்கு செய்வதற்குச் சிறிதும் உடன்படமாட்டார்கள்.

தீயபேய்கள் மட்டும் மாயாவிகளுக்கு வயப்பட்டு பிறர்க்குத் தீங்கு செய்யும்படியான வலியை எவ்வாறு அடைகின்றனவென்றால், இங்கே தீயவர்களாக இருந்து இறந்துபோனவர்கள் நுண்ணுடலுக்குள் சென்றவுடனே என்ன செய்வது என்றுதெரியாமல், இருள் உலகில் அலைந்துகொண்டிருப்பர். யாருக்கு எது பழக்கமோ அவர்க்கு அதுவே எப்போதும் நினைவிலிருப்பது இயற்கையாதலால், இங்கிருந்த நாட்களில் நினைவு தீயசெய்கையிலேயே பழகியவர்களுக்கு இறந்தபின்னும் நுண்ணுடலில் அத்தீய நினைவுகளும் தீயசெய்கையுமே இடைவிடாது தோன்றிக்கொண்டிருக்கும். அப்படிப்பட்டவர்களுக்கு இவ்வுலகத்திலுள்ள பற்றுச் சிறிதும் நீங்காமையினாலும் இறந்த பிறகும் அவர்கள் நுண்ணுடலோடு இவ்வுலகத்திலுள்ள தீயோர் கூட்டங்களிலும், உயிரோடிருந்த போது ஊண் உணவை வரைதுறையில்லாமல் உண்டு, மதுபானங்களைக் குடித்து வெறிகொண்டு தம்மோடு ஒத்தவர்களுடன் சண்டைபிடித்தும் கொலைவெறிகொண்டு திரிந்தவர்களும், இறந்த பிறகும், இந்த அவா நீங்காமையால் தாம் வாழ்ந்த இடங்களுக்கும் தம் உடல்களைத் தேடியும் அலைவார்கள்.

## இறப்புக்குப்பின் உயிரின் நிலை என்ன?



(தொடரும்)

சொல்லின் செல்வர்
இரா.செல்வவழவேல்

அலசுவது - மதியூகி

# கூட்டமைப்பின் ஆளும் அரசியல்; கடினமான பயணம்

செப்ரெம்பர் 21ஆம் திகதி வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்றது. சட்ட வலிமையற்ற ஆனால், தமிழ் மக்களிடம் கூட்டுக்கட்சியாகக் காட்டப்படுகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும்பான்மை வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தனால் பொதுவேட்பாளராக நிறுத்தப்பட்ட முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார். அதற்கு அடுத்தபடியாக எவரும் எதிர்பார்த்திராத வெற்றியாளராக சுமார் 87 ஆயிரம் விருப்பு வாக்குகளைப் பெற்று அனந்தி எழிலன் வெற்றிபெற்றிருந்தார். மூன்றாவது கூடிய விருப்பு வாக்கான சுமார் 39ஆயிரம் விருப்பு வாக்குகளைப் பெற்று புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் வெற்றிபெற்றார்.

போனஸ் ஆசனங்கள் இரண்டுடன் 38 ஆசனங்களையுடைய வடக்கு மாகாண சபையில் 30ஆசனங்களை கூட்டமைப்பு வெற்றி பெற்றுள்ளது. மாகாண நிர்வாகத்துக்கு ஒரு முதலமைச்சரும், நான்கு அமைச்சர்களும் இருப்பார்கள். முதலமைச்சர் விக்னேஸ்வரன் என்பது முன்கூட்டியே முடிவு செய்யப்பட்டிருந்ததால் அது சர்ச்சைக்குரிய பிரச்சினையாக எழவில்லை.

நான்கு அமைச்சுப் பொறுப்புக்களையும் பகிர்ந்துகொள்வதில் கூட்டமைப்பிலுள்ள கட்சிகளுக்கிடையே பாரிய முரண்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. தேர்தல் முடிவடைந்து இரண்டு வாரங்களுக்கு மேலாகிவிட்டது. வடக்கு மாகாண சபைத் தேர்தலுடன் தேர்தல் நடைபெற்ற வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கான முதலமைச்சர்களும், அமைச்சர்களும் பதவியேற்று அதன் நிர்வாகத்தையும் பொறுப்பெடுத்துவிட்டனர்.

கூட்டமைப்பினரின் அமைச்சுக்களுக்கான போட்டாபோட்டிகள் இப்பத்தி எழுதப்படும் வரை இன்னும் முடிவுக்கு வரவில்லை. கூட்டமைப்பின் முக்கிய தலைவர்களாக கூறிவந்த சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் போன்றோர் வெளிப்படையாகவே தமது அதிருப்திகளை வெளியிட்டுள்ளனர்.

முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய வட மாவட்டங்களிலுள்ள பொது அமைப்புக்களும் தமது மாவட்டங்களுக்கு தலா ஒரு அமைச்சுப் பொறுப்பாவது ஒதுக்கப்பட வேண்டுமென கூட்டமைப்புக்கு அழுத்தம் கொடுத்துவருகின்றது. வடக்கில் தோன்றியிருக்கும் இந்த சர்ச்சையை இணக்கப்பாட்டுடன் விரைவாக முடிவுக்கு கொண்டுவருமாறு கிழக்கிலிருந்தும் கூட்டமைப்புக்கு அழுத்தங்கள் விடுக்கப்பட்டுள்ளன. வடக்கு - கிழக்கைச் சேர்ந்த ஆயர்கள் குழாமும் இவ்விவகாரத்தை சுட்டிக்காட்டி அமைச்சுப் பொறுப்புக்களை பகிர்ந்துகொள்வதில் கூட்டமைப்பைச் சார்ந்தோர் பிராந்திய வேறுபாடுகளையும், சாதிய வேறுபாடுகளையும் கையில் எடுத்துக் கொள்ளவேண்டாம் என்றும் தமிழ் மக்கள் வழங்கியிருக்கும் வெற்றியை கட்சி நலன்களுக்காக பகிர்ந்து கொள்வதில் ஈடுபாடுகாட்டி மக்களை ஏமாற்றவேண்டாம் என்றும் கூட்டமைப்புக்கு புத்திமதி கூறியிருந்தனர்.

முதலமைச்சர் விக்னேஸ்வரனின் நலன் விரும்பிகளாக நம்பப்படுவோர் ஆரம்பித்திருக்கும் தமிழின மேம்பாட்டுப் பேரவை எனும் அமைப்பினரும் தமது துவக்கத்தின் முக்கியத்துவம் பற்றியோ, தமது செயற்பாட்டு நோக்கம் பற்றியோ எதையும் தெளிவுபடுத்தாமல் தமது பேரவையை ஆரம்பித்திருப்பதாகக் கூறும் முதல்நாளிலேயே முதலமைச்சர் விக்னேஸ்வரனை சுயமாக செயற்படவும், சிந்திக்கவும் விடவேண்டும், கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் விக்னேஸ்வரனின் செயற்பாடுகளில் தலையீடுசெய்து அவரது பொறுப்புக்களை தடுக்கக்கூடாது என்றும் கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தர் எந்த முடிவை எடுத்தாலும் அதற்கு கூட்டமைப்பிலுள்ள அனைத்துக் கட்சிகளும் கட்டுப்பட்டு நடந்துகொள்ளவேண்டும். அதைவிடுத்து அவர் எடுக்கும் முடிவுகளை எதிர்ப்பதும் பகிஷ்கரிப்பதும் நல்லதல்ல என்றும் புத்திமதி கூறியிருக்கின்றனர்.

உதாரணத்துக்கு விக்னேஸ்வரனை பொது வேட்பாளராக சம்மந்தன் நியமித்தபோது அதை முதலில் கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் எதிர்த்தன. பின்னர் விக்னேஸ்வரனுக்கு ஆதரவுக் குரல்கள் அதிகரித்ததும் எதிர்ப்புக் குரல்கள் அடங்கிப்போயின. இப்போது விக்னேஸ்வரன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் முதலமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துகொள்வார் என்ற முடிவை சம்மந்தன் அறிவித்துள்ளதை கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் எதிர்க்கின்றன. பதவியேற்பு வைபவத்தில் தாம் கலந்து கொள்ளப்போவதில்லை என்று கூறியிருக்கின்றன என்பதையும் அந்த புத்திமதியில் சுட்டிக்காட்ட பேரவை தவறவில்லை.

வடக்கு மாகாணத்தின் அமைச்சுப் பொறுப்புக்களை பகிர்வது தொடர்பான சர்ச்சையை தமது தலையில் சுமக்க விரும்பாத சாணக்கிய முடிவை சம்மந்தன் எடுத்துள்ளார். அதாவது முதலமைச்சராகவுள்ள விக்னேஸ்வரனே அமைச்சர்களை தெரிவுசெய்வார் என்று கூறியிருக்கின்றார்.

விக்னேஸ்வரனுக்கு அடுத்தபடியாக அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற அனந்திக்கு அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட வேண்டுமென யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரைச் சேர்ந்த பெண்கள் அமைப்புக்கள் மகஜர் ஒன்றை கூட்டமைப்பின் பேச்சாளரான சுரேஸ் பிரேமச்சந்திரனிடம் கையளித்துள்ளதோடு, யுத்தத்துக்குப்பின்னர் கணவனை அல்லது பாதுகாவலரை இழந்து ஆயிரக்கணக்கான பெண்கள் குடும்பச் சுமையை சுமந்து வாழ்கின்றனர். அவர்களின் வலியைப் புரிந்துகொள்ளக் கூடியவராகவும், அந்தப் பெண்களின் வாழ்வாதாரத்துக்கு உணர்வுரீதியாக உழைக்கக் கூடியவராகவும் பெண்கள் அனந்தியை நம்புவதாலேயே அவருக்கு அதிகூடிய வாக்குகளை வழங்கினார்கள். எனவே அவருக்கு அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.


ஆனால் அனந்தி அதிக விருப்பு வாக்குகளை பெற்றிருந்தாலும் அவருக்கு அமைச்சுப் பொறுப்பை வழங்க கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் விரும்பவில்லை. குறிப்பாக சரவணபவன் போன்றவர்கள் அனந்திக்கு அமைச்சுப் பொறுப்பு வழங்கப்படக்கூடாது என்று பிடிவாதமாக இருக்கின்றனர்.

தமிழரசுக்கட்சியினரோ அமைச்சுப் பொறுப்பு வகிப்பதற்கு அனந்திக்கு உண்டான தகுதிகள் என்ன? என்றும் அவர் எழிலனின் மனைவி என்பதைத் தவிர்த்துப் பார்த்தால் அவர் யார்? என்பதையும் விவாதிக்கத் தொடங்கியுள்ளனர். "சும்மா கிடந்த கம்பியை சூலாயுதமாக்கிக் குத்தினோம். அது இப்போது ஆடு கொண்டுவா? கோழி கொண்டுவா? என்று கேட்கின்றது" மூத்த தமிழரசுக்கட்சி உறுப்பினர் ஒருவர் கூறியிருக்கின்றார்.

இதற்கிடையே ரெலோ சார்பில் மன்னார் மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஒருவருக்கு அமைச்சுப் பொறுப்பொன்று வழங்கப்பட வேண்டுமென தாம் கூறியதை நிராகரித்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவாஜிலிங்கத்துக்கு அமைச்சுப் பொறுப்பு வழங்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக வெளியான செய்திகளுக்குப்பிறகு ரெலோ அமைப்பின் தலைவர் பொறுப்பிலிருந்து தாம் விலகிக் கொள்ளவுள்ளதாகவும், தமது முடிவுக்கு மாறான முடிவை கட்சி நிர்வாகம் எடுப்பதாகவும் செல்வம் கூறியிருந்தார்.

உரிய அமைச்சுப் பொறுப்புக்கள் தமக்கு ஒதுக்கப்படாவிட்டால் தாம் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்கப்போவதில்லை என்று கூட்டமைப்பிலுள்ள ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, புளொட் ஆகிய கட்சிகள் பகிரங்கமாகவே தமிழரசுக்கட்சி மீது குற்றம்சுமத்தியுள்ளன. கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற முக்கிய அமைச்சுக்களடங்கிய இரண்டு அமைச்சுக்களை ஏற்கெனவே தமிழரசுக் கட்சியினர் தமக்கு ஒதுக்கிக்கொண்டுள்ளனர் என்றும் இப்போது அமைச்சுப் பொறுப்புக்களை முதலமைச்சர் தீர்மானிப்பார் என்றும் கூறுவது வேடிக்கையானது என்றும் இந்த மூன்று கட்சிகளும் கூறியிருக்கின்றன.

இப்போது யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்டு தற்போது தமிழ் பாராளுமன்றப் பிரதிநிதித்துவமும் இல்லாமல் அநாதரவாக்கப்பட்டிருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஒரு அமைச்சுப் பொறுப்பை ஒதுக்கித் தரவேண்டுமென முல்லைத் தீவிலுள்ள சமூக அமைப்புக்கள் கோரிக்கையை முன்வைத்துள்ளன.



மாகாண சபையை நாம் ஏற்றுக்கொண்டு எமது அரசியல் உரிமைக்கான தீர்வுநோக்கிய போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்றும் மாகாண சபையூடாக கணிசமான பலாபலன்களை எமது மக்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியுமென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் கூறியபோதெல்லாம், அதை எதிர்த்தவர்கள், சலுகை அரசியல் தமிழ் மக்களுக்குத் தேவையில்லை என்றவர்கள், ஆயுதப் போராட்டத்தினூடாக காணப்படும் தீர்வே தமிழ் மக்களுக்கு தேவை என்றவர்கள், மாகாண சபையில் ஒன்றுமில்லை, அது உளுத்துப்போன வெறும்கூடு என்றெல்லாம் கடந்த 25 வருடமாக கூறியவர்கள். இப்போது மாகாண சபையின் கதிரைகளுக்காகவும், அதன் அமைச்சுப் பொறுப்புக்களுக்காகவும் அடிபடுவதுதான் தமிழ்த் தேசியம் என்றாகியுள்ளது.

வடக்கின் ஆளுநருக்கு முன்னாலோ, இலங்கை ஜனாதிபதிக்கு முன்னாலோ தாம் பதவிப்பிரமாணம் செய்து கொள்ளப் போவதில்லை என்றுகூறி, அப்படிச் செய்வது தமிழர்களின் தன்மானத்தை சிங்களத் தலைமையில் காலடியில் போட்டதாகிவிடும் என்றவர்கள் இப்போது ஜனாதிபதிக்கு முன்னால் விக்னேஸ்வரன் முதலமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துகொள்வார் என்று கூறுகின்றனர். அப்படியென்றால் முன்னர் கூறியதுபோல் தமிழ் மக்களின் தன்மானத்தை இலங்கை ஜனாதிபதியின் காலடியில் போட்டு சரணடைந்துவிட்டார்களா? இதுதான் தன்மானமா?

ஜனாதிபதிக்கும் சம்மந்தனுக்கும் நடைபெற்ற பேச்சுக்களில் சம்மந்தனிடம் இரண்டு முக்கிய விடயங்கள் கூறப்பட்டிருக்கலாம். கூட்டமைப்பு தமது விருப்பப்படி வட மாகாண சபையை நடத்தட்டும். இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சரும், நிதி அமைச்சரும் நானே என்றவகையில் என்னைத்தவிர்த்து செயற்படமுடியுமா? அடுத்தது, மத்திய அரசின் இயந்திரமும், வளமும் வடக்கு மாகாணத்துக்கு தேவையிருக்காதா? என்பதையும் 13ஆவது திருத்தச்சட்டத்தில் ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்தை தவிர்த்து செயற்பட முடியுமாக இருந்தால் தாராளமாக நீங்கள் உங்கள் விருப்பத்துக்கு செயற்படலாம். ஒன்றை மட்டும் மறந்துவிடாதீர்கள் மேடைகளில் முழங்குவதற்கும், நடைமுறையில் பிரச்சினைகளை அணுகுவதற்கும் நிறையவே முரண்பாடுகளும் சவால்களும் இருக்கின்றது என்பதை புரிந்துகொள்ளுங்கள் என்று கூறப்பட்டிருக்கலாம்.

இதை அடுத்தே விக்னேஸ்வரன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்றுக் கொள்வார். அதுவும் அலரிமாளிகையில் வைத்தே பதவி ஏற்பார் என்றும் சம்மந்தர் கூறியிருந்தார். இதுதான் தமிழர்கள் தம்மைத் தாமே ஆளும் தன்னாட்சியா?

வீரம் பேசியும், உணர்ச்சியூட்டியும் எதிர்ப்பு அரசியல் நடத்துவது மிகமிக எளிது. பொறுப்புக்கூறலோடும், நடைமுறைச் சாத்தியங்களோடும் ஆளும் அரசியல் நடத்துவது கடினம். இதற்கான ஆரம்பமாகவே விக்னேஸ்வரனின் பதவியேற்பைப் பார்க்கலாம். இல்லாவிட்டால் எந்த ஜனாதிபதிக்கு முன்னால் பதவியேற்கப் போவதில்லை என்று கூட்டமைப்பினர் கூறினார்களோ அதே ஜனாதிபதியிடம் விக்னேஸ்வரனுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்கவேண்டுமெனவும், அதற்கு நேரம் ஒதுக்கித்தருமாறும் சம்மந்தன் கேட்டதை வேறு எவ்வாறு நோக்கலாம்?

விக்னேஸ்வரன் ஜனாதிபதிக்கு முன்னால் சத்தியப் பிரமாணம் செய்வதை ஏற்காதவர்களும், அதை நிராகரித்து அந்த நிகழ்வுக்கு செல்லாதவர்களும் விக்னேஸ்வரனை முதலமைச்சராக ஏற்றுக் கொள்ளமாட்டார்களா?, விக்னேஸ்வரனுக்கு முன்னால் தமது கட்சிசார்ந்தவர்களை பதவிப்பிரமாணம் செய்துகொள்ளாமல் தவிர்ப்பார்களா? இல்லையே தமது தலைவர்கள் தடுத்தாலும் தொண்டர்கள் பதவிகளை தவிர்க்கத் தயாராக இல்லை. இறுக்கிப்பிடித்தால் உடைந்துவிடும் என்பதுதான் அரசியலின் இன்றைய நிலைமை.

ஆயர்கள் குழாமும், தமிழின மேம்பாட்டுப் பேரவையினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விடுத்து விக்னேஸ்வரனை முதன்மைப்படுத்தி இனி காய்களை நகர்த்தத் தயாராகிவிட்டனர். ஏனென்றால் கூட்டமைப்பை பதிவுசெய்யாமல் கட்சிகள் நடத்தும் குடுமிச்சண்டைகளுக்கு தொடர்ந்தும் விளக்குப்பிடிக்க முடியாது என்ற நிலைப்பாடே இப்போது மேல் எழுந்துள்ளது.


கூட்டமைப்புக்கு வழங்கப்பட்ட வாய்ப்பை எவ்வாறு கொண்டு நடத்தப்போகின்றார்கள். என்பதை அவதானிக்கும் தரப்பாக தமிழ் மக்கள் உள்ளனர். இதற்குமேல் தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு வழங்க எந்த ஆணையும் இல்லை. கூட்டமைப்பு இதை துஷ்பிரயோகம் செய்யுமாக இருந்தால் இனிச் சரிவுதான்.

பல்வேறு சர்ச்சைகளுடன் வடக்கு மாகாண சபையை நிர்வகிக்கப்போகும் விக்னேஸ்வரனுக்கு கூட்டமைப்பிலுள்ள ஏனைய கட்சிகள் உளப்பூர்வமான ஒத்துழைப்பை வழங்குமா? என்பது சந்தேகமே. இந்தநிலையில் தனி மனிதனாக கடினமான அரசியல் பயணத்தில் விக்னேஸ்வரன் பயணிக்க வேண்டியிருக்கும்.

தொகுப்பு: வேணு கிருஷ்ணா

# அமெரிக்க பட்ஜெட் சர்ச்சை! அரசதுறை இழக்குமா மூச்சை?

குடியரசு கட்சியினரின் நிபந்தனைக்கு ஒபாமா கட்டுப்பட்டால், அவர்கள் மேலும் கோரிக்கைகளை முன்வைப்பார்கள் என வெள்ளை மாளிகை அதிகாரிகள் கூறு கின்றனர். இதுபற்றி வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜே கேர்னே கூறுகையில், "அரசு நிறுவனங்களை மீண்டும் திறப்பதில் தாங்கள் நினைத்ததை சாதித்துவிட்டால், அவர்கள் அடுத்தகட்டமாக பெரும் பணக்காரர் களுக்கு வரிகள் உயர்த்தப்பட்டிருப்பதை விலக்கிக்கொள்ள வேண்டும்.



**அமெரிக்க** நாடாளுமன்றமானது காங்கிரஸ் என்று அழைக்கப்படுகிறது. இது இரு அவைகள் கொண்டது. அதாவது, செனட் மற்றும் பிரதிநிதிகள் சபை என அழைக்கப்படுகிறது. இதுவே, சட்டங்களை உருவாக்குகிறது, போரை அறிவிக்கிறது, ஒப்பந்தங்களுக்கு ஒப்புதலளிக்கிறது.

கடந்த வருடம் நடைபெற்ற, அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் மீண்டும் பராக் ஒபாமாவே வென்றிருந்த நிலையில் அந்த நாட்டு நாடாளுமன்றத்தின் செனட் சபையிலும் ஜனநாயகக் கட்சியே மீண்டும் வெற்றி பெற்றது. அதேசமயம், பிரதிநிதிகள் சபையை குடியரசுக் கட்சி கைப்பற்றி விட்டது.

சில ஆண்டுகளுக்கு முன்பு நடந்த பிரதிநிதிகள் சபை தேர்தலிலும் ஜனநாயகக் கட்சி தோல்வியடைந்திருந்தது. தற்போது மீண்டும் தோல்வியடைந்துள்ளது. இதன்காரணமாக மீண்டும் நாடாளுமன்றத்தில் ஜனநாயகக் கட்சி முக்கிய சட்டங்களை, சட்டதிருத்தங்களை நிறைவேற்றுவதில் குடியரசுக் கட்சியின் தயவை எதிர்பார்க்கும் நிலை ஏற்பட்டது. பிரதிநிதிகள் சபை தேர்தலில் குடியரசுக் கட்சி இதுவரை 232 இடங்களைப் பெற்றுள்ளது. ஜனநாயகக் கட்சிக்கு 191 இடங்கள் கிடைத்துள்ளன. மொத்த இடங்கள் 423 ஆகும். செனட் சபையில் 100 இடங்களுக்கு நடந்த தேர்தலில் ஜனநாயகக் கட்சி 53 இடங்களையும், குடியரசுக் கட்சி 45 இடங்களையும் கைப்பற்றியுள்ளது. இது சாதாரண பெரும்பான்மை பலம்தான். அறுதிப் பெரும்பான்மை பலத்திற்கு 60 இடங்களாவது தேவை என்பதால் செனட் சபையிலும்கூட ஜனநாயகக்கட்சி தனித்து செயற்படாத நிலையே காணப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## தற்போதைய கொதிநிலை

இந்த நிலையில் பட்ஜெட்டை நிறைவேற்ற முடியாதபடிக்கு மக்களின் ஏகோபித்த ஆதரவைப்பெற்ற 'ஒபாமா கேயர்' என்னும் மருத்துவ காப்பீடு திட்டம் தடைச்சுவராக அமைந்துள்ளது. பெரும் நிதி ஒதுக்கீடு செய்யவேண்டிவரும் என கூறி ஒபாமா கேயர் காப்பீடு திட்டத்தை எதிர்க்கட்சியான குடியரசுக்கட்சி கடுமையாக எதிர்க்கிறது. ஆளும் ஜனநாயகக் கட்சி பெரும்பான்மையாக உள்ள செனட் சபையில் பட்ஜெட் நிறைவேறிவிட்டது. ஆனால் எதிர்க்கட்சியான குடியரசுக்கட்சி பெரும்பான்மையாக இருக்கிற பிரதி நிதிகள் சபையில் நிறைவேற்ற முடிய வில்லை. 'ஒபாமா கேயர்' திட்டத்தை கைவிட்டால் மட்டுமே பட்ஜெட் நிறைவேற ஒத்துழைப்போம் எனக் குடியரசு கட்சி திட்டவட்டமாக அறிவித்தது. ஜனநாயகக்கட்சி இதை ஏற்கவில்லை.

இதன்காரணமாக ஒக்டோபர் -1 என்ற காலக்கெடுவுக்குள் பட்ஜெட்டை நிறைவேற்றமுடியாமல் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அமெரிக்காவில் 17 ஆண்டுகால வரலாற்றில் முதல்முறையாக அரசு நிறுவனங்கள் மூடப்பட்டன. 8 இலட்சம் அரசு ஊழியர்கள் சம்பளம் இல்லாமல் விடுமுறையில் அனுப்பப்பட்டனர். இதனால் ஒபாமா அரசுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

ஆளுங்கட்சியும் சரி, எதிர்க்கட்சியும் சரி தத்தமது நிலையில் இருந்து இறங்கவில்லை. இதன்காரணமாக பல நாட்களாக இன்றும் அமெரிக்க அரசு நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. ஊழியர்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கினர். இருப்பினும் எதிர்க்கட்சியுடன் பேச்சு நடத்த ஒபாமா தயாராக இல்லை.

## எதிர்க்கட்சியே காரணம்

அரசு நிறுவனங்கள் மூடப்பட்ட நிலைக்கு குடியரசு கட்சியே காரணம் என ஒபாமா குற்றஞ்சாட்டி உள்ளார். இதுதொடர்பாக வெள்ளை மாளிகையில் ஒபாமா நிருபர்களிடம் பேசுகையில், "குடியரசு கட்சியினரால் அரசு நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. இதன் முழுமையான தாக்கம் என்ன என்பது சிறிது காலத்துக்கு நமக்கு தெரியாமல் போகலாம்" என்றார்.

## கட்சிக்குள் ஒபாமாவுக்கு நெருக்கடி

சுகாதார திட்ட சட்டம் பற்றி பேச்சு வார்த்தை நடத்த ஒபாமா முன்வராதது குறித்து குடியரசு கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

ஆனால், ஒபாமா இதில் இறங்கி வரக்கூடாது என்று ஆளும் ஜனநாயககட்சி தலைவர்கள் கூறுகின்றனர். சுகாதார காப்பீடு திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதில் அவர்கள் தீவிரமாக உள்ளனர்.

## பணிந்தால் என்ன ஆகும்?

குடியரசு கட்சியினரின் நிபந்தனைக்கு ஒபாமா கட்டுப்பட்டால், அவர்கள் மேலும் கோரிக்கைகளை முன்வைப்பார்கள் என வெள்ளை மாளிகை அதிகாரிகள் கூறுகின்றனர். இதுபற்றி வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜே கேர்னே கூறுகையில், "அரசு நிறுவனங்களை மீண்டும் திறப்பதில் தாங்கள் நினைத்ததை சாதித்துவிட்டால், அவர்கள் அடுத்தகட்டமாக பெரும்பணக்காரர்களுக்கு வரிகள் உயர்த்தப்பட்டிருப்பதை விலக்கிக்கொள்ள வேண்டும் என்பார்கள். இதுதான் அவர்களின் அடுத்த கோரிக்கையாக இருக்கும்" என்றார்.


"தற்போது சில காலம் அரசு நிறுவனங்கள் மூடப்பட்டிருக்கட்டும். அதன்மூலம் பொதுமக்களிடையே எதிர்க்கட்சிமீது கோபம் ஏற்படும். அதன் பிறகு பார்த்துக்கொள்ளலாம்" என ஆளும் கட்சி கருதுவதாகவும் தகவல்கள் கூறுகின்றன. எனவே இப்போதைக்கு நிலைமையில் மாற்றம் இருக்காது. வாரக்கணக்கிலோ, மாதக்கணக்கிலோ கூட தற்போதைய பிரச்சினை நீளலாம்.

## 'டொலர் தேசம்' தத்தளிக்கிறது

உலகத்திலேயே தன்னை ஒரு "பொருளாதார வல்லரசாக" தம்பட்டம் அடித்துக்கொள்ளும் அமெரிக்காவில் புதிய நிதியாண்டிற்கான பட்ஜெட் நிதிப்பற்றாக்குறை காரணத்தால் நிறைவேற்றப்படாமல் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் வைக்கப்பட்ட புதிய நிதியாண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தில் "ஒபாமா கேயர்" என்று அழைக்கப்படும் "தனி நபர் சுகாதார காப்பீட்டு திட்டத்திற்கான" நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு அந்நாட்டின் எதிர்க்கட்சியான குடியரசுக்கட்சி கடும் எதிர்ப்பு தெரிவித்ததால் வரவு - செலவுத் திட்டத்திற்கு ஒப்புதல் கிடைக்காததால் நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. இதனால் அமெரிக்க அரசு இயந்திரமே செயலிழந்து தவிக்கிறது.

அமெரிக்காவின் நிதியாண்டு என்பது ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் 1ஆம் திகதி தொடங்கி செப்டம்பர் 30ஆம் திகதி முடியும். ஒக்டோபர் -1ஆம் ஆண்டு புதிய நிதியாண்டின் தொடக்கமாகும். ஒவ்வொரு ஆண்டும் நிதியாண்டு தொடங்குவதற்கு முன்பே வரும் ஆண்டிற்கு எவ்வளவு "பொதுக்கடனை" வாங்கலாம் என்பதை தீர்மானித்து அதற்கான சட்டத்தை நிறைவேற்றி அதிபருக்கு அனுப்புவது என்பது வழக்கம். அதே போன்று அடுத்த நிதி ஆண்டுக்கு 17.8 டிரில்லியன் (ஒரு டிரில்லியன் = 1 இலட்சம் கோடி) டொலர் அளவுக்கு "பொதுக்கடன் தொகை" உயர்த்தப்பட்டால் மட்டுமே அடுத்த ஆண்டு பட்ஜெட்டை உருவாக்க முடியும் என்ற வழக்கமும் இருந்து வருகிறது. ஆனால், வழக்கப்படி கடன்வாங்கும் அளவை உயர்த்த எதிர்க்கட்சி இம்முறை அனுமதிக்கவில்லை. அதனால் அமெரிக்க அரசாங்கம் மிகப்பெரிய இடியப்பச் சிக்கலில் மாட்டிக்கொண்டது. இதன்காரணமாக அந்நாட்டில் மாபெரும் இழுபறிநிலை நீடித்துவருகிறது. இந்தநிலை என்பது அதிபர் ஒபாமாவிற்கு ஏற்பட்டுள்ள மிகமோசமான பின்னடைவு என்றே சொல்ல வேண்டும். இப்படியாக பொருளாதார பின்னடைவால் "டொலர் தேசம்" தத்தளித்துக் கொண்டிருப்பதை உலக நாடுகள்

தொழில்நுட்பம்



# குழந்தைகளின் எதிர்காலத்திற்கு தொடுதிரைகளின் ஆதிக்கம்!

டச் ஸ்கிரீன் எனப்படும் தொடுதிரையுள்ள ஸ்மார்ட் போன்களும், டேப்ளட்கள் என்று அழைக்கப்படும் தொடுதிரை கையடக்கக் கணினிகளும் சிறு குழந்தைகளின் கற்றலுக்கு நல்லது என்று புதிய ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன. ஆனால் இதை சில விஞ்ஞானிகள் மறுக்கிறார்கள்.

பொதுவாக சிறு குழந்தைகள் மணிக்கணக்கில் தொடுதிரை கணினிகள், கணினிகள், தொலைக்காட்சிகளின் முன்னால் செலவிடுவது தவறு என்றும், இதனால் அவர்களின் மூளையின் கற்றல் திறன் பாதிக்கப்படும் என்றும் விஞ்ஞானிகள் ஏற்கெனவே பரவலாக கவலைகள் வெளியிட்டுவரும் நிலையில், இந்த பிரச்சினை குறித்து விஸ்கான்ஸின் பல்கலைக் கழகம் நடத்திய ஆய்வின் முடிவுகள் இந்த கவலைகள் பெருமளவு தேவையற்றவை என்று கூறியிருக்கிறது.

பொதுவாகவே ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இயற்கையிலேயே தொழில்நுட்பத்தை அறிந்து கொள்வதில் கூடுதல் ஆர்வம் இருக்கிறது. எனவே அந்த வயது குழந்தைகளின் கைகளில் ஒரு புதிய தொழில்நுட்பக் கருவியை கொடுத்தால், பெரியவர்களைவிட இயல்பாக அந்த கருவியை ஆராய்ந்து அதை கையாள்வதில் அவர்கள் பெரும்பாலும் வெற்றி பெறுவார்கள்.

இந்த பின்னணியில் இரண்டு வயது குழந்தைகளிடம், தொடுதிரை கையடக்க கணினிகள் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து ஆய்வுசெய்த விஸ்கான்ஸின் பல்கலைக்கழக ஆய்வாளர்கள், குழந்தைகளின் கற்றலை இந்த தொடுதிரை கணினிகள் ஊக்குவிக்கின்றன என்று தெரிவித்திருக்கிறார்கள்.

குறிப்பாக தொடுதிரை கணினிகளில் இருக்கும் விளையாட்டு அல்லது காணொளியானது இன்டர் அக்டிவ்வாக, அதாவது குழந்தை அதை தொடத்தொட வெவ்வேறு புதிய தகவல்கள், படங்கள், ஒலிகள் அல்லது காணொளிகள்வரும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருந்தால், அது, அந்த குழந்தைகளின் கற்றலை ஊக்குவித்து, குழந்தைக்கு உதவுகிறது என்று இந்த ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இரண்டு வயது குழந்தையின் பார்வையில் இந்த தொடுதிரை கணினியின் விளையாட்டுக்கள் எவ்வளவுக்கெவ்வளவு இண்டரொக்டிவ் ஆக இருக்கிறதோ அந்தளவுக்கு குழந்தைக்கு இவை பிடிக்கின்றன என்று இந்த ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த தொடுதிரைகளுடன் அதிகம் புழங்கும் குழந்தைகள் வேகமாக அதில் சொல்லப்படும் செய்திகளை உள்வாங்கிக் கொள்கின்றன என்று கூறுகிறார். இந்த ஆய்வுநடத்திய விஞ்ஞானிகளில் ஒருவரான மனிதவளம் மற்றும் குடும்பநல படிப்புகளுக்கான துணைப் பேராசிரியர் ஹெதர் கிர்கோரியன்.

மேலும் கண்களால் அறிவதில் மட்டுமல்ல, புதிய வார்த்தைகளை கற்பதிலும் இந்த தொடுதிரை கணினிகள் சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு உதவுவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். எனவே, தொடுதிரை கணினிகள் குழந்தைகளின் கற்றல் திறனுக்கு உதவுகிறதே தவிர, அதை எதிர்மறையாக பாதிக்கவில்லை என்கிறது இந்த ஆய்வு.

ஆனால், இந்த ஆய்வின் முடிவுகளில் இருந்து மாறுபடுகிறார் குழந்தை மனநல மருத்துவர் அரிக் சிக்மன். தற்கால குழந்தைகள் திரைகள் முன்னால் மணிக்கணக்கில் செலவிடுவதாக கூறும் அரிக் சிக்மன், தொலைக்காட்சி, கணினி, தொடுதிரை கணினி, ஸ்மாட்ர்போன்கள் என்று சராசரியாக தற்கால குழந்தைகள் ஒவ்வொரு நாளும் பல மணிநேரம் திரையின் முன்னால் செலவிடுவது அவர்களின் கற்றல் திறனை பாதிக்கிறது என்கிறார்.

இவரது ஆய்வில் தற்போது பிறக்கும் ஒரு குழந்தை ஏழு வயதாகும் போது அதில் ஒரு ஆண்டு காலத்தை திரைக்கு முன்னால் செலவிட்டிருக்கும் என்று கணக்கிட்டிருக்கிறார். அதாவது இன்று பிறக்கும் குழந்தை தொலைக்காட்சி, கணினி, தொடுதிரை கணினி, ஸ்மார்ட்போன் என்று தினசரி அது ஏதோ ஒரு திரையின் முன்னால் செலவிடும் மொத்த நேரத்தையும் கணக்கிட்டால், அந்த குழந்தைக்கு ஏழு ஆண்டு ஆவதற்குள், அது ஒரு ஆண்டை திரைக்கு முன்னால் கழித்திருக்கும் என்பது இவரது கணக்கு. இது குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கும், கற்றல் திறனுக்கும் நல்லதல்ல என்பது இவரது வாதம்.

இந்த வாதத்தை மறுக்கும் விஸ்கின்ஸான் பல்கலைக்கழக ஆய்வாளர்கள், பெற்றோர்களுக்கு இரண்டு யோசனைகளை அளிக்கிறார்கள்.

முதலாவது, சிறு குழந்தைகள் சராசரியாக ஒரு நாளைக்கு இர்ண்டு மணிநேரத்திற்கு அதிகமாக திரைமுன்னால் இருக்க அனுமதிக்காதீர்கள் என்பது முதல் யோசனை.

இரண்டாவது, தொடுதிரை கணினியில் இருக்கும் கேம்கள் மற்றும் அப்ளிகேஷன்கள் போன்றவற்றை தேர்வு செய்வதில் பெற்றோர்கள் கூடுதல் கவனம்செலுத்த வேண்டும் என்று இவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

தொடுதிரை கணினியில் குழந்தை செலவழிக்கும் நேரத்தைப் போலவே, அது இந்த திரையின் முன்னால் என்ன செய்கிறது என்பதும் முக்கியம் என்பதை எல்லா விஞ்ஞானிகளுமே வலியுறுத்துகிறார்கள்.

தொடுதிரை என்கிற புதிய தொழில்நுட்பம் எதிர்கால தலைமுறையினரின் வாழ்வில் பிரிக்கமுடியாத அங்கமாக மாறிவருவதை சுட்டிக்காட்டும் ஆய்வாளர்கள், இதை தங்களின் குழந்தைகளுடைய நன்மைக்கு பயன்படுத்தும் ஒட்டுமொத்த பொறுப்பும் பெற்றோர்களின் கையிலேயே இருக்கிறது என்பதை வலியுறுத்துகிறார்கள்.


தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

தினமுரசு நாளிதழ்

ரூ.10/= மட்டுமே


இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"




இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.



## வாழும் முறை

நரி ஒன்று புலி தங்கியிருந்த குகையின் அருகே உள்ள புதரில் வாழ்ந்துவந்தது. அப்ப அங்கே நரி இருப்பது புலிக்கே தெரியாது. புலி மீதம் வைத்த இறைச்சியைத் தின்று வாழ்ந்து வந்தது அந்த நரி.

ஒருநாள் அந்த நரியை இன்னொரு நரி சந்தித்தது.

"உன் செயல் வேடிக்கையாக உள்ளது. புலியின் அருகிலேயே வாழ்கிறாய். ஆனால் அதற்குத் தெரியாமல் மறைந்துவாழ்கிறாய். அது இல்லாத சமயத்தில் மீதம் உள்ள இறைச்சியை உண்கின்றாய். ஏன் இப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்கின்றாய்?" என்று கேட்டது.

"நண்பா! வாழும் முறையை நான் தெரிந்துகொண்டிருக்கின்றேன். நான் புலியின் எதிரில் செல்வது இல்லை. ஏனென்றால் அது என்னைக் கொன்றுவிடும். அதன் அருகிலேயே வாழ்கிறேன். என் எதிரிகள் யாரும் புலிக்குப் பயத்தில் என்னிடம் வருவதில்லை"

என்று பதில் சொன்னது நரி.

## வாரம் ஒரு திருக்குறள்




குடிசெயல் வகை

**குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்**
**மடிதற்றுத் தான்முந் துறும்.**

என் குடியை உயரச்செய்வேன் என்று முயலும் ஒருவனுக்கு ஊழ், ஆடையை இறுகக் கட்டிக்கொண்டு தானே முன்வந்து துணைசெய்யும்.

குறள்:1023

## சீன புதிர் விளையாட்டு




Tangram என்ற சீன புதிர் விளையாட்டு 5000 வருடங்களுக்கு முந்தியதாகும். இதனை விளையாடுவதற்கான தகைமை ஆர்வம் மட்டுமே. சிறுவர்களின் கற்பனை வளத்தை பெருக்கவல்லது இவ்விளையாட்டு.

ஒரு சதுரமான அட்டையை இங்கு காட்டியது போல் 7 துண்டுகளாக வெட்டி எடுத்துக்கொள்ளவேண்டும். பிளாஸ்டிக், இறப்பர், மரத்துண்டு என்பனவற்றிலும் வெட்டிக்கொள்ளலாம்.

இந்த 7 துண்டுகளையும் பயன்படுத்தி உருவங்களை உருவாக்கவேண்டும். எந்த ஒரு துண்டையும் மிகுதியாக வைக்கக்கூடாது என்பது முக்கியம். அத்துடன் ஒரு துண்டின் மேல் இன்னொரு துண்டை வைக்கக் கூடாது. பக்கத்தில் தான் வைக்கவேண்டும்.

பறவைகள், மிருகங்கள், கருவிகள், மனித உருவங்கள், என இதன்மூலம் 1600க்கும் அதிகமான உருவங்களை உருவாக்கலாம் எனக் கூறப்படுகிறது. ஆங்கில எழுத்துக்கள் அனைத்தையும் உருவாக்கலாம்.




## தற்போதுள்ள ஆட்டோ

ரிக்ஷாக்களை முதன்முதலில் அறிமுகப்படுத்தியது இத்தாலியைச் சேர்ந்த வெஸ்பா ஸ்கூட்டர் தயாரிப்பு நிறுவனமான பியாஜியோ நிறுவனம்தான்.

## பந்திக்கு முந்து... படைக்குப் பிந்து...

அந்தக் காலத்தில் அரசர்களிடம் தற்கொலைப் படை ஒன்றை வைத்துக்கொள்ளும் வழக்கம் இருந்தது. இந்தப் படையை 'பந்திப் படை' என்பார்கள். இவர்கள் தங்கள் உயிரைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் எதிரிகளுடன் போராடுவார்கள்.

இதனால் அக்கால இளைஞர்கள், தங்கள் வீரத்தை வெளிப்படுத்த, பந்திப்படையில் சேரவே துடிப்பார்கள். இதனால் பந்திக்கு முந்து மற்ற படைகளுக்குப் பிந்து என்று சொல்லப் பட்டுப் பிறகு "பந்திக்கு முந்து... படைக்குப் பிந்து" என்ற பழமொழியும் உருவானது.

## சம்பளம்

இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திரபிரசாத் தனக்கு வழங்கப்பட்ட மாதச் சம்பளமான பத்தாயிரம் ரூபாயை மிகவும் அதிகம் என்று கருதினார். அதனால் வெறும் 2,500 ரூபாய் மட்டும் ஊதியம்ாகப் பெற்றார். இதே வழியை அவருக்குப் பின்வந்த டாக்டர் ராதாகிருஷ்ணனும் பின்பற்றினார்.

## சாக்கடல்

ஜோர்தான் நாட்டின் எல்லையிலுள்ள சாக்கடலில் மூழ்காமல் மிதக்கலாம் என்பது நமக்குத் தெரிந்ததுதானே. மற்ற கடல் நீரைவிட இதிலுள்ள நீரில் 5 மடங்கு உப்பு அதிகமிருப்பதால் நீச்சல் தெரியாதவர்களும் இக்கடலில் மிதக்கலாம். இக்கடலில் மீன்களும் கிடையாது. இக்கடலின் கரையில் கடல்நீர் கண்ணிலும் வாயிலும் படாமல் பார்த்துக்கொள்ளும்படி எச்சரிக்கைப் பலகை வைக்கப்பட்டுள்ளது. இதில் வருத்தமான விஷயம் என்ன தெரியுமா? பல்வேறு உபயோகத்துக்காக தினமும் சாக்கடலிலிருந்து பல்லாயிரம் லீற்றர் நீர் எடுக்கப்படுவதால் 2050ஆம் ஆண்டுகளில் சாக்கடல் நீர் வறண்டுபோகும் என்கிறார்கள்.


## உலகிலேயே...

1. உலகிலேயே அதிவேகமாகப் பறக்கும் பறவை எது தெரியுமா? "ஸ்பைன் டெய்ல்ட் ஸ்வி்ஃப்ட்" எனப்படும் பறவைதான். இது மணிக்கு 160 கி.மீ வேகம்வரை பறக்கக்கூடிய திறன் பெற்றது.

2. உலகிலேயே அதிகம் பேசும் பறவை எதுதெரியுமா? கிளி இனத்தைச் சேர்ந்த 'ஃப்ரூடில்' என்ற பறவைதான். இது ஆபிரிக்க சாம்பல் கிளி என்றும் அழைக்கப்படுகிறது. பெண் பறவை 800 ஆங்கில வார்த்தைகளைத் திருப்பிச் சொல்லக்கூடிய திறமை உள்ளது.

3. உலகிலேயே மிக உயரமான இடத்தில் வசிக்கும் (அதனால் மிக உயரத்தில் பறக்கும் பறவையும் இதுதான்) பறவையின் பெயர் 'அல்பைன் காவ்ஸ்'. இது காகம் இனத்தைச் சேர்ந்தது. இந்தியாவில் இமயமலைப் பகுதியில் 26,900 அடி உயரத்தில் இந்தப் பறவை வசிக்கின்றது. மொராக்கோ நாட்டு மலைகளிலும் இந்தப் பறவைகள் உள்ளன.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 14.10.2013

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1013**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167,**
**யாழ்ப்பாணம்.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1011**

**ஆர்.எம்.சங்கீர்த்தனா, மைலியப்புலம், வட்டுக்கோட்டை.**

பரிசுக்குரியவர்: 1011

பாராட்டுக்குரியவர்கள்

01. வி.யதுஷன், நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
02. ச.ஷாமினி, நெடுங்கேணி, ஒட்டுசுட்டான்.
03. கு.பிரியதர்சினி, எட்டியாந்தோட்டை.
04. எம்.அஜந்தா, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.
05. டொ.கானுஜன், வரணி இயற்றாலை, வரணி.
07. கா.கவிஷ்கா, கொக்குவில், யாழ்ப்பாணம்.
08. வ.பாவனா, ஜின்னநகர், திருகோணமலை.

## உப்புச் சுரங்கம்

உலகிலேயே மிகப் பெரிய உப்புச் சுரங்கம் போலந்து நாட்டில் இருக்கிறது. கடல் நீரிலிருந்து தானே உப்பு எடுப்பார்கள்? இதில் உப்புச் சுரங்கம் எப்படி வந்தது என்கிறீர்களா? இந்தச் சுரங்கத்துக்குள் உப்புப்படிவம் பாறை பாறையாக இருக்கும் அதை வெட்டி எடுத்து உப்புத்தூளாக மாற்றுவார்கள்.

13ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட இந்தச் சுரங்கம் 2007ஆம் ஆண்டு வரை போலந்து நாட்டுக்கு சமையல் உப்பைத் தந்துகொண்டிருந்தது. அதன்பிறகு உள்ளே வெள்ளம் வந்ததாலும் உப்பின் விலை கட்டுபடியாகாமல் போனதாலும், இங்கு உப்பு எடுப்பது நிறுத்தப்பட்டது.

இந்தச் சுரங்கம் இப்போது சுற்றுலாத்தலமாக மாறி உள்ளது. இதற்குள் ஏராளமான சிலைகள் உள்ளன. சுரங்கத் தொழிலாளிகளால் உப்புப் பாறையாலேயே கட்டப்பட்ட 3 சிறிய ஆலயங்களும் ஒரு பேராலயமும் உள்ளே இருக்கின்றன. ஆலயத்துக்குள் ஏராளமான உப்புச் சிற்பங்கள் உள்ளன. இயேசு கிறிஸ்துவின் "இறுதி இரவு உணவு" என்ற பெயரில் டாவின்சியால் வரையப்பட்ட ஓவியத்தைக் கூட இங்கே உப்புச் சிற்பமாக சுவரில் செதுக்கி வைத்துள்ளனர்.

உப்புப் பாறையால் ஆன தொங்கும் சரவிளக்குகள் கூட இங்கே உள்ளன.


ஏறக்குறைய 12 லட்சம் சுற்றுலாப் பயணிகள் இந்தச் சுரங்கத்தைக் கண்டு களிக்க ஆண்டுதோறும் இங்குவருகிறார்கள். இந்தச் சுரங்கத்துக்கு வந்த முக்கியமான வி.ஐ.பி.கள் - நிக்கோலாஸ் கோப்பர் நிகஸ், போப் ஜோன் போல்-2 மற்றும் அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளிண்டன் ஆகியோர்.

327 மீற்றர் ஆழத்தில் 287 கி.மீற்றர் நீளத்துக்கு இந்தச் சுரங்கம் அமைந்துள்ளது. உள்ளே ஒரு சிறிய ஏரிகூட உள்ளது. இன்றைய கலைஞர்கள்கூட அடிக்கடி உள்ளே சென்று தங்கள் கைவண்ணத்தில் ஏதாவது ஒரு சிலையை இங்கே செதுக்கிவைத்து விட்டுச் செல்கிறார்கள்.

36 பேர்கள் ஒரே சமயத்தில் செல்லக்கூடிய ஒரு லி்ஃப்ட் இங்கே இயங்குகிறது. அதன்மூலம் சுற்றுலாப் பயணிகள் உள்ளே இறங்கி சுரங்கத்தைச் சுற்றிப்பார்க்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

உள்ளே ஒரு உணவகம்கூட இருக்கிறது. இந்தச் சுரங்கம் யுனெஸ்கோவினால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாக அங்கீகரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுவருகிறது.





நீ வெள்ளையன். நான் தொட்டால் தீட்டுத்தானே?" என்று கேட்டான்.

அவன் மிதமிஞ்சிய பயத்தோடு இல்லை என தலையசைக்க அவனது அடிவயிற்றில் தன் கையை மடக்கி இடி அமீன் விட்ட குத்தில், சிப்பாய் அப்படியே குனிந்து மடங்கிசரிய அவன் சட்டையில் பிடித்த அமீன் "முழந்தாளிட்டு நில்லடா இங்கே நான்தான் கடவுள்" என்றுவிட்டு உரத்துச் சிரித்தான்.

"அப்படியே முழங்காலில் நடந்துபோய் அந்த ஜீப்பில் ஏறிக்கொள்!" என்று ஜீப் ஒன்றைக் காட்டினான்.

முழங்காலில் அவன் சிரமப்பட்டு நடந்துபோவதை ஒரு குரூர திருப்தியோடு இரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஜனாதிபதியின் பிரத்தியேக அறைக்குள் தேடியதில் விழாக்களின் போது ஜனாதிபதி அணியும் தொப்பியும், ஜனாதிபதிக்கான கொடியும்தான் அகப்பட்டன.

அந்தத் தொப்பியை எடுத்து தன் தலையில் அணிந்துகொண்டு, கையில் கொடியுடன் அமீன் சிரித்தபோது அவன் அருகே நின்றிருந்த சிப்பாய்களுக்கு அந்தச் சிரிப்பின் அர்த்தம் புரியவில்லை.

தொப்பியுடனும் கொடியுடனும் குரூரமான புன்னகையுடனும் வெளியே வந்த அமீன் அங்கு நிறுத்தப்பட்டிருந்த ஜனாதிபதி மாளிகை பணியாளர்களை கண்டதும் அப்படியே நின்றுவிட்டான்.

பதினைந்து பேரில் மூன்று பேர் பெண்கள். அதில் இரண்டுபேர் பிரமாதமான அழகிகள்.

"யார் இவர்கள் எல்லாம்?" என்றான் யார் என்று விளக்கப்பட்டது.

அதில் ஒருத்தியை தன் சுட்டுவிரல் நீட்டி



அற்புதன் எழுதிய

# இடி அமீன்

உண்மைத் தொடர்...

## அதிர் இடி 07

"வெள்ளைக்காரனை விடக் கூடாது! வீரம் தோல் நிறத்தில் வராது. தோள்பலத்தில் வரும் என்பதை வெள்ளை நாய்களுக்கு வரிவரியாகப் படிப்பிக்கவேண்டும்! என்று சற்றுச் சத்தமாகவே கூறிவிட்டு தன் ஜீப்பில் ஏறிக் கொண்டான்.

ஜனாதிபதி மாளிகையை காப்பாற்ற நாலு மணிநேரமாக சண்டையிட்ட கபாகாவின் விசுவாசப் படைகள் இறுதியில் தோல்வி கண்டன.

பிடிபட்ட சிலரை சுட்டுக்கொன்ற அமீன் அங்குள்ள மரங்களில் கட்டித் தொங்கவிட்டான்.

ஜனாதிபதி மாளிகைக்குள் அமீன் புகுந்தபோது ஜனாதிபதி கபாகா அங்கிருந்து தப்பி ஓடியிருந்தார்.

"கோழை மாதிரி தப்பி ஓடிவிட்டான் தொடைநடுங்கி" என்று கூறிய அமீன், ஜனாதிபதியின் பிரத்தியேக அறைக்குள் நுழைந்தான்.

ஜனாதிபதி மாளிகையின் இடுக்குகள் எல்லாம் தேடி, அங்கு மறைந்திருந்த ஜனாதிபதி மாளிகை ஊழியர்கள் பதினைந்து பேரை பிடித்துவந்து நிறுத்திவைத்தனர் அமீனின் சிப்பாய்கள்.

அழைத்தான். அருகில் வந்தவளின் கழுத்தில் கைவைத்து ஜனாதிபதியின் பிரத்தியேக அறைக்குள் தள்ளினான்.

தானும் உள்ளே வந்து கதவை மூடிக்கொண்டான்.


"இப்போது ஜனாதிபதி நான்தானடி என்னை சந்தோஷப்படுத்து" என்று அமீன்கூற அப்பெண் மறுப்பேதும் சொல்லாமல் கட்டிலில் ஏறி மல்லாந்து படுத்துக்கொண்டாள்.

அமீனுக்கு சப்பென்று போய்விட்டது. அவன் எதிர்ப்பையோ, மறுப்பையோ தான் எதிர்பார்த்தான்.

**இதுவரை**

**உகண்டா ஜனாதிபதி கபாகாவுக்கும் பிரதமர் ஒபேடாவுக்கும் இடையே அதிகாரப்போட்டி வலுவடைகிறது. பிரதமர் ஒபேடேவின் நம்பிக்கைக்கு உரியவனாகிறான் இடி அமீன். ஜனாதிபதியை பதவிநீக்குவதாக அறிவிக்கிறார் பிரதமர். ஜனாதிபதியின் ஆதரவாளர்களை ஒடுக்கும் பொறுப்பை இடி அமீனிடம் ஒப்படைக்கிறார்.**

**இனி...**



விசை கொடுக்கப்பட்ட பொம்மை போல அவள் சென்று மல்லாந்து, மரக்கட்டைபோல கிடப்பதை பார்க்க அமீனுக்கு பற்றிக்கொண்டு வந்தது.

"எழும்படி நாயே!" என்று அவன் போட்ட கூச்சலில் ஆடிப்போய், அப்பெண் எழுந்தபோது கேட்டான், "ஜனாதிபதியையும் சந்தோஷப்படுத்தி இருக்கிறாயா?"

"ஆம்!" என்றாள் தயக்கம் இல்லாமல். "எத்தனை தடவை?" பல தடவைகள் என்று அவள் பதிலுக்கு, குரூரமாகச் சிரித்த அமீன், இப்போது நான் உன்னை ஒரேயடியாக சந்தோஷப்படுத்தப் போகிறேன்! என்றபடி தன் இடுப்பில் இருந்த பிஸ்டலை உருவி, அவளது வயிற்றின் கீழ், மிகக் கீழே பிஸ்டலை அழுத்தி "டூமீல்!"

அவள் கடைசியே கடைசியான மரண ஓலத்துடன் அப்படியே கட்டிலில் மல்லாந்து விழிகள் குத்தி நிற்க திறந்தவாயுடன் செத்துப் போனாள்.

அதே வேகத்தில் கதவைத் திறந்துவந்த அமீன் ஏனைய ஊழியர்களை சுட்டுத் தள்ளுமாறு உத்தரவிட்டான்.

மாளிகைக்குள் வெடிச் சத்தங்களும், மரண ஓலங்களும் கலந்து ஒலித்தன.

மாளிகையை குண்டுவைத்து தகர்க்குமாறு கட்டளையிட்ட அமீன் ஜனாதிபதி மாளிகைக்கு அருகே இருந்த வீடுகளுக்குள் புகுந்து பெண்களை வேட்டையாடவும் தன் படையினருக்கு சுதந்திரம் கொடுத்தான்.

எல்லாம் முடிந்து அமீனின் படைகள் திரும்பும்போது, ஜனாதிபதி கபாகாவின் மாளிகை வெடித்துத் தகர்த்த சத்தம் அப்பகுதியை அதிர வைத்தது.

தப்பியோடிய கபாகாவை தேடுகிறோம் என்ற பெயரில் பல வீடுகளுக்குள் புகுந்து அமீனின் படைகள் பெண்களை வேட்டையாடியதுதான் கண்ட பலன்.

கபாகா மாட்டவே இல்லை. தன் நம்பகமான ஆட்களின் உதவியுடன் உகண்டாவை விட்டு தப்பியோடி பிரிட்டனுக்குள் புகுந்துவிட்டார் கபாகா.

கபேகாவின் ஆதரவாளர்கள் என்று கருதப்பட்ட நூறுபேர்வரை சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பிணங்களை வீதிகளில் போட்டுவிட்டு அமீனின் படை வெற்றியோடும், வெறியோடும் திரும்பியது.

பிரதமர் ஒபேடேயிடம் அமீன் வெற்றிச் செய்தியை தெரிவித்த போது அவர் தன்னை மறந்தவராக அமீனிடம் கூறினார்.

"நீ தான் விரைவில் இராணுவத் தளபதி!" "இருக்கட்டும் என்ன அவசரம்!" என்றான் அமீன்.

"என் மகளுக்கு அவசரம்!" என்று சொல்லிச் சிரித்தார் பிரதமர்.

பிரதமரின் மகள் தனது அறையில் அமீனை கட்டித்தழுவினாள். அவனை கட்டிலில் சரித்து ஏக்கத்துடன் அவன்மேல் புரண்டாள்.

"நீ பெரிய முரடன் என்றுதான் நினைத்தேன். பெரிய சண்டைக் காரன் என்றும் நிரூபித்துவிட்டாயே. என்னிடம் உன்னை நிரூபி பார்க்கலாம்" என்று அமீனை உடும்பாய் பற்றிக் கொண்டாள்.

தான் உகண்டாவை ஆள்வதற்கான திறவுகோல்களில் அவளும் ஒருத்தி என்பதால், அவளைகளைய ஆரம்பித்தான் அமீன்.

(தொடரும்)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

**வாசகர்களின் கவனத்திற்கு...**

முரசு வாசகர்களின் உரிமையான வேண்டுகோளுக்கு அமைவாக, (முரசு 1021 - கு.எ. போ. - 528) குறுக்கெழுத்துப் போட்டியில் இருந்து வெற்றியாளருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூபா 1000/= ஆக உயர்த்தப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை அறியத்தருகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 542

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | | | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | | 24 |
| 25 | 26 | | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **14.10.2013** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 542
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-169, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 540 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ந (1) | க (2) | கா (3) | ர (4) | த (5) | ம் (6) |
| ல் (7) | த (8) | டு (9) | ட் (10) | சா (11) | ■ |
| ல (13) | ■ | ண் (15) | க (16) | ங் (17) | இ (18) |
| க (19) | ண் (20) | ■ | ■ | கி (23) | த் (24) |
| ல் (25) | ம (26) | ■ | ர (28) | ம் (29) | தா (30) |
| வி (31) | டி (32) | வு (33) | ■ | ச (35) | லி (36) |

**இடமிருந்து வலம்**

01. பிள்ளைத்தன்மை; பாலியம்.
07. ஓர் கைவளையல்; பாங்கி.
11. யானை. நீர். முதல் எழுத்துவிடுபட்டுள்ளது. (திரும்பியுள்ளது)
13. கிரியா பாவம். (குழம்பியுள்ளது)
19. கத்தரிச் செடி. கடைசி இரண்டெழுத்தும் விடுபட்டுள்ளது. (குழம்பியுள்ளது)
25. ஆண் பனை. கடைசி இரண்டெழுத்தும் விடுபட்டுள்ளது.
28. நான்கு கூப்பிடு தூரம். (திரும்பியுள்ளது)
31. இவர் ஒரு முதிர்ந்த பிரமச்சாரி. கடைசி மூன்றெழுத்தும் சிநேகிதர் என்று பொருள்படும். (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. ஐம்பெருங்காப்பியங்களையும் தமிழ் நாடகமாக்கி ஒலிபரப்பியதற்குரிய பெருமை இந்த வானொலி நிலையத்திற்குண்டு.
02. தானேவரிக்கை. (குழம்பியுள்ளது)
03. அறிவு ; மான்றோல். (குழம்பியுள்ளது)
04. ஓர் இகழ்ச்சிக்குறிப்பு.
05. அக்கிரமம் ; அபிநயம். (குழம்பியுள்ளது)
06. சூனியம் ; ஒன்றுமற்ற தன்மை. (திரும்பியுள்ளது)
16. மிளகு. (குழம்பியுள்ளது)

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 540 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**கு.பைரவி, பிரதான வீதி, கொள்ளுப்பிட்டி.**

பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

01. மா.தினேஷ், கைதடி தெற்கு, கைதடி.
02. எம்.வித்தியாதரன், செமனரிவத்த றோட், தென்னக்கும்புர.
03. ஆர்.நுதம்மில், மத்திய வீதி, காத்தான்குடி -03.
04. இ.மனிஷா, நிவ்எல்பிட்டிய, கெலிஓயா.
05. கே.அனந்தா, கோயில் வீதி, கொழும்பு -15.
06. என்.மாருதன், 2ஆம் குறுக்குத்தெரு, நிந்தவூர்.
07. சி.ராணிமலர், பரந்தன், கிளிநொச்சி.
08. தி.அற்புதராஜா, அரியாலை, யாழ்ப்பாணம்.
09. சௌ.மாளவிகா, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.



சிறுவாணி



மனதில் மாயம் செய்தாய்

## விஜய்க்கு ஏற்பட்ட லேட்டஸ்ட் விருப்பம்!

தெலுங்கு பவர்ஸ்டாரின் ரீமேக்கில் நடிக்க ஆசைப்படுகிறாராம் விஜய். தெலுங்கில் பவன்கல்யாண் நடிப்பில் வெளியான, அத்தரிண்டிகி தாரெதி படம் வெற்றிகரமாக ஓடிக்கொண்டு இருக்கிறது. பெரும்பாலும் தெலுங்கில் மகேஷ்பாபுவின் ஹிட் படங்களை மட்டுமே தமிழில் ரீமேக் செய்து நடிப்பார் விஜய். ஆனால் இப்போது பவன் கல்யாண் நடித்துள்ள அத்தரண்டிகி தாரெதி படத்தைப் பார்த்த விஜய் அதன் தமிழ் ரீமேக்கில் நடிக்க விருப்பம் தெரிவித்துள்ளாராம். இத்தனைக்கும் இது அதிரடி அக்ஷன் படமும் இல்லை.

கமர்ஷியலான, குடும்பக் கதையை மிக்ஸ் பண்ணிய ஒரு ஸ்டைலிஷான படம் இது. தெலுங்கில் இந்தப் படத்தின் தயாரிப்பாளர், சில விஷயங்களை பேசிக்கொண்டிருக்கிறோம். இப்போது எதையும் என்னால் உறுதியாக சொல்லமுடியாது என சூசகமான தகவலை வெளியிட்டுள்ளார்.

## சிக்ஸ் பேக் வைக்கிறார் கரீனா கபூர்

சிக்ஸ் பேக் வைப்பது இப்போது சினிமாவில் பேஷனாகி வருகிறது என்றாலும் நாயகர்களைபோல ஒரு நாயகி சிக்ஸ் பேக் வைப்பது மெய்யாலுமே நிறைய எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

'சுத்தி' என்ற படத்திற்காகத்தான் இந்தப் புது கெட்டப்புக்கு மாறு-கிறாராம் கரீனா. கரண் மல்ஹோத்ரா இயக்கும் 'சுத்தி' படத்தில்தான் இந்த அவதாரமாம். இந்தப் படத்தில் கரீனாவுடன் ஜோடி போடவிருப்பவர் ஹ்ரித்திக் ரோஷன். இதுவரை செக்ஸியானவர், சைஸ் ஜீரோ நடிகை என்றெல்லாம் அழைக்கப்பட்ட கரீனா கபூர், இந்திய நடிகைகளிலேயே சிக்ஸ் பேக் வைக்கும் முதல் நடிகை என்ற பெயரையும் பெறவுள்ளார்.

## தமிழுக்கு திரும்புகிறார் ஸ்ருதி

ஏழாம் அறிவு, 3 ஆகிய படங்களுக்கு பின் ஸ்ருதிஹாசனுக்கு தமிழில் வாய்ப்புகள் கிடைக்கவில்லை. ஆந்திரா பக்கம் போன அவருக்கு சிவப்பு கம்பள வரவேற்பு கொடுத்தனர் தெலுங்கு ரசிகர்கள். இதனால் தமிழில் நடிப்பதை தவிர்த்தார். பின் பொலிவூட்டிலும் அவருக்கு கிராக்கி ஏற்பட்டது. இப்போது ஒரு தெலுங்கு படத்திலும் மூன்று இந்தி படங்களிலும் நடித்து வருகிறார். இந்நிலையில் பிரபல தமிழ் இயக்குனர் ஒருவர் தன்னிடம் வித்தியாசமான கதை இருப்பதாகக்கூறி, அதில் நடிக்க முடியுமா என ஸ்ருதியை அணுகியுள்ளாராம். கதை, ரொம்பவே வித்தியாசமாக இருந்ததால் கண்டிப்பாக நடிக்கிறேன் என உறுதியளித்து இயக்குனரை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தினாராம் ஸ்ருதி.



## 'இதற்குத்தானே ஆசை…

இரண்டு காதல், ஒரு கொலையினை… கொமடியுடன் கலந்துகட்டி விருந்து படைத்துள்ளது 'இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா'.

ஒரு சின்ன கதையை எடுத்… கொண்டு திரைக்கதையில் சிரிப்புத்… தோரணம் கட்டும் சமீபத்திய கொ… படங்களிலிருந்து ரொம்பவே மாறு… மூன்று கதைகளை ஒரு நேர்கோ… இணைக்க முயற்சித்திருக்கிறார் இயக்குனர் கோகுல்.

படத்தின் கதை ஒரே நாளி… நடக்கிறது. வேலை வெட்டி இல்லாமல் எப்போதும் டாஸ்மாக்கே கதி என்று இரு… விஜய் சேதுபதி அவர் எதிர் வீட்டில் குடியி… நந்திதாவை ரூட் விட அம்மணியோ விட்டுரு… ப்ளீஸ் என்று எஸ்கேப் ஆகப்பார்க்கிறார்.

ஆனாலும் நம்மாளு விடாமத் துரத்து… அண்ணாச்சி பசுபதியிடம் கட்டப்பஞ்சாயத்துக்கு வருகிறார்கள். இன்னொரு பக்கம் விஜய் சேதுபதி… கொஞ்சமும் சளைக்காத குடிமகனான அஸ்வின். இவரின் காதலி சுவாதி. காதலியிடம் வாயைத் திறந்தால் பொய்… கொட்டுவார்.

இந்நிலையில் குடிபோதையில் ஒரு பெண்ண விபத்துக்கு… அவரது உயிரைக் காக்க அரிய வகை இரதம் தேடவேண்… கட்டாயத்தில் நிற்கிறார் மூன்றாவது கதை கொஞ்சம் கில்மா மேட்டர். ஒரு பேட்டை ரவுயின் மனைவிக்கு இரண்டு கள்ளக்காதலர்கள். அவர்களை வைத்தே கணவனை போட்டுத் தளப் பார்க்கிறாள் மனைவி.

## மீண்டும் 16 வயதினிலே…

1977ஆம் ஆண்டு வெளிவந்த படம் 16 வயதினிலே. ஸ்டுடியோக்களில் வலம்வந்து கொண்டிருந்த தமிழ் சினிமாவை கிராமங்களின் தெருக்களில் நடமாட வைத்த முதல் படம். தமிழ் சினிமாவின் 75 ஆண்டுகால வரலாற்றில் இப்போதும் நம்பர் ஒன் இடத்தில் இருக்கும் படம். அதனை இயக்கிய பாரதிராஜா, தயாரித்த எஸ்.ஏ.ராஜ் கண்ணு, இசை அமைத்த இளையராஜா, ஒளிப்பதிவு செய்த நிவாஸ், நடித்த கமலஹாசன், ரஜினிகாந்த், ஸ்ரீதேவி, கவுண்டமணி ஆகியோர் இப்போதும் நம்முடன் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். காந்திமதி மட்டும் சமீபத்தில் காலமா-னார். 36 வருடம் கழித்து இந்தப் படம் இப்போது நவீன முறையில் டிஜிட்டல் மற்றும் சினிமாஸ்கோப் ஆக்கியிருக்கிறார்கள். நவீன ஒலி நுட்பத்தை பயன்படுத்தி பாடல்களை புதிதாக்கி இருக்கிறார்கள். இதன் பணிகள் முடிவடைந்து இந்த படத்தின் டிரெய்லர் வெளியீட்டு விழா நடைபெற்றது.

இதில் பாக்கியராஜ், பார்த்திபன், கமல், ரஜினி, அந்த படத்தில் டாக்டர் வேடத்தில் நடித்த சத்யஜித், தயாரிப்பாளர் எஸ்.ஏ.ராஜ்கண்ணு, கமலா திரையரங்கு உரிமையாளர்கள் கலந்துகொண்டனர்.

நைய…





ப்தாய்

# ...த்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா'

...டு காதல், ஒரு கொலையினை
...டன் கலந்துகட்டி விருந்து
...துள்ளது 'இதற்குத்தானே
...சப்பட்டாய் பாலகுமாரா'.
ஒரு சின்ன கதையை எடுத்துக்
...ண்டு திரைக்கதையில் சிரிப்புத்
...ரணம் கட்டும் சமீபத்திய கொமடிப்
...ங்களிலிருந்து ரொம்பவே மாறுபட்டு,
...ன்று கதைகளை ஒரு நேர்கோட்டில்
...ணைக்க முயற்சித்திருக்கிறார்
...க்குனர் கோகுல்.
படத்தின் கதை ஒரே நாளில்
...து, வேலை வெட்டி இல்லாமல்
... டாஸ்மாக்கே கதி என்று இருக்கும்
...பதி அவர் எதிர் வீட்டில் குடியிருக்கும்
...ட் விட அம்மணியோ விட்ருங்க
...ஸ்கேப் ஆகப் பார்க்கிறார்.
...லும் நம்மாளு விடாமத் துரத்துவே
...தியிடம் கட்டப்பஞ்சாயத்துக்கு
...னாரு பக்கம் விஜய் சேதுபதிக்கு
...தடிமகனான அஸ்வின். இவரின்
...ம் வாயைத் திறந்தால் பொய்யாய்க்
...
...பில் ஒரு பெண்ணை விபத்துக்குள்ளாக்கி,
...ரிய வகை இந்தம் தேடவேண்டிய
...ன்றாவது கதை
...த பேட்டை ரவுயின்
...காதலர்கள்.
...ன போட்டுத் தள்ளப்

இந்த மூன்று கதைகளும் ஒரு புள்ளியில் எவ்வாறு இணைகின்றன என்பதுடன் மீதிக் கதை நகர்கிறது.

திரைக்கதைக்காக மெனக்கெட்டு இருக்கிறார். அவருக்கு பாராட்டுக்கள். விஜய் சேதுபதி பொருத்தவரை தன்னுடைய ரோலை நல்லா பண்ணியிருக்கிறார். சும்மாயிருக்கிற குடிகார கெட்டப்புல செம கலக்கல். நந்திதாவிடம் திட்டுகளை வாங்கிக்கொண்டு அதையெல்லாம் மறந்து மீண்டும் அவர்பின் சுற்றுவதும் பின்பு பசுபதியிடம் தன்னுடைய காதலை நகைச்சுவையோடு சொல்வது, ஆள்வைத்து அடித்தவுடன் அந்த பீலிங்கில் சரக்கடிக்க அலைவது என தன்னுடைய கதாபாத்திரத்தில் வெளுத்து வாங்கியுள்ளார்.

அஸ்வின் படு ஸ்மார்ட். காலேஜ் பெண்கள் முதல் டீன் ஏஜ் பெண்கள் அனைவருக்கும் பிடிச்ச முகம். நடிப்பும் நல்லா வந்துருக்கு. மொத்தத்தில் இவரது நடிப்பிற்கு ஒரு சபாஷ்.

நந்திதாவுக்கு சேதுபதியை வெறுப்பது பின்பு உள்ளூர விரும்புவது எனக் காதல் பறவை கதாபாத்திரம். பாஸ் மார்க் வாங்கிவிடுகிறார். ஸ்வாதி பளிச் முகத்துக்கும், அழகிய உதட்டுக்கும் ஒரு முன் உதாரணம். அலை பாயும் கூந்தலுடன் மிகக் கண்ணியமான ஆடைகளுடன் இவர் வரும் காட்சிகள் எல்லாமே அருமை.

காதலருடன் ஊடல் கொள்ளும் காட்சிகள் காதலர்களை கவரும். ரொம்ப நாளைக்குப் பிறகு பசுபதி. நீரிழிவு வியாதி தாதாவாக வருகிறார். விஜய் சேதுபதியின் காதலுக்கு பஞ்சாயத்து பண்ணும் இடங்களெல்லாம் சிரிப்பை அள்ளுகின்றன. சூரி, எம்எஸ் பாஸ்கர் இருவரும் பார்ப்பவர் வாய்களையும், வயிற்றையும் கூடுதலாக வலிக்க வைத்திருக்கிறார்கள். பின்னணி இசையிலும் காட்சிக்கு தேவையானதை மட்டும் கொடுத்திருக்கிறார் சித்தார்த்.

மொத்தத்தில் இது சும்மா குமார் அல்ல, கொமடி குமார்.

## ...ளிலே...

... படம் 16
...ம்வந்து
...மங்களின்
... படம்.
...லாற்றில்
...க்கும்



அங்குசம்

# சரக்கடி நண்பா நீ சரக்கடி

ஸ்ரீகாந்த்- சந்தானத்தின் நடிப்பில் உருவாகும் நம்பியார் என்ற படத்தில் சந்தானம் ஒரு பாடலை பாடியுள்ளார். விவேகாவின் எழுத்தில், விஜய் ஆண்டனியின் இசையில் பாடி அசத்தியுள்ளார்.

சந்தானம் பாடியது குறித்து இயக்குனர் கணேஷா, நகைச்சுவைக்கு பஞ்சமில்லாத கதைக்களம், அதற்காக வெறும் நகைச்சுவையை மட்டும் நம்பி பயணப்படும் படம் அல்ல. சந்தானம் சேர் பட்டைய கிளப்பிய படங்களில் இதுவும் ஒன்றாக அமையும். ஆனால் அவர் ஏற்றிருக்கும் கதாபாத்திரத்தில் மற்ற படங்களுக்கும் இந்த படத்துக்கும் நிறைய வித்தியாசம் இருக்கும்.

படத்தில் மிக முக்கியமான ஒரு கட்டத்தில்வரும் பாடலை யாரை வைத்துப் பாடவைத்தால் சரியாக இருக்கும் என்று யோசித்துக்கொண்டிருந்தபோது, விஜய் அண்டனி சேர் சந்தானம் பாடினால் நன்றாக இருக்கும் என்றார்.

சந்தானம் மறுத்துவிடுவார் என்றுதான் நினைத்தோம். ஆனால் சந்தோஷமாக பாட வந்துவிட்டார். ஐந்து மணிநேரம் எடுக்கும் என்று நினைத்த பாடலை பதினைந்து நிமிடங்களில் முடித்துக்கொடுத்துவிட்டார்.

“ஆற அமர உக்காந்து சரக்கடி நண்பா நீ சரக்கடி” என்று ஆரம்பிக்கும் வரிகள். மனதுக்கும் நிஜத்துக்கும் நடக்கும் ஒரு போர் என்று சொல்லலாம் அந்த காட்சி. அதுவரை தன் நண்பர்கள் தண்ணியடித்தால் கோக்கை வாங்கி வைத்துக்கொண்டு கம்பனி கொடுக்கும் ஸ்ரீ முதல்முறையாக தண்ணியடிக்கும் சங்கடமான சூழ்நிலை.

ஸ்ரீகாந்த் கூறுகையில், சினிமாவில் எனக்கு கிடைத்திருக்கும் மரியாதைக்குரிய நண்பர் சந்தானம். எனக்காக நடித்துக்கொடுப்பதோடு பாடியும் உதவியிருக்கிறார். அவரது நம்பிக்கையை நம்பியார் நிறைவேற்றும் என்றும், சந்தானத்துக்கு நிறைய நன்றிக் கடன்பட்டிருக்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.



நையாண்டி



## ரஷ்யாவில் துப்பாக்கி

சென்னையில் இந்திய சினிமாவின் நூற்றாண்டை கோலாகலமாக கொண்டாடி மகிழ்ந்த நிலையில் தற்போது ரஷ்யாவில் இதேபோல ஒரு விழா கொண்டாடப்படுகிறது. டிசம்பர் மாதம் இந்த படவிழா நடைபெறவுள்ளது. தமிழ்ப் படங்கள் தவிர மேலும் பல இந்திய திரைப்படங்களும் கலந்துகொள்ளவுள்ளன. இதில் தமிழிலிருந்து கமல்ஹாசனின் வேட்டையாடு விளையாடு, தனுஷின் ஆடுகளம், விஜய்யின் துப்பாக்கி ஆகியவை திரையிடப்படுகிறது.

# தேன் கிண்ணம்

## திருமணங்கள் சுவர்க்கத்தில்...



அவனும்
அவளும்
ஆளை யாள்
காதலித்தார்களாம்
ஆனால்
கைப்
பிடிக்கவில்லையாம்!
'காரணம்?'
சாதி
பொருத்தஞ்
சரியாக
இல்லையாம்!


சரி - தம்
சாதிக்குள்ளவே
மணக்கச்
சம்மதித்தார்களாம்
அவனுக்கும்
அவளுக்குஞ்
சாதக(ம்)
பொருத்தஞ்
சரியாய்
இல்லையாம்!

இனி-
மனப்
பொருத்தம்
பார்த்தார்களாம்
சரியாகவே
இருந்ததாம்
ஆனால்...
'பணப்
பொருத்தஞ்
சரியாக
இல்லை' என்று
விலக்கிக்
கொண்டார்களாம்!

இந்தத்
திருமணத்தை
நிச்சயிக்க
இவனுக்கும்
இவளுக்கும்
அந்தச்
சுவர்க்கத்திலும்
சொந்தக்காரர்
இல்லை (யாக்கும்)

பாண்டியூர் பொன்.நவநீதன்,

## அவலம்



வாழ்வதை வசந்தமாக்க
வறுமையிலா செல்வனாக
வட்டிக்கு வழிகாட்டியாகி
வயிறு வளர்த்து செட்டி யானது
பெருமை!

மனம் நொந்து தந்த பணம்
தினம் நிறைந்து மகிழ்ந்த மனம்
கண்மண் தெரியாமலே
கலாய்த்து நகர்ந்தது காலம்!

வட்டிமேல் வட்டிகுட்டி போட்டு
மீற்றர் வட்டி தந்த வடு
கொண்டு சென்றோர் பலராக
மாண்டது அழியா சுவடாகியது!

சவப்பெட்டி வாங்கக் கூட
சல்லிக் காசு இல்லாது விட
சந்திசிரிக்க வந்த சாவு
சரித்திரம் படைத்த அவலமானது!

அப்ரார் ஏ.அஸீஸ்
யாழ்ப்பாணம்.

## ஆஸ்திரேலியா செல்லாதே!

ஆழ்கடல் தாண்டி நீ
ஆஸ்திரேலியா செல்லாதே.
ஆபத்தான அனைத்திற்கும்
ஆளாகி விடாதே.
ஆயத்தங்கள் பல செய்து
ஆயிரங்கள் பல கொடுத்து
ஆழ்கடலைத் தாண்டாதே!
ஆழ்பிடிக்கும் படையினரிடம்
ஆழ்பட்டுப் போகாதே.
ஆவல் மிகுதி கொண்டு
ஆசாமிகளைக் கண்டு
ஆழமான கடலில்
ஆழம் தெரியாது
ஆண்டவன் துணை என்று
ஆவேசத்தில் குதித்து விடாதே.
ஆதாரமேதுமின்றி
அழிந்துவிடுவாய்.


அலாவுதீன் A.L.A.பாபு
திருகோணமலை.



## உயிரே...!

உன் மீது நான் வைத்த
அன்பு உனக்குப்
புரியாமல் போனதேனோ
என் உயிருள்ளவரை
காத்திருப்பேன் உன்
அன்புக்காக.
என் உயிரே....

எம்.ரியா
கொக்குவில்



## மனித மகோன்னதம்

வேண்டும் சமாதானம்
இது மனங்களின் பிரார்த்தனை

ஆனால்
வெடி குண்டுகளையும்
வெடிக்க வைக்கும்
கண்ணி வெடிகளையும்
விதைத்து வைத்திருக்கும்
இந்த மனங்களின் பிரார்த்தனை
மனிதனை மாத்திரம்
அழித்திட வேண்டும்
விமானத் தாக்குதல்
ஷெல் வீச்சு என்றெல்லாம்
கொட்டித் தீர்ப்பதும்
மனித மனங்கள் தான்



அதற்கு மேல்
ஆயுத உற்பத்தி
போர் விமானக் கொள்வனவு
ஏவுகணை பரீட்சிப்பு
அணுகுண்டு பரிசோதனை
ஆமாம்
உயிர் வாங்கிடும்
பலப் பரீட்சையில்
தன்னிறைவுப் போராட்டம்

சாகடித்து
உடல் சிதைத்து
நடைப் பிணமாக்கிடும்
மனித இம்சைகள்
வறுமை வளர்ச்சியுற்று
குற்றுயிராகிடும் அபிவிருத்தி
மலிந்து கொண்டிருக்கும்
விட்டுக் கொடுக்க முடியா
வைராக்கியங்கள்

வைத்தியசாலைகளும்
நலனோம்பு வசதிகளும்
நோயெதிர்ப்பு யுக்திகளும்
போசாக்குத் திட்டங்களும்
மனிதர்க்கு எதற்கு
வாழவிடாத
போராட்டத்தின் மத்தியிலே

இருப்பிடம் விட்டோடும்
மனித அவலங்கள்
மலிந்து செல்லும்
அகதி முகாம்கள்
ஆம் இவைகள்
நிவர்த்தி நிவாரணங்கள்
கிள்ளிய பிள்ளையை
தாலாட்டும் தொட்டில்கள்

பேச்சுவார்த்தை
சமாதானப் படை நகர்வு
இரசாயன ஆயுதக் களைவு
என்றெல்லாம்
யோசனையில் மனிதாபிமானம்
முற்பிறப்பில் செய்தது
இப்பிறப்பில் வதைக்கிறது
இயலாமையின் வெளிப்பாடு
விதியை மனிதம்
நொந்து கொள்கிறது

நீதமென்றும்
உரிமைகள் என்றும்
விட்டுக் கொடுப்புக்களும்
வழிகாட்டல்களுமே
வாழவைக்கும்
இந்த மனிதத்தை
அபகரிப்புக்களும்
அத்துமீறல்களும்
விடிவைத் தராது
அமைதி வராது
நல்லோரின் ஆக்கிரமிப்பு
நாட்டுக்கும் வேண்டும்
சமூகத்திற்கும் வேண்டும்

தொடரும் பாதங்களை
மதவாதத்தால்
மாற்ற முடியாது
பண்புகளால் புடம் போட்டு
பிரார்த்திக்கும் மனமே
பாவக்கறைகள் நீக்கும்

செய் நன்றி கொல்லாத
மாந்தர் மலிந்திடில்
பிறர் பற்றிய கவலை
வழி கெடுக்க வராது
வாழ்விக்க வந்திடில்
தரணியில் அப்போது
பட்டாசுகள் கூட
தரங்கெட்டுப் போகும்
ஈடேற்றமாகும் – ஈருலகும்
களைகட்டி நிற்கும்
மனித மகோன்னதம்.

எம்.ஐ.எம்.அஷ்ரப்,
சாய்ந்தமருது - 07

பிரசவம் ஒரு இயற்கை நிகழ்வு. உலகில் 3 விநாடிக்குள் ஒரு குழந்தை பிறக்கின்றது. ஆனால் ஒவ்வொரு தாய்க்கும் இது வாழ்வில் ஓர் முக்கியமான காலம். மகிழ்ச்சி, பயம், கடின உழைப்பு கலந்த ஓர் புதிய அனுபவம்.

கர்ப்ப காலத்தில் தாய்மாருக்கு மனதில் எழும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்திலும் கர்ப்ப காலத்தில் ஏற்படும் மாற்றம், பிரச்சினைகள் என்பவற்றை விளக்கவும் எடுத்த முயற்சி இது. சற்று ஆழமாக காலை வைத்திருப்பதாக தோற்றலாம். ஆனால் இந்த கணினி யுகத்தில் கண்ணாடித் தன்மை (Transparency) அவசியமென நான் கருதுகின்றேன். மருத்துவம் மூடுமந்திரமாய் இருந்த காலம் விண்ணேறிவிட்டது. நோயாளிகள் தங்கள் பிரச்சினைகளை நன்கு விளக்கமாக அறியவிளைகின்றனர்.

**Dr. சி.நவநீதன்**




# கர்ப்ப காலத்தில் உடலில் ஏற்படும் மாற்றங்கள்

வளரும் குழந்தைக்குத் தக்க சூழலை கொடுப்பதற்காக தாயின் உடலில் முக்கிய மாற்றங்கள் நிகழ்கின்றன. இதேபோல், தாயின் உளநிலையிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

**முதல் 3 மாதங்கள்**

இது மிகவும் முக்கியமான கால கட்டமாகும். குழந்தையின் பெரும்பாலான அவயவங்கள் 3 மாதங்களுக்குள் தோன்றி விடும். எனவே இக்காலத்தில் தாயின் உடல்நிலையில் ஏற்படும் பாதிப்புகள் குழந்தை உருவாதலில் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடும். இதன்காரணமாகவே முதல் 3 மாதங்களிலும் தேவையற்ற மருந்துகளை தவிர்க்கவேண்டும்.

பெரும்பாலான கருச்சிதைவுகள் (Miscarriage) இக்காலத்திலேயே நிகழ்கின்றன. ஒரு கரு, 3 மாதங்களிற்குள் பிரச்சினை எதிலும் இருந்து தப்பினால் அது ஒரு முழுக்குழந்தையாக 95% சாத்தியம் இருப்பதாகக் கூறுவர். இதனாலேயே தாய்மார்கள் தாம் கர்ப்பமுற்ற செய்தியை 3 மாதங்கள்வரை வெளியே சொல்ல விரும்புவதில்லை.

முதல் 3 மாதங்களே தாய்க்கு மிக அசௌகரிக மான காலமகும். முக்கியமாக வாந்தி, உடல் களைப் படைதல், தலைச்சுற்று என்பன இக்காலத்திலேயே ஏற்படு கின்றது.

இக்காலகட்டத்திலே தாய் உணவை தவிர்ப்பதால் சிலருக்கு உடல் மெலிவுகூட ஏற்படும். உடலில் ஏற்படும் ஹோர்மோன்களே இந்தப் பிரச்சினைக்கு காரணமாகும்.

உடலில் ஏற்படும் மாற்றங்களால் அசாதாரண-மான களைப்பும் மனச்சோர்வும், தலைச்சுற்றும் ஏற்படும். உங்கள் மனம், கர்ப்பமுற்றிருக்கும் சந்தோஷமான விடயத்தை சிலநேரங்களில் மறந்து இனம்புரியாத கவலைகள் ஆட்கொள்ளும். இவையெல்லாம் அந்த ஹோர்மோன்களின் வேலையே. உங்கள் கவலைகளையும், சந்தோஷங்களையும் கணவருடனோ அல்லது உங்கள் நெருங்கிய உறவி-னருடனோ பகிருங்கள்.



(தொடரும்)



# தண்ணீர் தரும் நன்மைகள்

உலகிலேயே மிகவும் சிறப்பான ஒரு அழகுப்பொருள் என்றுசொன்னால், அது தண்ணீர்தான். தண்ணீர் குடிப்பதால், உடலுக்கு மட்டுமின்றி, சருமத்திற்கும் நிறைய நன்மைகள் கிடைக்கின்றன. அதிலும் தண்ணீரைக் குடிப்பதால், உடலில் உள்ள ஒவ்வொரு செல்களும் நன்கு ஆரோக்கியமாக செயல்படும். தண்ணீர் உடலிலுள்ள நச்சுக்களை வெளியேற்றுவதால், நச்சுக்களால் உடல் மட்டுமின்றி, சருமம் மற்றும் கூந்தலும் ஆரோக்கியமாக இருக்கிறது. சரி, இப்போது அந்த தண்ணீரினால் கிடைக்கும் சில அழகு நன்மைகளைப் பற்றி பார்ப்போமா.

தினமும் தண்ணீரை போதுமான அளவில் குடித்துவந்தால், உடலில் வறட்சி ஏற்படுவதை தவிர்க்கலாம். மேலும் சருமமும் வறட்சியின்றி, மென்மையாக இருக்கும். இளமையிலேயே சருமத்தில் ஏற்படும் சுருக்கத்தை தவிர்க்கலாம். நீர்ச்சத்து உடலில் குறைவாக இருந்தால், கண்கள் பொலிவிழந்து காணப்படும். எனவே தண்ணீரை தினமும் போதியளவில் குடித்துவந்தால், நீர்ச்சத்து அதிகரித்து கண்கள் பளிச்சென்று காணப்படும். மேலும் தண்ணீரைக்கொண்டு பொலிவிழந்த கண்களை கழுவினாலும், கண்களில் உள்ள நச்சுக்கள் வெளியேறி கண்கள் அழகாக இருக்கும்.

வெதுவெதுப்பான நீரில் ஒரு துணியை நனைத்து, அதனைக்கொண்டு முகத்தை துடைத்தால், சருமத்துளைகளில் தங்கியிருக்கும் அழுக்குகள் அனைத்தும் வெளியேறி, பருக்கள் வருவதைத் தடுக்கும். குறிப்பாக இதனை தினமும் செய்துவர நல்ல மாற்றம் தெரியும்.

தண்ணீர் தெரபி எடுக்கும்போது, வெதுவெதுப்பான தண்ணீரைப் பயன்படுத்தினால், இறுதியில் குளிர்ந்த நீரை ஒரு முறை பயன்படுத்தவேண்டும். ஏனெனில் வெதுவெதுப்பான தண்ணீர் சருமத்துளை களை திறக்கவும், குளிர்ந்த நீர் திறந்த சருமத்துளைகளை மூடவும் உதவியாக இருக்கும். இதனால் தேவையற்ற மாசுக்கள் சருமத் துளைகளில் தங்குவதை தவிர்த்து, சருமத்தை பொலிவோடு வைத்துக்கொள்ளலாம்.

இளமையை தக்கவைக்க தண்ணீர் ஒரு சிறந்த மருந்து. ஏனெனில் இது சருமத்தின் நெகிழ்வுத்தன்மையை சீராக பராமரித்து, சுருக்கம், சரும வறட்சி போன்றவற்றை தடுத்து, எப்போதும் இளமையான தோற்றத்தை தக்க வைக்கும்.

உதடுகளின் அழகைக் கெடுப்பதே வறட்சிதான். ஆகவே அத்தகைய வறட்சியை போக்க, தண்ணீர் அதிகம் பருகினால், போதிய நீர்ச்சத்து கிடைத்து, உதடுகள் எப்போதும் அழகாக வெடிப்புக்களின்றி இருக்கும்.

தண்ணீர் அதிகம் குடித்தால், சாப்பிடும் அளவு குறைந்து, செரிமான மண்டலம் சீராக இயங்கி, உடல் எடை குறைவிற்கு பெரிதும் துணையாக உள்ளது.

தண்ணீரை தினமும் போதுமான அளவில் பருகினால், உடலின் வெப்பநிலையானது சீராக பராமரிக்கப்பட்டு, உடலை மற்ற பிரச்சினைகளில் இருந்து பாதுகாக்கும்.

குடிக்கும் நீரின் அளவை அதிகரித்தால், உடல் துர்நாற்றத்தில் இருந்துவிடுபடலாம். எப்படியெனில் தண்ணீர் அதிகம் குடித்தால், உடலில் உள்ள நச்சுக்கள் சிறுநீர் வாயிலாக வெளியேறுவதால், அளவுக்கு அதிகமாக வியர்வை வெளியேறுவதைத் தவிர்க்கலாம்.

# தழும்புகள் மறைய வேண்டுமா?

பருக்கள் வருவதைவிட, அவை விட்டுச்செல்லும் வடுக்கள் தான் அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றன. முதலில் வடுக்கள் ஏன் ஏற்படுகின்றன என்றால், முகப்பரு வந்ததும் அதனை நகத்தால் கீறுகிறார்கள். நகம்பட்டாலே வடு விழுந்துவிடும்.

அதனை உடனடியாக போக்கமுடியாது. சிறிது காலம் பிடிக்கும் சிலருக்கு பருக்கள் வந்து முகத்தில் சிறிய பள்ளங்களே ஏற்பட்டிருக்கும். முகப்பரு வந்தால் அதனை நீக்குவதற்கு முன்பு, ஐஸ்கட்டிகளால் ஒத்தடம் கொடுத்த பிறகு அதில் கைவைப்பது நல்லது.

பொதுவாக பருக்கள் வந்தால் அது முற்றியநிலையில் அதில் இருக்கும் வெள்ளையான திரவத்தை எடுத்துவிடுவது மிகவும் முக்கியம். அதிலும் மற்ற இடங்களில் அவைபடாமல் எடுக்க வேண்டியதும் அவசியமாகிறது. மேலும், பருவை நீக்குவது என்பதை கவனமாக செய்யவேண்டும். பருவை கைகளால் கிள்ளி எடுத்துவிடுகிறோம்.


அதில் இருந்து வெள்ளையான திரவம் வெளியான பிறகு இரத்தம் வரும். அதனை துடைத்துப் போட்டுவிட்டு அப்படியே விட்டுவிடக் கூடாது. அப்படி விட்டுவிட்டால்தான் பருக்கள் பரவுகிறது. பருக்கள் வந்தால் அதனை நீக்கியதும் உடனடியாக அதனை சுத்தப்படுத்தி விட்டு அதில் ஏதாவது ஒரு பேஸ்பேக்கை (க்ரீம்) போடவேண்டும்.

பருக்களினால் ஏற்பட்ட வடு நிச்சயமாக போகும். அதற்கு ஒரு நீண்ட சிகிச்சை உள்ளது. முதலில் பரு உள்ளவர்கள் பேஷியல் செய்து கொள்ளவேகூடாது. ஒருவரது சருமத்தில் அதிகப்படியான எண்ணெய் பசை இருந்தால் பரு வரும்.

மேலும், பேஷியலின் போது பயன்படுத்தும் க்ரீம்கள் அனைத்திலும் அதிகப்படியான எண்ணெய் பசைதான் இருக்கும். எனவே அவர்களது சருமத்தை பேஷியல் மேலும் சிக்கலாக்கும். முகத்தில் அதிக மான பருக்கள் இருப்பவர்கள் அவசியமாக பேஷியல் செய்தே ஆகவேண்டும் என்று நினைத்தால் முதலில் ஒரு மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுவிட்டு பிறகு பேஷியல் செய்துகொள்ளலாம். ப்ளீச் செய்யலாம். ஏனெனில் ப்ளீச் செய்வதால் முகத்தில் இருக்கும் எண்ணெய் தன்மை நீக்கப்பட்டுவிடும். எனவே ப்ளீச்சிங் செய்துகொள்ளலாம்.



# முட்டைக்கோஸின் மருத்துவம்



முட்டைக்கோஸ் கீரை வகையைச் சேர்ந்தது. இதில் உயிர்ச்சத்துக்கள், தாதுக்கள் நிறைந்துள்ளன. உடலுக்கு ஊட்டம்தரும் உணவாகும். உடல் வளர்ச்சிக்கு முட்டைக்கோஸ் மிகவும் சிறந்தது. முட்டைக்கோஸின் மேல் பகுதியில் மூடியிருக்கும் முற்றிய காய்ந்த இலைகளை நீக்கிவிட்டு சிறிதாக நறுக்கி பாசிப்பயறுடன் சேர்த்து கூட்டாகவோ அல்லது பொரியலாகவோ செய்து சாப்பிடலாம்.

**முட்டைக்கோஸ் உண்பதால் ஏற்படும் நன்மைகள்:**

கண் பார்வைக் கோளாறுகளைப் போக்கும். கண் பார்வை நரம்புகளை சீராக இயங்கச்செய்யும். இதில் உள்ள விற்றமின் ஏ சத்து கண் பார்வைக்கு சிறந்தது.

மூலநோயின் பாதிப்பைக் குறைக்கும். அஜீரணத்தால் உண்டாகும் வயிற்றுவலியை நீக்கும். சரும வறட்சியை நீக்கும். சருமத்திற்கு பொலிவைக் கொடுக்கும். வியர்வைப் பெருக்கியாக செயற்படும். சிறுநீரை நன்கு பிரித்து வெளியேற்றும். எலும்புகளுக்கு வலுக்கொடுக்கும். இதில் சுண்ணாம்புச்சத்து அதிகமிருப்பதால் எலும்புகளும் பற்களும் உறுதியாகும். பெண்களுக்கு மெனோபாஸ் காலங்களில் உண்டாகும் கல்சியம், பொஸ்பரஸ் இழப்பை முட்டைக்கோஸ் ஈடுசெய்யும். நரம்புகளுக்கு வலுகொடுக்கும். நரம்புத்தளர்ச்சியைப் போக்கும்.

தொற்றுநோய்கள் ஏற்படாமல் தடுக்கும். உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். முட்டைக்கோஸை நீரில்போட்டு சிறிதுநேரம் ஊறவைத்து அந்த நீரைக்கொண்டு முகம்கழுவினால் வறட்சியான சருமம் பளபளப்படையும். உடல் சூட்டைத்தணிக்கும். நாட்பட்ட மலச்சிக்கலைப் போக்கும். குடல்சளியைப் போக்கும். இரத்தத்தை சுத்தப்படுத்தும். தலைமுடி உதிர்வதைக் குறைக்கும். மயிர்க்கால்களுக்கு பலம் கொடுக்கும். எனவே, முட்டைக்கோஸின் பயன்களை அறிந்து அதனை நம்உணவில் சேர்த்து நீண்ட ஆரோக்கியம் பெறுவோமாக..!

# தாய்ப்பால் சுரக்க...

பிறந்த குழந்தைகளின் முதல் உணவு தாய்ப்பால். தாய்ப்பாலில் இருந்துதான் குழந்தைகளுக்கான அனைத்துவிதமான ஊட்டச்சத்துக் களும் கிடைக்கிறது. இதனால்தான் 6 மாதங்கள்வரை குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுக்கவேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர். உடல்நிலை காரணமாகவும், சத்தான உணவுகளை உட்கொள்ளாததாலும் சில பெண்களுக்கு தாய்ப்பால் சுரப்பதில் பாதிப்பு ஏற்படும். தாய்ப்பால் சுரக்காத பெண்கள் வீட்டிலேயே எளிதான மருத்துவ முறைகளை கையாள்வதன் மூலம் குழந்தைகளுக்கு தேவையான அளவு தாய்ப்பால் சுரக்கும்.

அதிமதுரம் பொடியை சிறிதளவு சீனி கலந்து 2 முறை பாலுடன் குடித்துவந்தால் தாய்பால் பெருகும். அறுகம்புல் சாறுடன் தேன்கலந்து சாப்பிட்டுவந்தால் தாய்ப்பால் பெருகும்.

முருங்கை கீரையை லேசாக தண்ணீர்விட்டு வேகவைத்து அதை தாளித்து சாப்பிட்டால் தாய்ப்பால் அதிகரிக்கும். முருங்கை இலையும் பாசிப்பருப்பும் சேர்த்து சாப்பிட்டால் தாய்ப்பால் அதிகம் சுரக்கும்.

குழந்தைபெற்ற பெண்களுக்கு வெள்ளை பூண்டை நல்லெண்ணெயில் வதக்கி அதனுடன் கருப்பட்டியுடன் கலந்து சாப்பிடக்கொடுத்தால் தாய்ப்பால் அதிகம் சுரக்கும். இது உடல் ஆரோக்கியத்திற்கும் நல்லது. உடலில் உள்ள தேவையற்ற கழிவுகளை வெளியேற்றவும் வெள்ளைப் பூண்டு உதவுகிறது. கருப்பட்டியில் உள்ள இரும்புச்சத்து தாய்ப்பால் வழியாக குழந்தைகளுக்கு போய்ச்சேர்கிறது. மேலும் பசும்பாலில் பூண்டு சேர்த்து அரைத்து காய்ச்சிக் குடித்தால் பால் அதிகம் சுரக்கும்.



பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

## லேடிஸ் ஸ்பெஷல்

# பெண் குழந்தைகளின் வளர்ப்பு!



பிறந்த பெண் குழந்தைகள் தொடங்கி 80 வயது வரை உள்ள பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதற்கு இப்போது ஊடகங்களில்வரும் செய்திகளே ஆதாரம்.

பெண் குழந்தைகளின் வளர்ப்பில் தாயின் அன்பும், அரவணைப்பும் கட்டாயமாக தேவைப்படுகிறது. பெண் குழந்தைகளின் வளர்ப்பில் தாய்மார்கள் தங்களின் பொறுப்பை உணர்ந்து செயற்படவேண்டும்.

வீட்டைவிட்டு வெளியே செல்கிற பெண் குழந்தைகள் யாரிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும். எத்தகைய பாதுகாப்பான இடைவெளியைப் பின்பற்றவேண்டும் என்பதை கட்டாயம் கற்றுத்தர வேண்டும்.

இந்தக் காலத்தில் ஆணும், பெண்ணும் வேலைக்கு சென்றால்தான் குடும்பத்தை நிர்வகிக்க முடியும் என்றநிலை வந்துவிட்டது. வேலைக்கு போகிறோம், சம்பாதிக்கிறோம், என்று சொல்லிக்கொண்டு பெண் குழந்தைகளை அலட்சியமாகவிட்டு விடுதல்கூடாது. அதேபோன்று வீட்டில் இருக்கும் பெண்கள் எப்போதும் தங்கள் வீட்டுப்பணிகளை செய்வதில் நேரத்தை செலவிடாமல், பெண் குழந்தைகளின் கவனிப்பில் அக்கறை செலுத்தவேண்டும்.

குழந்தைகள் பள்ளிக்கும், டியூஷனுக்கு செல்லும்போது மற்றவர்களின் துணையை நாடுவது ஆபத்தை விளைவிக்கும். முடிந்தவரையில் பெண் குழந்தைகளை தாய்மார்கள் அழைத்துச்சென்று வருவது பாதுகாப்பாகும்.

பெண் குழந்தைகளின் ஒவ்வொரு நடவடிக்கையையும் தாய்மார்கள் கவனிக்கவேண்டும். அதற்கென்று எதற்கெடுத்தாலும் கண்டிப்புக்கூடாது. இதனால் தேவையற்ற மன உளைச்சலுக்கு தள்ளப்பட்டு, எல்லா விஷயங்களையும் மறைக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றும். பெண் குழந்தைகளை தன்னுடைய மகளாக நினைக்காமல் தோழியாக கருதி, அனைத்து விஷயங்களையும் வெளிப்படையாக பகிர்ந்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு ஒவ்வொரு தாய்மார்களும் பெண் குழந்தையை பாதுகாத்து, அரவணைத்து செயற்பட்டால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படாமல் தவிர்க்கலாம்.



# பெண்களை தாக்கும் இடுப்புவலி

பெண்களாகப் பிறந்த எல்லோரும், ஏதோ ஒரு வயதில் அனுபவித்தே தீரவேண்டிய வலி, இடுப்பு வலி. பெண் ஜென்மத்தையே வெறுக்கும் அளவுக்கு சிலருக்கு அந்த வலி நரகவேதனையாக அமைவதும் உண்டு.

பெண்களின் வாழ்க்கையில் தவிர்க்க முடியாதது கீழ் இடுப்பு வலியும், வயிற்று வலியும். வயதுக்கு வந்ததில் இருந்து ஆரம்பிக்கின்ற இந்த வலி, வயதான பிறகும் தொடரும். பெண்களில் 10சதவீதம் பேர் தொடர்ச்சியான கீழ் இடுப்புவலி மற்றும் தீவிர இடுப்பெலும்பு வலியால் அவதிப்படுகிறார்கள். வயசுக்கேற்றபடி வலிக்கான காரணமும் மாறும்.

மாதவிடாய் சம்பந்தப்பட்ட இடுப்பு மற்றும் வயிற்று வலி டீன் ஏஜ்ஜில் இருந்து, நடுத்தர வயதுக்காரர்கள் வரைக்கும் வரும். நடுத்தர வயதில் கர்ப்பப்பை சம்பந்தமான பிரச்சினைகளால் வலி வரலாம்.

இதுதவிர பெல்விக் இன் ஃப்ளமேஷன் டிசீஸ் என்று சொல்லக் கூடிய கிருமித்தொற்றாலேயும் வயிறு மற்றும் இடுப்புவலி வரலாம்.

வலீக்கு காரணமான அந்தக் கிருமித்தொற்றை சரிசெய்தால் உடனே நிவாரணம் தெரியும். இந்த மாதிரி இடுப்பு வலியோடுகூடவே வெள்ளைபடுதலும் இருக்கும். சினைப்பையில் உண்டாகின்ற கட்டியின் காரணமாகவோ, அந்தக் கட்டி சுருண்டுகொள்வதாலேகூட தீவிரமான இடுப்புவலி வரும்.

கர்ப்பப்பைக்கு வெளியே உண்டாகின்ற கர்ப்பமும் இந்த வலிக்கு ஒரு .காரணம். பெருங்குடல் அல்லது மலக்குடலில் உண்டாகிற கிருமித்தொற்று, அப்பென்டிக்ஸ் என்று சொல்கின்ற குடல் வால் பிரச்சினை. ஏற்கனவே செய்த ஏதோ அறுவைச்சிகிச்சையின் தொடர்ச்சி, அது உண்டாகின்ற அடைப்பு வயிறு மற்றும் இடுப்பு வலிக்கு பல காரணங்கள் இருக்கலாம்.

வயதானவர்களுக்கும், நடுத்தர வயதுக்காரர்களுக்கும், இடுப்பெலும்பில் உண்டாகின்ற வலி, கீழ் இடுப்பு வலியாக உணரப்படும். இளவயதில் உண்டாகின்ற இடுப்பு, வயிற்று வலிக்கு மாத்திரைகள், ரிலாக்ஸ் செய்ய வைக்கின்ற உடற் பயிற்சிகளே போதும். மாதவிலக்கால் வருகின்ற வலிக்கும் மருத்துவரைக்கேட்டு மாத்திரைகள் எடுத்துக்கொள்ளலாம். சுருண்டுகொண்டு சினைப்பை கட்டி, கர்ப்பப்பைக்கு வெளியே உண்டாகின்ற கர்ப்பம் அப்பெண்டிக்ஸ் மாதிரி சிலதுக்கு உடனடியாக அறுவைச்சிகிச்சைதான் தேவைப்படும்.

அடிப்படை சுகாதாரப் பழக்கங்களை கடைப்பிடிக் கிறது, கிருமி நோய்க்கான மருந்துகள் எடுத்துக்கொள்வது மூலமாக கிருமித்தொற்றால் உண்டாகின்ற இடுப்புவலியை விரட்டலாம்.

இடுப்பு எலும்புகள் சந்திக்கின்ற இடம் தளர்ச்சி யடைந்து, அதுமூலமாக வலிவந்தால் வலி அறிகுறி களை வைத்து அதைக் கண்டுபிடித்து, ரேடியோ ஃப்ரீக்வன்சி மாதிரியான சிறப்பு சிகிச்சைகள்மூலம் சரி செய்யலாம் என்கிறார் மருத்துவர்.



## பளபள கூந்தல் வளர்ச்சிக்கு...

**ஹேர் ஸ்கிரைப்பர் :** முடியில் ஷம்பு போடும்போது விரலால் மண்டையோட்டு பகுதியில் மசாஜ் செய்வதை மேலும் சிறப்பாக செய்ய ஹேர் ஸ்கிரைப்பர் உதவும். இறப்பரால் உருவாக்கப்பட்ட இதன் பற்கள், மண்டையோட்டுப் பகுதி சருமத்தில் பட்டு இரத்த ஓட்டத்தை அதிகரிக்கும்.

**ஹேர் மூஸ் :** ஷேவிங் நுரை வடிவத்தில் காணப்படும். இதை பயன்படுத்தினால் கூந்தலின் உள்பகுதி அடர்த்தியாக இருப்பதுபோல் தோன்றும்.

**ஹேர் சிரம் :** கூந்தலுக்கு பொலிஷிங் எபக்ட் கிடைப்பதற்கு உதவும். ஜொலிப்பு அதிகரிக்கும். முடி, ஒன்றுக்கு ஒன்று ஒட்டாமல் பிரிந்து அழகாகக் காணப்படும்.

**ஹேர் மாஸ்க் :** முடியை மென்மையாக்கும். இந்த மென்மைக்காகத் தான் ஹேர் கண்டிஷனர் பயன்படுத்திவருகிறோம். ஹேர் மாஸ்க் அதன் நவீனமாகும். மொராக்கோ ஒயில், முடிக்கு பலத்தை தருவது சுரோட்டினாகும். அதன் இழப்பை ஈடுகட்டுவதால், முடி பலம்பெறும்.

## குலாப் ஜாமூன்

**தேவையானவை:**
சீனி சேர்க்காத கோவா - 300 கிராம், மைதா - 100 கிராம், பால் - சிறிதளவு (அழுக்கு நீக்க), சீனி - அரை கிலோ, தண்ணீர் - 300 மில்லி (ஒரு பெரிய டம்ளர்), எண்ணெய் - தேவையான அளவு.

**செய்முறை:** கோவாயையும், மைதாவையும் சேர்த்துப் பிசைந்துகொள்ளவும். சீனியும், தண்ணீரையும் சேர்த்துக் கலந்து கொதிக்க விடவும். பிசுக்கு பதம்வந்ததும், சிறிது பால்விட்டு அழுக்கு நீக்கி, வடிகட்டி தனியே வைத்துக்கொள்ளவும். கோவா - மைதா கலவையைப் சிறுசிறு உருண்டைகளாக உருட்டி எண்ணெயில் பொன்னிறமாகப் பொரித்துக்கொள்ளவும் (அடுப்பை சிறு தீயில் வைக்கவும்). பின் சீனி பாகில்போட்டு, சில மணிநேரம் ஊறியபின் பரிமாறவும்.



## இடுப்பு சதை குறைய...

இன்றைய பெண்கள் தொப்பை மற்றும் இடுப்பின் அதிகப்படியான சதையால் பெரிதும் கவலைப்படுகின்றனர். இதற்காக உடற்பயிற்சி கூடத்திற்கு போய்தான் பயிற்சி செய்ய வேண்டும் என்பதில்லை. வீட்டிலேயே செய்யக்கூடிய எளிய உடற்பயிற்சியை பார்க்கலாம்.

இந்த பயிற்சியை தொடர்ந்துசெய்து வந்தால் 3 மாதத்தில் இடுப்பு சதை குறைவதை காணலாம். பயிற்சி செய்முறை விரிப்பில் நேராக படுத்துக்கொள்ளவும். பின்னர் வலதுபக்கமாக திரும்பி படுத்துக் கொள்ளவும். வலது காலின் மேல் இடது கால் இருக்கவேண்டும்.

மெதுவாக வலது கையை தரையில் ஊன்றி உடலை மெதுவாக மேலே உயர்த்தவும். இடதுகையை இடுப்பில் வைத்துக்கொள்ளவும். சில விநாடிகள் இந்த நிலையில் இருந்த பின்னர் பழைய நிலைக்கு வரவும்.

இவ்வாறு வலது பக்கம் 20 முறை செய்யவும். பின்னர் அடுத்த பக்கம் திரும்பி இடது பக்கம் இதே போல் 20 முறை செய்யவும். இவ்வாறு மாறிமாறி செய்யவேண்டும்.

ஆரம்பத்தில் 10 முறை செய்தால் போதுமானது. பின்னர் எண்ணிக்கையின் அளவை அதிகரித்து 20 முறைக்கு மேல் செய்யலாம். இந்த பயிற்சியை தொடர்ந்து தினமும் செய்துவந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

## வாசகர்களின் கவனத்திற்கு...

முரசு வாசகர்களின் உரிமையான வேண்டுகோளுக்கு அமைவாக.
(முரசு 1021 - வாரமொரு அதிர்ஷ்டசாலி - 375)
இப்போட்டியிலிருந்து வெற்றியாளருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூபா 250/= என்பதை அறியத்தருகின்றோம்.

**250/= ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**

**பரிசுப் போட்டி இல :-389**

**கேள்வி:** பெண் குழந்தைகளின் வளர்ப்பில் தாய்மார்கள் கவனம் செலுத்தவேண்டிய விடயங்கள்?

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 14.10.2013**

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 389
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :-387 இற்கான விடை:- அரசியல், பாலியல் விடயங்கள், மதம் சார்ந்த கருத்துக்கள்.
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி:- ஜே.எச்.பாத்திமா ஜெம்ஸிறா, 2ம் குறுக்குத்தெரு, நிந்தவூர்.

389

பெயர் : ..................
முகவரி : ..................
..................
தே.அ. அட்டை இல : ..................
விடை : ..................
..................
கையொப்பம் : ..................

உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டிருக்கின்றன.

### அதென்ன 'ஒபாமா கேயர்'...?

தமிழ்நாட்டில் 'கலைஞர் காப்பீட்டுத் திட்டம்' போல், 'ஒபாமா கேயர்' என்ற பெயரில் அமெரிக்காவில் பிரபலமாக அழைக்கப்பட்ட ஒபாமாவின் சுகாதார நலத்திட்டமாகும். இது அமெரிக்காவில் அதிபர் ஒபாமாவின் 'கனவுத்திட்டம்' என்று சொல்லப்படுகிறது.

இத்திட்டத்திற்கு, எதிர்க்கட்சியினரான குடியரசுக்கட்சியினர் அதிக எண்ணிக்கையில் உள்ள பிரதிநிதிகள் சபையில் ஆதரவு கிடைக்காமல் தீர்மானம் நிறுத்திவைக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல் இந்த மசோதா நிறைவேற்றுவதற்கான காலக்கெடுவும் முடிவடைந்துவிட்டது.

### அரச நிறுவனங்களுக்கு மூடுவிழா

இப்படிப்பட்ட பொருளாதார சீர்கேடுகள் நிறைந்த கடுமையான சூழ்நிலையில் அமெரிக்காவில் உள்ள அரசு நிறுவனங்களை தற்காலிகமாக மூடிவிடுவதென முடிவெடுத்து வெள்ளை மாளிகையிலிருந்து அதிபர் ஒபாமா கெடுபிடியான - அபாயகரமான உத்தரவை பிறப்பித்துள்ளார். இதனால் அமெரிக்க அரசு நிறுவனங்களில் வேலைசெய்யும் சுமார் 8இலட்சம் அரசு ஊழியர்கள் சம்பளமின்றி கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டுள்ளனர். மேலும் இலட்சக்கணக்கான பேர் பணியிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்நிலை எத்தனை நாட்களுக்கு நீடிக்கும் என்பதையும் ஒபாமா அறிவிக்கவில்லை. நாடு சந்தித்துக்கொண்டிருக்கும் இவ்வளவு மோசமான சூழ்நிலையைப் பற்றி அமெரிக்க மக்களிடமும்கூட ஒபாமா இதுவரை விளக்கம் அளிக்கவில்லை. இதேநிலை 15 நாட்களுக்கு மல் நீடித்தால், 2009ஆம் ஆண்டு அமெரிக்கா ந்தித்த 'ரெசஷன்' என்று சொல்லக்கூடிய

> **உலகத்திலேயே தன்னை ஒரு 'பொருளாதார வல்லரசாக' தம்பட்டம் அடித்துக்கொள்ளும் அமெரிக்காவில் புதிய நிதியாண்டிற்கான பட்ஜெட் நிதிப்பற்றாக்குறை காரணத்தால் நிறைவேற்றப்படாமல் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையில் வைக்கப்பட்ட புதிய நிதியாண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தில் 'ஒபாமா கேயர்' என்று அழைக்கப்படும் 'தனிநபர் சுகாதார காப்பீட்டு திட்டத்திற்கான' நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு அந்நாட்டின் எதிர்க்கட்சியான குடியரசுக்கட்சி கடும் எதிர்ப்பு தெரிவித்ததால் வரவு - செலவுத் திட்டத்திற்கு ஒப்புதல் கிடைக்காததால் நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. இதனால் அமெரிக்க அரசு இயந்திரமே செயலிழந்து தவிக்கிறது.**

பாருளாதார வீழ்ச்சி என்பது மீண்டும் தாகரமாய் உருவெடுக்கும் வாய்ப்பிருக்கிறது. தனால் அமெரிக்க மக்கள் மேலும் கப்பெரிய பொருளாதார நெருக்கடியில் க்கித் தவிப்பார்கள். வேலையை இழந்த வருமானத்தை இழந்த குடும்பங்கள் மையான அளவிற்கு பாதிக்கும் என்றும், யாபாரம் நடைபெறாமல் வருமானமில்லாமல் வேறு வியாபார நிறுவனங்களும் டப்படும் அபாயத்தில் உள்ளது என்றும் சொல்லப்படுகிறது. அமெரிக்க பங்குச்சந்தை வீழ்ச்சியுற்று 'வால் வீதியே' தம்பித்துள்ளது.

எல்லை பாதுகாப்பு, விமானப்போக்கு த்து கட்டுப்பாடு, உணவு துறை போன்ற னிகளில் பாதிப்பில்லை. அந்த பணிகளில் ள்ள ஊழியர்கள் வேலைக்கு வந்தனர். ஸ்போர்ட், விசா பணிகளும்கூட பெரிய வில் பாதிக்கவில்லை. மத்திய அரசின் ழியர்கள் எண்ணிக்கை 24 இலட்சம். அதில் ன்றில் ஒரு பங்கான 8 இலட்சம் பேர்தான் திக்கப்பட்டுள்ளனர்.

### நாடு கடனில் மூழ்கும் அபாயம்

அமெரிக்காவில் அரசுத்துறைகளை க்கச்செய்துள்ள அரசியல் நெருக்கடி த்து நிதித்துறையைச் சார்ந்தவர்கள் கறை காட்டவில்லையென்றால், நாடு னில் மூழ்கும் அபாயம் ஏற்படும் என பர் ஒபாமா எச்சரித்துள்ளார்.

தனது பட்ஜெட்டை நாடாளுமன்றத்தில் றவேற்றவிடாமல் தடுக்கும் குடியரசுக் சியினருக்கு நிதித்துறையினர்மூலம் நக்கடி கொடுக்கும்விதமாக சி.என்.பி.சி லைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் ர் இவ்வாறு கூறினார். பேட்டியில் ர் மேலும் கூறியதாவது: கடைசி டங்களில் சரிசெய்யப்பட்ட சமீபத்திய நெருக்கடிகளைப் போல, இந்த நக்கடியையும் எடுத்துக்கொள்ள முடியாது. முற்றிலும் மாறுபட்டது. அமெரிக்க அரசை னில் மூழ்கடித்துவிடும் தன்மைகொண்டது. நப் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்காக குடியரசுக் கட்சியினரின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறேன். ஆனால், தங்களது கோரிக்கைகளுக்காக அரசாங்கத்தை கட்சிகள் மிரட்டும் இந்தப் போக்கு, ஒரு தவறான முன்னுதாரணமாக அமைந்துவிடும் என்று அதிபர் ஒபாமா தெரிவித்தார்.

இந்த பேட்டியைத் தொடர்ந்து, அரசுத் துறைகளின் முடக்கத்துக்குப் பிறகு முதல் முறையாக நடைபெறும் குடியரசுக் கட்சி மற்றும் ஜனநாயகக் கட்சித் தலைவர்களுடனான சந்திப்பில் அவர் கலந்துகொண்டார். எனினும் இந்தச் சந்திப்பால் உடனடி பலன் ஏற்படாது என்று விவரம் தெரிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### திசை திருப்பல்

பட்ஜெட் நெருக்கடியை மக்கள் மறக்க, வேறு திசை திருப்பினார் ஒபாமா- அமெரிக்க கொமாண்டோக்கள் பாய்ந்தனர் லிபியாவிலும் சோமாலியாவிலும்!

லிபியா தலைநகர் திரிபோலி அருகே நடத்திய வேட்டையில் அமெரிக்க இராணுவத்திடம் அல்கொய்தா இயக்கத்தின் முக்கிய தளபதி அனாஸ் அல்-லிபி என்கிற நஜி அப்துல்-ஹமீத் அல்-ரூகை (49) என்பவர் பிடிபட்டார். இவர் லிபியா நாட்டில் அல்கொய்தா இயக்கத்தின் தலைவர் ஆவார். இவர் உயிருடன் பிடிபட்ட விவரத்தை அமெரிக்க அதிகாரிகள் உறுதிசெய்தனர்.

பிடிபட்ட அல்-லிபி கடந்த 1998ஆம் ஆண்டில் கென்யா மற்றும் தான்சானியாவில் நடைபெற்ற அமெரிக்கத் தூதரகம் குண்டு வெடிப்பில் தொடர்புடையவர். இந்த குண்டுவெடிப்புகளில் சுமார் 224 பேர் பலியானார்கள்.

இதனால் இவருடைய தலைக்கு அமெரிக்கா ரூ.30 கோடி பரிசுத்தொகை அறிவித்தது. பல ஆண்டுகளாக டிமிக்கி கொடுத்துவந்த இவர் கடந்த ஆண்டு திரிபோலியில் சுற்றித்திரிவது தெரியவந்தது. அதன்பிறகு அவரை அமெரிக்கா தீவிர மாக கண்காணித்துவர, இப்போது சிக்கிவிட்டார்.

### சோமாலியா இயக்கத் தலைவர் பலியா?

சோமாலியா நாட்டில் உள்ள பராவே நகர் பகுதியில் அல்-சாபாப் இயக்க தலைவரை குறிவைத்து அமெரிக்க கடற்படையில் சிறப்பு பிரிவினர் கடும் தாக்குதல் நடத்தினர். இந்த நடவடிக்கையில் தீவிரவாத இயக்கத் தலைவரை கொன்ற பிறகே அமெரிக்கப் படைகள் வாபஸ் ஆனதாக ஒரு தகவல் கூறுகிறது. ஆனால் இது அதிகாரபூர்வமாக உறுதியாகவில்லை.

இதுபற்றி அதிகாரிகள் கூறுகை யில், இந்த நடவடிக்கையில் அல்-சாபாப் இயக்கத்தை சேர்ந்த பலர் கொல்லப்பட்டனர். இராணுவத் தரப்பில் உயிர் இழப்போ, காயமோ ஏற்படவில்லை என்றனர். அல்-சாபாப் இயக்கம் தரப்பில் தெரிவிக்கையில், எங்கள் முகாம்மீது வெளிநாட்டு வீரர்கள் திடீர் தாக்குதல் நடத்தினர். அதில் ஒரு வீரரை தியாகம் செய்தோம் என்கிறது. அமெரிக்க வெளியுறவு மந்திரி ஜோன் கெர்ரி கருத்து கூறும்போது, "தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையை அமெரிக்கா நிறுத்தாது என்பது இதன்மூலம் தெளிவாக உறுதி செய்யப்படுகிறது. இவர்கள் புகலிடம் தேடி ஓடுகிறார்கள். இவர்களை பிடித்து நீதிமன்றம் முன்நிறுத்துவோம்" என்றார்.

பட்ஜெட் நெருக்கடியை மக்கள் மறக்க, வேறு திசை திருப்பினார் ஒபாமா! ஆனால், பட்ஜெட் நெருக்கடி தொடர்கிறது. இதன் பொருளாதார- வர்த்தகத் தாக்கம் அமெரிக்காவை மட்டுமல்ல உலகத்தையே பாதிக்கும்.

# கிழக்கின் மேய்ச்சல் தரை விவகாரம்

## விரைவில் தீர்வு கிடைக்கிறது

பிரகஸ்பதி

மேய்ச்சல்தரை விவகாரம் கிழக்கு மாகாணத்தில் பொதுவான பிரச்சினையாக இருந்தாலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் மேய்சல் தரைப் பிரச்சினையே பெரியளவில் எடுத்துப் பேசப்பட்டது என்றவகையில், அப்பிரச்சினைக்கு இன்னும் சில வாரங்களுக்குள் தீர்வு கிடைத்துவிடும் என்று நம்பிக்கொள்வோம்.

ஏன் இவ்வாறு ஒரு கருத்தை வெளியிட முடிகிறது என்பதற்கு கிழக்கு மாகாண சபையின் கடந்த அமர்வில், மேய்ச்சல் தரைகளில் அத்துமீறலான குடியேறுதல்கள் நடைபெற்றுவருவதாக வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை அடுத்து, காணி மற்றும் விவசாய அமைச்சர்கள் நேரடியாக விஜயம் செய்வதாக உறுதி அளித்துள்ளனர் என்ற தகவலே காரணமாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பொதுவான பிரச்சினையாக மேய்ச்சல் தரைக் காணிகள் விவகாரம் கடந்த மாதத்தில் நடைபெற்ற விவசாய ஆரம்பக் கூட்டங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டது. அதேபோலவே இம்மாதத்தின் மாகாண சபை அமர்விலும் உள்வாங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் கிழக்கில் உள்ள கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரைக் காணியில் விவசாயம் செய்யப்படுவதும், மேய்ச்சல்காணிகள் குறைவடைந்து வருவதும் அதனால் ஏற்பட்டுவரும் பிரச்சினைகள் குறித்து ஆராய்கிறது இந்தக் கட்டுரை.

மட்டக்களப்பு மாவட்டத்தின், வாகரை, கிரான், செங்கலடி, வவுணதீவு, பட்டிப்பளை பிரதேசசெயலக பிரிவுகளில் கிட்டத்தட்ட இரண்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம் கால்நடைகள் மேய்வதற்கு 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் மேய்ச்சல் தரைக் காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இக்காணிகள் பரம்பரை பரம்பரையாக பாரம்பரிய மேய்ச்சல் தரையாக பாவித்து வந்தது.

அண்ணளவாக ஐம்பது ஆயிரம் ஏக்கருக்கு மேல் மேய்சல்தரைக் காணிகளை பயன்படுத்தி வந்தபோதும் குளங்களை பெரிதாக்குதல், விவசாயச் செய்கைக்கு காணிகளை பயன்படுத்துதல் போன்றவற்றினால் மேய்ச்சல்தரை காணிகள் குறைக்கப்பட்டன. இதனால் மட்டக்களப்பின் ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளில் அண்ணளவாக 45ஆயிரம் ஏக்கருக்கு காணிகள் குறைக்கப்பட்டு கால்நடைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

ஒதுக்கப்பட்ட காணிகளையும் எல்லை பகுதியிலுள்ள மக்கள் அத்துமீறி விவசாயச்செய்கைக்கு பயன்படுத்தி வருகின்றனர். இதனால் கால்நடைகள் வளர்ப்பிற்கு இடமில்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இவைமட்டுமின்றி அத்துமீறி விவசாயம் செய்கின்றவர்களினால் கால்நடைகள் சுடப்படுவதும், கால்நடைகளை கட்டிவைத்து பணம் பறிப்பதும், கால்நடைகளை களவாக எடுத்துச்செல்வதும், கால்நடை வளர்ப்போரை இப்பகுதிக்கு வரவேண்டாம் என அச்சுறுத்தல் செய்வதும் தொடர்கின்றன.

இந்தநிலையில், கால்நடைகளுக்கென ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் தரைக்காணியில் அத்துமீறி விவசாயம் செய்யப்படுவதை தடுத்துநிறுத்தி ஆகவேண்டும் என்பது விவசாயிகள், கால்நடை வளர்ப்பாளர்கள் அடங்கிய மக்களதும் வேண்டுகோள்.

கிழக்கு மாகாண சபையில் இந்த மேய்ச்சல் தரை விவகாரம் பல தடவைகள் உரையாடப்பட்டபோதும், இன்னமும் இறுதி முடிவு எட்டாதநிலை காணப்படுவதனால் உறுதியான முடிவு வேண்டும் என்ற வாதங்களை அடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரமல்ல, கிழக்கு மாகாணத்தில் உள்ள கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரைக் காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக கிழக்கு மாகாண விவசாய அமைச்சர், காணி அமைச்சர் மற்றும் மத்திய அமைச்சர் ஒருவர் ஆகியோர் விரைவில் விஜயம் மேற்கொண்டு நேரடியாக ஆராய்வது என்று உறுதி வழங்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இருந்துவரும் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் கிழக்கு சபையில் கொண்டுவரப்பட்ட பிரேரணையின் அடிப்படையில் விவசாய அமைச்சர் ஹாபிஸ் நசீர் அகமட், காணி அமைச்சர் விமலவீர திசாநாயக்க ஆகியோர் விஜயம்செய்து நேரடியாகப் பார்வையிட்டுத் தீர்வைப் பெற்றுத்தர வேண்டும். இல்லையேல் மீண்டும் பெரியளவில் பிரச்சினைகள் வெடிக்கும் என்பது நிலைப்பாடாகும்.

அந்தவகையில், அமைச்சர்களின் விஜயம் எவ்வாறான தீர்வைத் தரப்போகிறது என்பதே இப்போதைய எதிர்பார்ப்பாக இருக்கிறது. கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைக்காக ஒதுக்கப்பட்ட காணிகளில் அத்துமீறி விவசாயம் செய்வதை தடுத்துநிறுத்தி கால்நடைகளுக்கென வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தல் வேண்டும் என்பது தற்போது மாகாண சபையில் முன்வைக்கப்பட்ட முக்கிய அழுத்தமாக தெரிகிறது.

ஏற்கனவே அரச அதிகாரிகள் வர்த்தமானிப் பிரகடனம் மேற்கொள்வதாக உறுதியளித்திருந்தபோதும் அத்துமீறிய விவசாயம், மேய்ச்சல் தரைகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுதல் போன்றவற்றில் அரச அதிகாரிகள் பாராமுகமாகவே இருந்துவருகின்றனர். இருந்தாலும் மாகாண சபை அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த அமைச்சர்களின் உறுதிமொழியானது மேய்ச்சல் தரை விவகாரத்தில் ஒரு தீர்வைத்தர வேண்டுமென பாதிக்கப்படுபவர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

மண்முனை மேற்கு (வவுணதீவு) பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள உன்னிச்சை 184ஏ கிராமசேவையாளர் பிரிவில், வெட்டிப்போட்டசேனை - மணலேத்தம், மாவலையாறு ஆறு போன்ற இடங்களில் 40 ஏக்கர் காணியில் பல வருடகாலமாக சிறிய வீடுகளை அமைத்து விவசாயம் செய்துவருகின்றனர்.

குதம்பா கதிரவேல்மலை அருகில் குதம்பா பகுதியில் மூன்று குடும்பங்களும், ஊர்காவல் படையினரும் 400 ஏக்கருக்கு மேற்பட்ட காணியில் விவசாயம் செய்கின்றனர். வெள்ளைக்கல் தளவாய் மலை -2 குடும்பங்களும் 20 ஏக்கர் காணியிலும் அத்துமீறி குடியேறியுள்ளர்.

கறுவாச்சோலை குளத்தருகில் மூன்று குடும்பங்கள் 40 ஏக்கர் காணி மேற்குறிப்பிட்ட இப்பகுதிகளில் 2004ஆம் ஆண்டுக்குப் பிறகு ஊர்காவல் படையினரும் ஒருசில சிங்கள மக்களும் அரச அனுமதியற்ற முறையில் காணிகளைப் பிடித்து விவசாயம் செய்வதோடு, வீடுகளையும் அமைத்து வருகின்றனர். இப்பகுதியில் பல காணிகள் மேய்ச்சற்தரைக்கு ஒதுக்கப்பட்ட காணிகளாகும். இப்பகுதிக்குச் செல்லும் கால்நடைகளை சுருக்குவைத்துப் பிடித்து, கால்நடை உரிமையாளர்களிடமிருந்து பல்லாயிரக்கணக்கான பணத்தை அறவிடுகின்றனர்.

காந்திநகர்- 148சி கிராமசேவையாளர் பிரிவில், இருநூறுவில் கிராமம், சிப்பிமடுச்சந்தி இப்பகுதியில் 1985ஆம் ஆண்டு அண்ணளவாக 30 குடும்பங்கள் வசித்துவந்தனர். சிங்களப் பாடசாலையும், விகாரையும், இருந்தது குறிப்பிடத்தக்கது. தற்சமயம் சில குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டு மேலும் பல குடும்பங்களை இப்பகுதிக்கு கொண்டு வந்து கண்டியனாறு பகுதியை நோக்கியும், மங்களஓயா பகுதியை நோக்கியும் செல்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(தொடர்ச்சி 21 ஆம் பக்கம்)



# சின்ன மீன்கள்



இங்கிலாந்து - இலங்கை கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளுக்கு இடையில் ஐ.பி.எல் வரும் நிலையில் இலங்கை கிரிக்கெட் சபை தைரியமான சில முடிவுகளை எடுக்குமா என்றகேள்வி எழுந்துள்ளது. ஒரு பிரபல கிரிக்கெட் வீரர் பேசும் போது தேசிய அணியின் தேவை தான் பிரதானமானது. இதேவேளை ஐ.பி.எல். ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டுள்ளோம். இலங்கை கிரிக்கெட் சபை எவ்வாறான முடிவுகளை எடுக்கிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம் என்று கூறியிருக்கிறார்.


இதற்குமுன்னதாக 2011ல் இங்கிலாந்தில் ஒரு பயிற்சி ஆட்டத்தைத் தவறவிடும் அளவிற்கு இலங்கை வீரர்கள் ஐ.பி.எல். போட்டிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தார்கள். சுற்றுப்போட்டிக்கு முன்னதாகவே தெரிவுக்கான நடைமுறைக்காக வீரர்கள் இலங்கை வரவேண்டும் என்று விளையாட்டுத் துறை அமைச்சர் கேட்டிருந்தார். ஆனால் இலங்கைக் கிரிக்கெட் சபையின் உயர்மட்டம், ஐ.பி.எல். உடன் இணங்கிப்போய் வீரர்கள் இங்கிலாந்துக்குத் தாமதமாக செல்லலாம் என்று அனுமதி கொடுத்திருந்தார்கள். அமைச்சரின் அறிக்கைக்கு முன்னதாக இது நடைபெற்று முடிவடைந்திருந்தது.

ஆனால் இம்முறையும் இலங்கைக் கிரிக்கெட் சபையின் கடும் போக்குகளையும் மீறி ஐ.பி.எல். சார்ந்தோர் கடும் அழுத்தம் கொடுப்பர் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய கிரிக்கெட் சபையின் செல்வாக்கை எடுத்துக்காட்ட 2009 ஐ.பி.எல். பற்றிப் பேசுகிறார்கள் விமர்சகர்கள். இலங்கை கிரிக்கெட்டுக்கான பல வகை ஆதரவுகள் தவிர்க்கப்படும் என்று, இலங்கை எச்சரிக்கப்பட்டதாகவும், கிரிக்கெட் சபையின் தலைமையில் இருந்து அர்ஜுன நீக்கப்படவேண்டும் என்று அழுத்தம்கொடுக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டுகிறார்கள்.

இதேபோல கடந்த ஐ.பி.எல். போட்டிகளில் மஹேல, சங்கக்காரா, ஏஞ்சலோ மத்தியூஸ் அணித்தலைமைகள் ஏற்றிருந்த நிலையில் ஐ.பி.எல். இவர்களை விட்டுக்கொடுக்காது என்றே நம்பப்படுகிறது. இப்படியான சூழ்நிலையில் இலங்கை கிரிக்கெட் சபையின் நிதிவளம் சார்ந்த கையறு நிலையே மிகப்பெரிய பணபலம் வாய்ந்த இந்தியக் கிரிக்கெட் சபையிடம் கீழிறங்கிப்போகவேண்டிய 'நிலையை உருவாக்குகிறது என்று கூறுகிறார்கள் விமர்சகர்கள்.

இப்பொழுது இலங்கை நிதிவளத்தில் மிகவும் பலவீனமான நிலையில் உள்ளது. பணபலத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்றால் அதற்கு சரியான சந்தர்ப்பம் இந்திய அணிக்கு எதிரான சுற்றுப்பயணங்கள்தான். இதன்மூலமே நிறைய பணம் இலங்கை கிரிக்கெட் சபைக்குக் கிடைக்கும். இத்தகைய நன்மைகளைப் பெறுவது தவிர்க்கமுடியாதது. இந்நிலையில் இரையாகப் போவது தவிர்க்க முடியாமல்போகும் என்று கருத்துக்கள் வெளியாகின்றன. வசதிவாய்ப்புக்கள் குறைந்த கிரிக்கெட் சபைகளின் நிலை இதுவாகத்தான் இருக்கும் போலத்தெரிகிறது. எதுஎவ்வாறாயினும் ஐ.பி.எல். இன் அடுத்த சுற்றுப்போட்டிகளும் வெற்றிகரமாக நடைபெற்று முடிவடையும் என்று நம்பலாம்.





பாகிஸ்தான் கிரிக்கெட் அணி சிம்பாப்வேயுடனான டெஸ்ட் போட்டியொன்றில் தோல்வி கண்டதோடு டெஸ்ட் தரவரிசையில், ஆறாவது இடத்துக்கும் பின் தள்ளப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே ஒக்ரோபர் 14இல் தென் ஆபிரிக்காவிற்கான முக்கியமான கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஆரம்பமாக இருக்கின்றது. இந்தப் போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெறவுள்ளன. இவ்வருட ஆரம்பத்தில் தென் ஆபிரிக்க மண்ணில் பாகிஸ்தான் விளையாடியபோது 3 - 0 என்று டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் இழந்தது. ஆனால் இம்முறை அப்படி நடக்காது என்றும், தென் ஆபிரிக்க மைதானங்கள் வேகமானவை என்றும் எகிறு பந்துகளை இலகுவாக வீசக் கூடியவையாக இருந்ததென்றும், ஆனால் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மைதானங்கள் அடிபந்து வீச்சுக்கு சாதகமாக இருப்பதால் தென் ஆபிரிக்கா தம்மீது ஆதிக்கம் செலுத்துவது இம்முறை இலகுவாக இராது என்றும், நம்பிக்கையுடன் கூறியுள்ளார். பாகிஸ்தான் பயிற்சியாளர் டேவ் வட்மோர். அதற்கேற்ற மிகச்சிறந்த சுழல் பந்துவீச்சாளர்கள் பாகிஸ்தான் அணியில் இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

இதற்கு மேலாக 2009ன் பின் தாயக மண்ணில் பாகிஸ்தான் அணியினர், சர்வதேச அணிகளை எதிர்கொள்ளச் சந்தர்ப்பம் இல்லாமல் இருப்பதையும் திறமையைக் காட்ட பெரும் வாய்ப்புக் குறைவாக இருப்பதையும் சுட்டிக்காட்ட அவர் தவறவில்லை. இதன்காரணமாக உள்ளூர் கிரிக்கெட்டில் இருந்து வீரர்கள் சர்வதேச கிரிக்கெட்டுக்கு வரும்போது ஒரு இடைவெளிவிழுவது தவிர்க்கமுடியாத துரதிர்ஷ்டமாக இருப்பதையும் சுட்டிக்காட்டுகிறார். இந்த இடைவெளியை இல்லாதொழிக்க அவசரமாக ஏதாவது செய்தாகவேண்டும் என்பதும் அவரது வேண்டுகோள்.

இந்த நிலைமாற வேண்டுமானால் ஏதாவது ஒரு நாடு நாங்கள் பாகிஸ்தான் வருகிறோம் என்று துணிந்துகூற வேண்டும். அதனை ஐ.சி.சி ஏற்கவேண்டும். மேலும் மறைகரத்தடைகள் இல்லாதிருக்க வேண்டும். இதெல்லாம் நடப்பது எப்போது என்று வினா எழுப்புகிறார்கள் கிரிக்கெட் விமர்சகர்கள்.

ஒக்ரோபரில் ஆரம்பமாகும் சுற்றுப்பயணத்தில் முதலாவது டெஸ்ட் ஒக்ரோபர் 14 அபுதாபியிலும், இரண்டாவது டெஸ்ட் ஒக்ரோபர் 23 துபாயிலும் ஆரம்பமாகின்றன. தொடரும் ஐந்து ஒருநாள் போட்டிகளில் சார்ஜாவில் இரண்டு போட்டிகளும், அபுதாபியில் இரண்டு போட்டிகளும், துபாயில் ஒரு போட்டியும் நடைபெற ஒரேயொரு இருபதுக்கு இருபது போட்டி நவம்பர் 15 துபாயில் நடைபெற இருக்கிறது.

# துயரமான தொடர்கதை





விளையாட்டு

ஜோசெப் கிருஷ்ணா



# வருவதும் போவதும்

பங்களாதேஷ் அணியின் முதன்மை சுழல் பந்துவீச்சாளர் அப்துல் ரசாக் நடைபெறவிருக்கும் நியூசிலாந்துக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் விளையாட இவர் மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார். 31 வயதாகும் அப்துல் ரசாக் ஒருநாள் போட்டிகளுக்கு அணியின் நிரந்தர வீரராக இருந்தபோதும், டெஸ்ட் போட்டிகளுக்குப் பெரிதாக கண்டுகொள்ளப்படுபதில்லை. (சுரேஷ் ரெய்னாபோல்) இப்போது 2011இன் பின் மீண்டும் அழைக்கப்பட்டிருப்பது டெஸ்ட் போட்டிகளில் ஓர் இடம்பெற்றுக்கொள்ள நல்ல சந்தர்ப்பமாகும். இதேவேளை கல்லூரிப் பரீட்சைகள் குறுக்கிட்டதால் சிம்பாப்வே அணிக்கு எதிரான போட்டிகளைத் தவிர்த்துக்கொண்ட இருபதே வயதான துடுப்பாட்ட வீரர் அனாமுல் ஹக் மீண்டும் அணிக்குள் நுழைந்துள்ளார்.

இன்னொருபுறம் உடல் உபாதைகள் காரணமாக ஒரு நாள் போட்டிகளில் இருந்து விலகிக்கொண்ட அவுஸ்திரேலிய அணி வீரர் மைக்கல் கிளார்க் அடுத்த மாதம் தொடங்கவுள்ள ஆஷஸ் போட்டிகளிலும் விளையாட முடியாமல் போகக்கூடும் என்று அச்சம் தெரிவித்துள்ளார். தொடர்ச்சியான முதுகு உபாதைகளால் பாதிக்கப்பட்டுள்ள கிளார்க் இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் விளையாட முடியாமல் போவது நிச்சயம் என்று கூறியுள்ளார். அவுஸ்ரேலிய இங்கிலாந்து ஆஷஸ் தொடரின் முக்கியத்துவமும், அதன் அவசியமும் கருதியே இந்திய ஒரு நாள் தொடருக்கு கிளார்க் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. கடந்த மாதம் இங்கிலாந்தில் 3 - 0 என்று ஆஷஸ் தோல்வி கண்ட அவுஸ்ரேலியா, அதற்கீடாக அவுஸ்திரேலியாவில் வைத்து இங்கிலாந்தை மடக்கலாம் என்று பார்த்தால் அணித் தலைவரும், சிறந்த துடுப்பாட்ட வீரருமான மைக்கல் கிளார்க்கிற்கு இப்படி ஒரு தடங்கல்.

# இருப்பாரா? இல்லையா?




ஐ.பி.எல். ஊழல்களில் சர்ச்சைக்குள்ளாகி இருப்பவர் முன்னாள் இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் சிறினிவாசன். அதனைத் தொடர்ந்து பல குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விரல் சுட்டிக்காட்டப்பட்டவர் இவரது மருமகனான குருநாத்மெய்யப்பன். ஆனால் சிறினிவாசன் தன் மருமகன் மீது எவ்வித குற்றங்களும் இல்லை. அவருக்கும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்குமான உறவு அவர் ஒரு கிரிக்கெட் ஆர்வலர் என்பது மட்டும் தான். வேறெதுவும் இல்லை என்று ஒரேயடியாக மறுத்திருந்தார். இந்தச் சர்ச்சைகள் இன்னும் ஓயாதநிலையில் ஓய்வுபெற்ற அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரரும், இன்றும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் விளையாடி வருபவருமான மைக்ஹஸி ஒரு குண்டைத் தூக்கிப்போட்டுள்ளார். அவர் எழுதியுள்ள புத்தகமொன்றில் இதுபற்றிப் பிரசுரித்துள்ளார். எமது அணியின் உரிமையாளர் சிறினிவாசன் இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர். இதேவேளை இந்திய கிரிக்கெட் சபையின் உயர்நிலை அதிகாரியாகவும் இவர் இருந்தமையால் அணியின் செயற்பாட்டை மேற்பார்வை செய்ய (Control) தன் மருமகனுக்குக் கொடுத்திருந்தார். மெய்யப்பன் அப்போதைய அணியின் பயிற்றுவிப்பாளர் கெப்லர் வெசல்சுடன் இணைந்து, அணியின் நிர்வாகத்தில் ஈடுபட்டிருந்தார் என்று பட்டென்று போட்டுடைத்துள்ளார். மைக்ஹசியோ இவ்விடயம் தொடர்பில் கருத்துக்கூறிய முதல் கிரிக்கெட் வீரராக இருக்கிறார். இவரது கருத்துக்கள் இந்தச் சர்ச்சையில் சிறினிவாசன், மெய்யப்பன் இருவருக்கும் புதிய பிரச்சினைகளைக் கொடுக்கக்கூடும் என்று பேசப்படுகிறது.

பிரச்சினை நீதிமன்றமளவில் சென்றுகொண்டிருப்பாதல் அதுபற்றிப் பேசுவது தவிர்க்கப்படவேண்டியதே. ஆனால் இப்ப என்ன செய்வீங்க என்று கேட்க வேண்டியுள்ளது. அதாவது அடுத்த ஐ.பி.எல். இல் ஜாம்பவான் கிரிக்கெட்டர், உச்சத்திறன் இருக்கும்போதே அவுஸ்திரேலிய அணியில் இருந்து விலகிக்கொண்ட வீரர், Mr.Cricketer என்று அழைக்கப்படும் கனவான் தொடர்ந்தும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் இருப்பாரா என்று மட்டும்தான் கேட்கவேண்டியுள்ளது.

# தியாகத் திருநாளாம்

# ஹஜ்ஜுப் பெருநாள் வருக வருக!!

அல்ஹாஜ் எம்.எப்.எம்.இக்பால்
யாழ்ப்பாணம்



இன்பப் பெருநாளாம்! தியாகத்திருநாளாம்! இனிய ஹஜ்ஜுப் பெருநாளே! வருக! வருக! இன்று எந்தெந்த மூலை முடுக்குகளிலெல்லாம் முஸ்லிம்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் எட்டுத்திசைகளிலும் ஓங்கி ஒலிக்கும் ஒரே நாதம் "அல்லாஹ் அக்பர்... அல்லாஹ் அக்பர்... அல்லாஹ் அக்பர்... லாஇலாஹ இல்லல்லாஹ் அல்லாஹ் அக்பர்... அல்லாஹ் அக்பர்... வலில்லாஹில் ஹம்து" என்ற சங்கை மிகுந்த இனிய தக்பீராகும்.

தியாகத் திருநாளாகிய ஹஜ்ஜுப் பெருநாளின் வரலாறு அனைவருக்கும் தெரிந்த விடயம்தான். சம்பவங்கள் சரித்திரமாகி, சரித்திரம் சமயமாகி அனைவரும் கொண்டாடப்படும் ஒரு இனிய பெருநாளே ஈதுல் அல்ஹாவாகும். நபிமார்களையும் நல்லடியார்களையும் அல்லாஹ் அதிகமாக சோதிப்பான். அவ்வாறு சோதனைக்கு உட்படுத்தப்பட்டு அதில் வெற்றிகண்டு வல்ல அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை பெற்ற நபி இப்றாஹிம் (அலை) அவர்களும் அவர்களின் மனைவி ஹாஜறா (ரலி) அவர்களும் அவர்களின் அருமை மைந்தன் இஸ்மாயீல் (அலை) அவர்களும் செய்த மகத்தான தியாகத்தில் உதித்ததுதான் புனித ஈதுல் அல்ஹா ஹஜ்ஜுப்பெருநாளாகும்.

முஸ்லிம்களாகிய நமக்கு அருளப்பட்டுள்ள இரு பெருநாட்களும், புத்தாடை அணிவதற்கும், வயிறு நிரம்ப சுவையான உணவு வகைகளை உண்டு சுவைப்பதற்கு மட்டுமல்ல. மாறாக அல்லாஹ்வினதும், அவனது அருமைத் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களினதும் திருப்பொருத்தத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அரிய பல வணக்கங்களையும் அது உள்ளடக்கியுள்ளது. அத்தனையும் அருமை நபி (ஸல்) அவர்களின் வழிமுறையாக, சுன்னத்தான அடிப்படையிலே நமக்கு விதியாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக ஹஜ்ஜுப் பெருநாளின் மாதமாகிய துல்ஹஜ் மாதம் பிறந்தது முதலே முதல் 9 நாட்களிலும் நல் அமல்களில் ஈடுபட்டு 10ஆம் நாள் பெருநாள்கொண்டாடி 11, 12, 13 ஆம் நாட்களில் உழ்ஹிய்யா உட்பட பல அமல்களைக்கொண்டு சிறப்பிப்பது நமது கடமையாகும்.

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான ஹஜ் கடமையை நிறைவேற்றும் போது நபி இப்றாஹிம் (அலை) அவர்களின் குடும்பமே நம் மனக்கண் முன் நிழலாடும். இஹ்ராம் கட்டுதல், க..பாவை வலம் வருதல், ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடல், ஸபா, மர்வா மலைகளுக்கிடையில் ஓடுதல், புனிதம் நிரம்பிய 'ஸம் ஸம்' நீரருந்துதல், அரபாவில் தரித்தல், குர்பான் கொடுத்தல், மினாவில் கல்லெறிதல் போன்ற அனைத்துக் கிரியைகளிலும் ஹஸ்ரத் இப்ராஹீம் நபி (அலை) அவர்களின் தியாகங்கள் பிரதிபலிக்கின்றன.

ஹஜ் வணக்கத்திலே இஸ்லாமிய சமத்துவமும், சகோதரத்துவமும் உச்ச நிலைக்கு வருகின்றது. அதாவது அரசனாயிருந்தாலும், ஆண்டியாயினும் எல்லோரும் ஒரே உடையணிந்து இஹ்றாம் கட்டுவதும், அறபாவிலே ஒன்றுகூடுவதும், சமத்துவத்தினைக் காட்டுவதோடு சகோதரத்துவத்தினையும் உணர்த்திநிற்கின்றது.

இதேபோல ஹஜ்ஜில் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு கிரியைகளிலும் பல தத்துவங்கள் பொதிந்துள்ளன.

புனித ஹஜ் பெருநாள் தினத்திலும் அதைத் தொடர்ந்துவரும் 11, 12, 13 ஆகிய தினங்களிலும் வசதியுள்ள ஒரு முஸ்லிம் நிறைவேற்றும் மிகச் சிறந்த வணக்கமே உழ்ஹிய்யா (குர்பான்) கொடுப்பதாகும். ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற மிருகங்களை அறுத்து தானும் உண்டு, பிறருக்கும் புசிக்கக்கொடுத்து அல்லாஹ்வின் அன்பைப் பெறும் நற்செயலே உழ்ஹிய்யாவாகும்.

உழ்ஹிய்யா கடமையை நிறைவேற்றுகையில் பிற சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை பாழ்படுத்தாத வகையில் அதை நிறைவேற்றுவது முக்கிய அம்சமாகும் என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது. நம் மதக் கிரியைகளை நிறைவேற்றும் போது மாற்றாரின் அதிருப்தியையும் வெறுப்பையும் சம்பாதித்துக் கொள்வது நல்லதல்ல. இன்று எமது நாட்டில் உழ்ஹிய்யா கொடுப்பதற்கான எதிர்ப்பு பெரியளவில் இல்லாது போனாலும் ஆங்காங்கே சிறுகச் சிறுக அதிருப்தியும் முகச்சுழிப்பும் அண்மைக் காலங்க்ளாக உணரப்பட்டுவருகின்றன.

இறைச்சிக்காக ஆடு, மாடுகளைக் கொல்வது எமது நாட்டு சட்டத்தால் தடுக்கப்பட்ட விடயம் அல்ல என்பதை அந்நிய மதத்தவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். உணவுக்காக கால்நடைகளைக் கொல்வது மிருகவதை என்று சில கொள்கை பிரிவினர்கள் வாதாடுகின்றனர்.

ஒருவருக்கு இருக்கும் உரிமைகளும் மத, கலாசார கொள்கைச் சுதந்திரங்களும் இன்னுமொருவருக்கு இடைஞ்சலாக இருக்கமுடியாது என்பது ஜனநாயக தத்துவங்களில் ஒன்றாகும்.

பல்லின மக்கள் வாழும் எமது தாய்நாட்டில் மதங்களுக்கிடையே ஐக்கியத்தை ஏற்படுத்தவேண்டிய மதபோதகர்களாலேயே வழிபாட்டுத் தலங்கள் தாக்கப்படும் பயங்கரமான சூழ்நிலையில் இருந்து அல்லாஹ் காப்பாற்றுவானாக. ஆமீன். ஈத் முபாரக்.

# தமிழர் தலைவிதி— தமிழர் கரங்களிலேயே!

"அகத்தியர் தந்த எமது மொழியின் பெயரான
தமிழ் தமிழர்களை உயர்த்தியது

ஆங்கிலேயர் தந்த எமது மொழியின் பெயரான
ரமில் (Tamil) தமிழர்களை வீழ்த்தியது"

**பொன்னாலை வரதராஜப் பெருமாள் பதியில் அமைந்த பிருந்தாவனம் தியான மண்டபத்தில் இயங்கும் உயிர் ஆன்மீக மன்றத்தின் ஆக்கம்.**

**ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் இலக்கிய இலக்கணங்களைக் கொண்ட மொழிகள்**

ஆயிரக்கணக்கான மொழிகள் இன்று இப்பூவுலகில் உள்ளன. அவற்றுள் எமது தாய்மொழியாம் தமிழ் மிகப்பெரும் பழமை வாய்ந்த மொழியாகும். மேலும் பல்லாயிரம் ஆண்டுகால இலக்கண, இலக்கிய வரலாற்றை கொண்டதுமாகும். இதனால் தமிழை தாய் மொழியாகக்கொண்ட தமிழர்களாகிய நாம் உலகின் அனைத்து மொழிகளுக்கும் இலக்கணமும் இலக்கியமும் உண்டென நம்புவது இயல்பேயாகும். ஆனால் உண்மைநிலை ஆச்சரியப்படத்தக்க வகையில் முற்றிலும் மாறுபட்டதாகும்.

இன்றைய உலகமொழிகளில் தமக்கென எழுத்து வடிவம் வகுத்துக்கொண்ட மொழிகள் தமிழும், தமிழின மொழிகளும் மாத்திரமேயாகும். இது ஒரு முக்கிய வரலாற்று உண்மையாகும். மேலும் இன்றுவரை எழுத்து வடிவம் மேற்கொள்ளாத மொழிகள் பல மேற்குலக நாடுகளிலும் கீழைத்தேய நாடுகளிலும் உள்ளன.

ஆயிரமாண்டு கால இலக்கிய வளர்ச்சியுடைய மொழிகள் உலகிலே பதினொன்றுக்கு மேல் இல்லை. அவை மேற்குலக நாடுளில் மூன்று மொழிகள் ஆங்கில மொழி, பிரெஞ்சு மொழி, இத்தாலியமொழி என்பனவும் மேற்குக் கிழக்கு ஆசியாவில் மூன்று மொழிகள் பாரசீக மொழி, சீன மொழி, யப்பானியமொழி என்பனவும் தென்னாசியாவில் ஐந்து மொழிகள் தமிழ் மொழி, கன்னட மொழி, மலையாள மொழி, தெலுங்குமொழி, சமஸ்கிருத மொழி என்பனவும் ஆகும். ஆரிய இன மொழிகள் என்று கூறப்படும் வடஇந்திய தாய்மொழிகள் அனைத்தும் பிரிட்டிஷ் ஆட்சிக்காலம் வரை இலக்கியமற்ற மொழிகளாகவே இயங்கின. சிலவற்றுக்கு இன்றுகூட இலக்கியம் கிடையாது.

மேற்குலகில் கிரேக்க இலத்தீன் மொழிகள் தமிழுடன் ஒத்த இலக்கியப் பழமையுடையன. ஆனால் நீடித்த இலக்கிய வாழ்வுடையன அல்ல. இலக்கண வகையில் தமிழும் உயர்தனிச் செம்மொழிகளாகிய சமஸ்கிருத மொழி, கிரேக்க மொழி, இலத்தீன் மொழி, அரபுமொழி, பாரசீக மொழி, எபிரேயமொழி ஆகியவை மட்டுமே தமக்கென இலக்கணம் வகுத்துக்கொண்டவை. மற்ற எல்லா மொழிகளும் இவற்றை பின்பற்றி அண்மைக்காலத்திலேயே இலக்கணம் வகுத்துள்ளன.

**முச்சங்கங்களும் அவற்றின் தொன்மையும்**

பாண்டிய மன்னனான காஞ்சின வழுதி முதல் கடுங்கோவன்வரை உள்ள எண்பத்தொன்பது அரசர்கள் முதற்சங்கத்தைப் பராமரித்து வந்துள்ளார்கள். சகல நல்லொழுக்க நற்குணங்கள் பொருந்திய சான்றோர்களாம் தமிழ் புலவர்களாகிய அகத்தியனார், முரிஞ்சியூர், முடிநாகராயர், நிதியின் கிழவன், தொல்காப்பியனார் போன்றோர் முச்சங்கங்களிலிருந்து பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிதை, கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை அகவல் போன்ற பலநூல்களை இயற்றியும், ஆராய்ந்தும் தமிழை வளர்த்துள்ளார்கள்.

தம் உயிரினும் மேலாக தமிழ் மொழியை கருதி அதற்காகவே தம் வாழ்வை அர்ப்பணித்துள்ளனர். உள்ளொளி பெற்ற இப்புலவர் பெருமக்களுக்குள்ளே அகத்திய முனிவர் முதன்மையானவராகத் திகழ்ந்தார்.

பொதிகை மலையை உறைவிடமாகக் கொண்ட அவர் சிவபெருமான்மீது மிகுந்த பக்தி செலுத்தி சிவனருளால் தமிழ்மொழியை ஞான உணர்வால் பெற்றுக்கொண்டவர் ஆவார். இனிமையும், அழகும் என்றும் இளமையும் கொண்டதாக தமிழ் இப்பூமியில் என்றென்றும் விளங்கும் எனும் வரத்தையும் சிவனிடம் பெற்றுக் கொண்டுள்ளார். இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் எனும் முத்தமிழையும் இறைவனிடமிருந்து கற்றுணர்ந்து 'அகத்தியம்' எனும் ஒப்பற்ற முத்தமிழ் இலக்கண நூலை வகுத்துள்ளார். இவர் முதற்சங்கத்திலிருந்த புலவர்களுக்குள் முதன்மையானவர்.

அம்முதற்சங்கத்தின் ஆரம்பம் இற்றைக்கு பதினாறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. இம்முதற்சங்கம் நாலாயிரத்து நானூற்று நாற்பது ஆண்டுகளாக செயற்பட்டது. இச்சங்கத்தில் நாலாயிரத்து நாநூற்றி நாற்பத்தொன்பது புலவர்கள் இருந்தார்கள்.

அடுத்த இடைச்சங்கம் கபாலிபுரத்தில் மூவாயிரத்து எழுநூறு ஆண்டுகளாக செயற்பட்டடது. இதில் மூவாயிரத்து எழுநூறு புலவர்கள் இருந்தனர். அகத்தியரின் சீடரான தொல்காப்பியர் இதில் சிறப்புப் புலவராவார். இவர் அகத்தியம் எனும் இலக்கண நூலை வழியொற்றி தொல்காப்பியம் எனும் இலக்கண நூலை வகுத்தார். இன்றுவரை அது உள்ளது.

அடுத்து வந்த கடைச்சங்கம் இப்பொழுதுள்ள தென்மதுரையில் நானூறு நாற்பத்தொன்பது புலவர்களால் ஆயிரத்து எண்ணூற்று ஐம்பது ஆண்டுகளாக செயற்பட்டது. முதல், இடை, கடைச்சங்கங்கள் நூற்றிதொண்ணூற்றியேழு பாண்டிய மன்னர்களின் ஆதரவுடன் இயங்கியது. ஒன்பதினாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறு ஆண்டுகளாக இம்மூன்று சங்கங்களும் தமிழுக்கு பெரும் புகழ்சேர்த்தன.

(தொடரும்)

# தீர்ப்பு

அப்ரார் ஏ.அஸீஸ்
யாழ்ப்பாணம்.

காலைச்சூரியன் தன் கதிரொளியை பூமித்தாய்மீது பரவவிட்டு வான மேடையதில் பவனிவர ஆரம்பமாக தத்தம் அலுவல்களை செய்ய ஆயத்தமாகும் போது அதற்கு விதிவிலக்கில்லாதவளாக வினோவும் "டாண் டாண்" என்றொலித்த கடிகார ஓசையின் ஒலியினால் தன் தூக்கத்தை கலைக்கின்றாள்!

ஓ...! இரவு நீண்டநேரம் பேஸ்புக் கணினி விளையாட்டு, நண்பர்பேச்சு என்று நேரத்தை கடத்தியதால், காலைத் தூக்கம் கலைய மறுத்ததை எண்ணியவளாக கொட்டாவி விட்டுக்கொண்டே அருகில் இன்னும் தூங்கிக்கொண்டிருந்த கணவனைக் கண்டு ஆபிசுக்கு நேரமாகி விட்டதே. இன்னும் இவர் எழும்பல்லே, சீ... சீச்சீ... சனியன் இந்த காந்தா இன்னும் என்ன செய்து கொண்டிருக்கின்றாள் என்று தன் கோபத்தை தமக்கென்று வேலைக்குவைத்திருந்த காந்தா மீது காட்டிவிடத் துடித்தவளாக.. ஏய்... காந்தா... காந்தா... என்று ஓங்கிய குரலில் அழைக்கவே,

இதோ வந்திட்டேன் மெடம் என்றபடி பெட் காப்பி தயார் செய்த தட்டை ஏந்தியவளாக வழமையாக விழும் ஏச்சை வாங்கும் எதிர்பார்ப்பில் அவள் முன் ஆஜரானாள்! தன் மனைவியின் குரல் கேட்டு விழித்தெழுந்த குமார், நடக்கப் போகும் நிகழ்வை உணர்ந்தவனாக காந்தாவை காப்பாற்றவேண்டும் என்ற எண்ணத்துடன், வினோ... வினோ... காந்தாவை ஒன்றும் ஏசாதே! அவள் நேரத்துடன் எனக்கு குரல் கொடுத்தாள். நான்தான் புரண்டு தூங்கிவிட்டேன் என்று கூறிக்கொண்டே, உண்மைதானே காந்தா... தா.. காப்பியை என்று அவளுக்கு ஆறுதல் வார்த்தை கூறியவனாக அவ்விடம் விட்டு அகல உதவிசெய்தான்.

ம்..ம்.. நீங்க வேலைக்காரிக்காக வக்காளத்து வாங்காதீங்க... இவங்களை எல்லாம் வைக்கவேண்டிய இடத்திலே வைக்கவேணும் புரிஞ்சுகொள்ளுங்க என்றாள்!

நிச்சயமாக வைக்கவேண்டிய இடத்திலதான் வச்சிருப்பேன். "நீங்க கவலைப்படாம உங்க ஹொபி, உங்க பிரண்ட்ஸ் என்று உங்க பொழுதைக் கழிங்க வினோ" என்று ரொம்ப சூட்சுமமாகக் கூறினான்.

இதன் உள் அர்த்தம் புரியாத அந்தப் பேதை, அதுதானே பார்த்தேன் எண்ட குமார்தான் என்று ரொம்ப மகிழ்வோடு சிரித்துக்கொண்டு சீக்கிரம் கிளம்புங்க என்றாள்.

மெடம், என்றுகேட்ட குரலை கேட்டு திரும்பியவள், என்ன? என்பதைப்போல காந்தாவை ஏறிட்டு நோக்கினாள்.

காலைச் சாப்பாடு ரெடி மெடம். அவருக்கு பாயாசம் ரொம்ப பிடிக்கு மல்லவா? காய்ச்சவா ம்..ம்... அவருக்கு எது பிடிக்கும், பிடிக்காது என்று நல்லாத் தான் பழகிவிட்டாய் கெட்டிக்காரி என்று ஓர் பாராட்டுப்பத்திரம் தயாரித்து கையளித்துவிட்டாள்.

சந்தோஷப்பட்ட காந்தாவும் அவர் உடுப்பெல்லாம் அயன் பண்ணியாச்சு. சுவை துடைச்சாச்சு என்று கூறிக்கொண்டே அடுக்களை நோக்கிச் சென்றுவிட்டாள்!

சரி...சரி...போ... என்றவாறு வினோவும் எழுந்து உடைகளை மாற்றிக்கொண்டு தன் காலைக்கடன் கழிக்க ஆயத்தமானாள்.

குமாருக்கு இவளின் இந்த நடவடிக்கைகள் எதுவும் சுத்தமாகப் பிடிக்கவேயில்லை. அவன் எவ்வளவோ கற்பனைகளுடனும், ஆசையுடனும் தான் வினோவைத் திருமணம் செய்து கொழும்புக்கு அழைத்துவந்து சகல வசதிவாய்ப்பையும் கொடுத்து தன் குடும்பம் நல்லபடியாக வாழணும் என்ற



வேணவாவோடு ஆரம்பித்தான் வாழ்க்கை என்னும் படகை.

ஆனால் நாட்கள் போகப்போக வினோவின் நாகரிக வாழ்க்கைத்தரம் உயர்ந்து திருமணம் என்ற சடங்கின் சங்கதிகளையே தலைகீழாக மாற்றி வாழத் தலைப்பட்டு விட்டாள். தட்டிக்கேட்டால் அடுத்த வீட்டு தரண்யாவைப் பாருங்க, முன் வீட்டு முல்லையை பாருங்க, அவங்களவிட நாம எதுல குறைச்சலாயிருக்கிறோம் என்று வீட்டை ரெண்டு படுத்திவிடுவாள். கேட்பாருக்குத்தான் சொல்ல முடியும் இவளுக்கு... என்ன சொன்னாலும் ஏலாது என்று நடப்பது நடக்கட்டும் என்றுவிட்டு விட்டான். "அற்பனுக்கு மௌசு கிடைச்சா அர்த்த ராத்தியில குடைபிடிப்பான்" என்று சும்மாவா சொன்னாங்க முன்னவங்க என்று அமைதிப் புறாவாகிவிட்டான்!...

ஆனால் அந்த இடைவெளியை மலையகத்தில் வறுமைகாரணமாக பிழைப்பு தேடிவந்த அழகிய பெண் காந்தா திறம்பட செய்துவந்தாள்.

நாட்கள் செல்லச்செல்ல குமாரின் உள்ளத்தில் அவள் குடிபுகுந்து கொண்டது ஆச்சியப்பட வேண்டிய விஷயமல்ல. அலுத்துக் களைத்து வீடுவரும் அவனை ஆதரித்து உபசரிக்க மனைவி வினோ கிளப் என்றும் நண்பர்கள் வீடுகளும் என்று செல்ல,

உங்களுக்கு என்ன வேணும், ஏது வேணும் என்று கேட்டு விழுந்து விழுந்து ஆதரிக்கும் காந்தாமேல் பாசமும் பரிவும் மலைபோல் உயர்ந்துகொண்டு போனது. சீ... இதென்ன வாழ்க்கை. ஏதோ போலி வேஷம் போட்டு நாடகம் நடிக்கிறாப் போல இருக்கு என்று அவன் அலுக்காத நாட்களும் பலப்பல....

இந்நிலையிலே, தான் அன்று அந்த சம்பவம் நடந்தது எதிர்பாராதவிதமாக!

அன்று இரவு வேலை விட்டு வீடுவந்த குமார் இன்னும் வினோ வரவில்லையே என்று சலித்தவனாக தனக்கு வைத்த இரா உணவை உண்ணாது அப்படியே போய், தூங்கிவிட்டான்.

நேரம் கழித்து வீடுவந்த வினோ... காந்தா எதிரே வந்து நின்றதைப் பார்த்து குமார் வந்தாரா? சாப்பிட்டாரா என்றாள்.

காந்தா தயங்கித் தயங்கி இல்ல மெடம் ஏதோ அவர் சாப்பிடல, அப்படியே சாப்பாடு அந்தா இருக்கு என்று சொல்லி முடிக்க முன்னே...

எரிமலையாக வெடித்த வினோ நீ சாப்பிட சொல்லாம அடாத்தா இருந்திருப்பாய். தேவை என்றால் தின்னட்டும் என்ற அகங்காரத்தில... அதுதான் அவர் சாப்பிடல என்று அவளுக்கு கையை ஓங்கிக்கொண்டு போனவள் கையை பிடித்துக்கொண்டு தடுத்த குமார் ஆவேசம் பொங்க அப்படியே காந்தா கையை இழுத்து தன் அருகே ஆக்கியதை கண்டு அப்படியே அதிர்ந்து சிலையாகி நின்றாள்.

நன்றாகக் கேட்டுக்கொள் வினோ... இன்றிலிருந்து இவளும் எனக்கு மனைவிதான். என் தேவைகளை குறிப்பறிந்து நிறைவேற்றும் இவள்தான் என் உள்ளத்தில் வைத்து பூஜிக்கத் தகுதியானவள். நீ உனக்கென்று அதிக சுதந்திரம் பெற்று வாழ்ந்துவிட்டாய். இன்னும் என்னுடன் இருக்கவேணும் என்று விரும்பினால் காந்தாவையும் மதித்து நடத்து. இல்லையென்றால் உனக்கு என்ன தோன்றுகின்றதோ அதனைச் செய். நீ எடுக்கும் எந்த தீர்ப்பினையும் ஏற்க நான் தயாராக உள்ளேன். நாளையே நானும் காந்தாவும் ரெஜிட்டர் ஒபீஸ் போகின்றோம் என்றான்.

அவனின் ஒவ்வொரு வார்த்தைகளும் தனது அகங்காரமான வாழ்விற்கு அடிக்கப்படும் சாவுமணி என்பதை முற்று முழுதாய் உணர்ந்த வினோ... விக்கி விக்கி தன் தலையிலடித்து அழத்தொடங்கினாள். தான்விட்ட தவறுகள் பிட்டு பிட்டு வைக்கப்படுவதை எண்ணி வெட்கமும் துக்கமும் வேதனையும் கலந்து அவளை வெறுமையாக்கியது... தன் நடத்தை தன் வாழ்வுக்கு வழிகேடானதே என்று எண்ணி வெதும்பினாள்.

கணவனின் தீர்ப்பு சரியெனப்பட்ட போது தனது நடத்தையின் பிழை பூதாகாரமாய் அவள் முன் விஸ்வரூபமெடுத்தது!

**(யாவும் கற்பனையே)**

# குற்ற உணர்ச்சி

வாழ்க்கை என்னை தள்ளவிட்டு என் மேல் ஏறி ஓடிக்கொண்டிருக்கிறது. மனமோ இரண்டு ஆண்டுகளுக்கு பின்தங்கி நிற்கிறது.

என் நண்பனின் மரணம் என்னுடைய வாழ்க்கையின் திசையினையே மாற்றி விட்டது எனும்போது அந்த நிகழ்வினை என்னால் மறக்கமுடியவில்லை. இரண்டு ஆண்டுகளில் என்னவெல்லாமோ நடந்து விட்டது. நான் இத்தனை நாட்களாக தொடர்ந்து செய்யும் ஒரே வேலை தெருத்தெருவாக தனியாகத் திரிவது மட்டும்தான். அப்படி நடக்கும்போது மனம் கொஞ்சம் லேசாகும். எனினும் என் வாழ்க்கையில் நடந்துவிட்ட மாற்றங்களை அசைபோடுவதும் தவறாமல் நடக்கும். அந்த வலியிலும் ஒரு இனிமை இருக்கத்தான் செய்கிறது.

அப்போது நான் 12 ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். அன்று பள்ளியில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தேன். கடைசியாக மனக்கவலை ஓரத்தில் எட்டிப் பார்க்காமல் மகிழ்ந்தது அன்றுதான். மழை வேறு. மழைபெய்ததால் அன்று 5 மணிக்கெல்லாம் வகுப்புகள் முடிந்திருந்தன. நண்பனுடன் வீட்டுக்கு வந்துகொண்டிருந்தேன்.. வரும் வழியில் கௌதம் என்ற நண்பன் பதற்றத்துடன் சென்றுகொண்டிருந்தான். என்னைப் பார்த்தவன் அவசரமாக என் அருகில் வந்து "உனக்குத் தெரியுமா நம்ம ஜே.பி செத்துட்டாண்டா" என்றான்.

எனக்கு தூக்கிவாரிப் போட்டது. இதயம் வேகமாகத் துடித்தது. "என்னடா சொல்ற? எப்படி ஆச்சு?" என்றேன். விபத்தாக இருக்கவேண்டும் என்று நொடிப்பொழுதில் என் மனம் ஊகித்தது. அவனுக்கு பைக் ஓட்டுவது என்றால் மிகவும் பிடிக்கும். பள்ளியில் இருந்து இப்போதெல்லாம் தாமதமாக வருவதால் அவனோடு நேரம்செலவழிக்க முடியவில்லை. இல்லையெனில் என் பொழுதுகள் அவனோடுதான் கழியும்.

"தற்கொலை பண்ணிட்டாண்டா. பதினொரு மணிக்கு தூக்குல தொங்கிட்டானாம்." என்றான்.

"என்னடா ஆச்சு?" எனக் கேட்டேன் பதற்றத்துடன். "அவன் ஏற்கனவே புது பைக் கேட்டுக்கிட்டு இருந்தான்னுதான் உனக்குத் தெரியுமில்லே. அதனால வீட்ல பெரிய சண்டை வந்திருக்குபோல. பாவிப் பையன் கேவலம் வண்டிக்காக உயிரை விட்டுட்டான்" என்றான்.

என்னால் அதற்கு மேல் எதுவும் பேச முடியவில்லை. என் வீட்டுக்குப் போகும் வழியிலிருந்து பார்த்தால் அவன் வீடு தெரியும். பதறியடித்து வீட்டுக்கு ஓடினேன். அப்போதும்கூட என்னால் நம்ப முடியவில்லை.

அவன் வீடு முன்பு கூட்டமாக இருந்தது. விக்கி வந்துகொண்டிருந்தான். அவன் யதார்த்தமாக இந்தப் பக்கம் வந்து செய்தியினை அறிந்திருக்கிறான் போலும். அவன் கண்கள் கலங்கியிருந்தது. என்னை அணைத்துக் கொண்டான்.

வீட்டுக்கு வந்து அவசரஅவசரமாகக் கிளம்பினேன். அவன் இறந்துவிட்டான் என்று என் குடும்பத்தாருக்கு மத்தியானமே தெரிந்திருக்க வேண்டும். இப்போது நான் போகாமலிருக்க முடியாது என்பதும் என்னைத் தடுக்கவும் முடியாது என்பதும் என் அப்பாவுக்கு நன்றாகத் தெரியும்.

வாழ்க்கையில் அந்த நாளை மறக்க முடியாமல் போனதற்கு மருத்துவமனையின் பிணவறையும்கூட காரணம்தான்... ஏதோ சாக்குத் துணிகள் போல சடலங்கள் ஒன்றின் அருகில் ஒன்றாகப் போட்டிருந்தார்கள். அவன் உடலை கூறுபோட்டு அடுத்த நாள் மதியம் கொடுத்தார்கள். பெற்றோர்கள் கதறி அழுது கொண்டிருந்தார்கள். என்னைப் பார்க்கும் போதெல்லாம் அவனது தாயின் வேதனை பலமடங்கு அதிகரித்ததற்கு காரணம் நாங்கள் எப்போதும் ஒன்றாக இருந்தது மட்டுமல்லாமல் உருவ ஒற்றுமையும் கூடத்தான். அதைப் புரிந்து கொண்டு நான் கொஞ்சம் தள்ளியே நின்றேன்.


அவனது இறுதிப் பயணம் தொடங்கிய போது எங்கள் தெருக்காரரான கணபதி மாமா என்னை "வண்டியில ஏறுடா" என்றார். ஆனால் இப்போது நான் சங்கடத்தோடு சேர்ந்த தர்மசங்கடத்தில் வேறு இருக்கிறேன். என்னால் மயானத்திற்குப் போகமுடியாது. அவரிடம் வரவில்லையென்று கூறிவிட்டேன்.

காரணம் வேறு ஒன்றும் இல்லை. நான் பிறப்பால் ஒரு பிராமணன். அதனால் தந்தையின் மறைவுக்கு முன் மயானம் சென்றால் தந்தைக்கு ஆகாதாம். வீட்டைவிட்டு கிளம்பும் முன்னே என்னிடம் உறுதியாகக் கூறித்தான் அனுப்பினார்கள். மனதைக் கல்லாக்கிக் கொண்டு செல்லாமல் இருந்தாலும் கேவலம் மூடநம்பிக்கைகள் என் நண்பனின் இறுதிப் பயணத்திற்கு நான் செல்வதைத் தடுத்துவிட்டதே என்று நினைக்கும்போது குற்ற உணர்ச்சி இப்போதும் பீறிட்டுவருகிறது.

அந்த கணபதி மாமா என்னைப் பற்றி என்ன நினைப்பார்? எவனோ எழுதிவைத்த சாஸ்திரம் ஏன் என்னுடைய நெருங்கிய நண்பனின் இறுதிப் பயணத்தில் என்னை கலந்து கொள்ளத் தடையாயிருந்தது?

அன்று நான் வீடு திரும்பும்போது வீட்டுக்குப் போவதாகத் தோன்றவில்லை. என் மனதில் திரும்பத் திரும்ப ஓடிக் கொண்டிருந்தது இதுதான் - ஒரு மனிதனின் உணர்வுகளைவிட, அவனது சுதந்திரத்தை வீட வேறென்ன பெரியதாக இருக்கமுடியும்?

## சிந்திப்பதற்கு



ஊரோடி




கழுத்துப் பகுதியில் உணர்ச்சி இல்லாமல் செய்வதற்கான ஊசி மருந்தினை ஏற்றியபின் கழுத்து வெட்டப் பட்டிருந்தமை கண்டறியப் பட்டது. எனவே சுமணா தானாகவே கழுத்துப் பகுதிக்கு ஊசியேற்றிக் கொண்டு பின்னர் கழுத்தை வெட்டிக்கொண்டு தற்கொலை செய்து கொண்டாரா அல்லது யாராவது அவரை கொலை செய்துள்ளார்களா?



# கழுத்தை வெட்டிக்கொண்டாரா வெட்டி கொல்லப்பட்டாரா?

கல்கிஸை பொலிஸ் நிலையத்துக்கு கடந்த மாதம் 6ஆம் திகதி மிகுந்த பதற்றத்துடன் வந்த ஒருவர் தனது மனைவி கழுத்து வெட்டப்பட்டநிலையில் வீட்டிற்குள் சடலமாக கிடப்பதாக முறைப்பாடு செய்துள்ளார்.

கல்கிஸை பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் பணிபுரிந்துவரும் விஜயன் என்ற நபரே இவ்வாறு பதற்றத்துடன் முறைப்பாடு செய்துள்ளார். அந்த முறைப்பாட்டை செவி மடுத்த பொலிஸ் கான்ஸ்டபிள் உடனடியாக குற்றத்தடுப்புப் பிரிவுக்குச் சென்று சம்பவத்தை கூறுமாறு அனுப்பிவைத்துள்ளார்.

கான்ஸ்டபிள் கூறியதற்கிணங்க விஜயன் குற்றத்தடுப்புப் பிரிவுக்குச் சென்றார். அங்கு உபபொலிஸ் பரிசோதகர் ஒருவர் கடமையில் இருந்துள்ளார்.

பொலிஸ் கான்ஸ்டபிளிடம் கூறிய அதே செய்தியை குற்றத்தடுப்புப் பிரிவிலிருந்த உபபொலிஸ் பரிசோதகரிடமும் விஜயன் கூறியுள்ளார். எனவே விஜயனிடம் பல்வேறு கேள்விகளைக் கேட்டு வாக்குமூலங்களை பதிவுசெய்துகொண்ட அந்த உபபொலிஸ் பரிசோதகர் மேலும் இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்களுடன் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளார்.

இரத்மலானை போருபன பகுதியில் உள்ள வீடொன்றில் கழுத்தில் வெட்டு காயங்களுடன் நாற்காலியில் பெண் ஒருவரின் சடலம் கிடந்துள்ளது. 37 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயான சுமணா திசாநாயக்க என்ற தாயின் சடலமே அங்கு கிடந்துள்ளது.

உயிரிழந்துள்ள சுமணா திசாநாயக்காவும் அவரது கணவரான விஜயனும் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னரே இரத்மலானை போருபன பகுதியில் குடியேறியுள்ளனர். அவர்களின் குழந்தை உறவினர் ஒருவரது வீட்டில் இருப்பதாகவும் உயிரிழந்த சுமணாவின் கணவர் பொலிஸில் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் ஐந்தாம் திகதி இரவு 10.40 மணியளவில் வேலையை முடித்துவிட்டு விஜயன் வீட்டிற்கு வந்துள்ளார். அதன்போது மனைவியான சுமணா நாற்காலியில் கழுத்து வெட்டப்பட்டநிலையில் கிடந்துள்ளார். பதற்றமடைந்த நிலையில் விஜயன் கல்கிஸை பொலிஸ் நிலையத்துக்குச் சென்று சம்பவத்தை கூறியுள்ளார்.

விஜயன் பொலிஸில் முறைப்பாடு செய்தது கடந்த மாதம் ஆறாம் திகதி அதிகாலை நான்கு மணியளவில். ஆனால் ஐந்தாம் திகதி இரவு 10.40 மணியளவில் மனைவி உயிரிழந்து கிடந்ததை அவர் கண்டுள்ளார். ஏன் இவ்வளவு தாமதமாகி பொலிஸில் முறைப்பாடு செய்தீர்கள் என்று பொலிஸார் கேட்டபோது, பதற்றத்தில் என்ன செய்வதென்று அறியாமல் அன்று வேலைத் தளத்திற்கு சென்றேன். அங்கு நடந்ததை கூறினேன். எனவே உடனடியாக பொலிஸில் முறைப்பாடு செய்யுமாறு கூறினார்கள். அதன் பின்னரே நான் பொலிஸுக்கு வந்தேன் என கூறியுள்ளார்.

விஜயனின் முறைப்பாட்டின் அடிப்படையில் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகள் ஆரம்பித்த பொலிஸார் சம்பவ இடத்திலிருந்து சவரம் செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட ரேசர் ஒன்றினையும் ஊசியேற்றுவதற்கு பயன்படுத்தப் படும் சிலிஞ்சர் ஒன்றினையும் மீட்டுள்ளனர்.

கழுத்துப் பகுதியில் உணர்ச்சி இல்லாமல் செய்வதற்கான ஊசிமருந்தினை ஏற்றியபின் கழுத்து வெட்டப்பட்டிருந்தமை கண்டறியப் பட்டது. எனவே சுமணா தானாகவே கழுத்துப் பகுதிக்கு ஊசியேற்றிக்கொண்டு பின்னர் கழுத்தை வெட்டிக்கொண்டு தற்கொலை செய்துகொண்டாரா அல்லது யாராவது அவரை கொலை செய்துள்ளார்களா? என்ற சந்தேகம் பொலிஸாருக்கு ஏற்பட்டது. எனவே அதனை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகளை ஆரம்பித்தனர்.

விஜயனுக்கும் அவரது மனைவிக்கும் இடையில் பெரிதாக சண்டை சச்சரவுகள் எதுவும் இருக்கவில்லை. அப்படியென்றால் ஏன் அவருடைய குழந்தையை சகோதரியொருவரின் வீட்டில் வைத்து வளர்க்கவேண்டும் என்ற சந்தேகமும் பொலிஸாருக்கு ஏற்படவே, சுமணாவின் குழந்தையை வளர்த்துவரும் சகோதரியிடம் பொலிஸார் விசாரிக்கத் தொடங்கினர்.

இவ்வாறு சுமணாவின் சகோதரியை விசாரணைக்கு உட்படுத்தியபோது சுமணா ஓரளவு மனநலம் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் இதற்கு முன்னர் இரு தடவை தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதாகவும் அவர் கூறியுள்ளார். எனவே சுமணா தற்கொலை செய்துகொண்டிருக்க வேண்டும் எனவும் சகோதரி தெரிவித்துள்ளார்.

உயிரிழந்துள்ள சுமணா முன்னர் நல்ல வசதியாக இருந்துள்ளார். அவருக்கு சொந்தமான பார்மசி (மருந்தகம்) ஒன்று இருந்துள்ளது. அதில் வியாபாரம் செய்துவந்த சுமணா அதிக கடன் தொல்லை காரணமாக பார்மசியை விற்றதாகவும் அதற்குப்பின்னர் ஓரளவு மனநலம் பாதிக்கப் பட்ட நிலையில் இருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

சுமணா இறந்துகிடந்த வீட்டுப்பக்கம் இருந்தவர்களிடம் விசாரணை நடத்திய போது அவர் வெளியில்கூட வருவதில்லையென அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே கணவரிடம் பொலிஸார் விசாரித்தபோது மனைவிக்கு பெரிதாக பிரச்சினை எதுவும் இல்லையெனவும் அவ்வப்போது ஓரளவு உளக்குறைபாடு ஏற்படும் எனவும் கூறியுள்ளார்.

விஜயன் தம்பதியினருக்கு பன்னிப்பிட்டிய பகுதியில் சொந்தமாக பெரிய வீடொன்று இருக்கிறது. அதனை அவர்கள் வாடகைக்கு கொடுத்துவிட்டு இரத்மலானை பகுதியில் சிறிய வீடொன்றினை வாடகைக்கு எடுத்து தங்கியிருந்துள்ளனர். இவ்வாறு வாடகைக்கு தங்கியிருந்த வீட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுமணாவின் கழுத்துப்பகுதியில் உணர்ச்சியற்றுப் போவதற்கான ஊசிமருந்து ஏற்றப்பட்டதன் பின்னர் கழுத்து வெட்டப் பட்டுள்ளது. எனவே அவர் தானாகவே ஊசியேற்றிக் கொண்டு தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்று சந்தேகிக்கும் பொலிஸார் அதனை உறுதியாகக் கூறமுடியாது எனவும் தெரிவிக்கின்றனர்.

சுமணா கழுத்தை வெட்டி தற்கொலை செய்துகொண்டாரா? அல்லது வெட்டிக் கொல்லப்பட்டாரா? என்பது இன்னும் மர்மமாகவே உள்ள நிலையில் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கல்கிஸை மலையகத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் ரவிந்து கரவிடவின் கண்காணிப்பில் கல்கிஸை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சந்ரதிலக தலைமையிலான குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(17ஆம் பக்கத்தொடர்ச்சி)

ஏறாவூர்பற்று (செங்கலடி) பிரதேச செயலாளர் பிரிவில், கெமுனுபுர - 135V கிராமசேவகர் பிரிவில், சர்வோதயவீதி தொங்கல் அருந்தலாவைச் சந்தி -வொய்ப் பல- பதுளை வீதியிலுள்ள செங்கலடி எல்லையான தென்பிட்டிச்சந்தி முன்பாகவுள்ள பெரிய புல்லுமலை சந்தியிலிருந்து மங்களகமைக்குச் செல்லும் சர்வோதய வீதியில் அருந்தலாவைச் சந்தி அருகில் ஊர்காவல் படையினரும், ஒரு சில சிங்களவர்களும் கொட்டில் அமைத்து 100 ஏக்கருக்கு மேற்பட்ட காணியில் விவசாயம் செய்கின்றனர்.

புல்லுமலை-185 கிராமசேவகர் பிரிவில், குளத்தின் மேல் பகுதியில் அண்ணளவாக 500 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளை 30க்கு மேற்பட்ட வாடிகளை அமைத்து ஊர்காவல் படையினரும் சேர்ந்து கௌப்பி செய்கின்றனர்.

கோப்பாவெளி -146ஏ கிராமசேவகர் பிரிவின் பாக்கு வெட்டிப்போட்டமடு பகுதியில், சின்ன ஆறு மேற்பகுதியில், 40 குடும்பங்களுக்கு மேற்பட்டவர்கள் வாடிகட்டி விவசாயம் செய்கின்றனர். இவர்களோடு ஊர்காவல் படையினரும் 500 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளிலும் விவசாயம் செய்கின்றனர். இவர்களுக்கு துப்பாக்கியும் வழங்கப்பட்டுள்ளது. இப்பகுதிக்குச் செல்லும் கால்நடைகளை பிடித்துக்கட்டி பணம் அறவிடுகின்றனர். அல்லாவிட்டால் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி மாடுகள் இறக்கும்நிலை ஏற்பட்டு வருகிறது.

கோறளைப்பற்று வடக்கு (வாகரை) யை எடுத்துக்கொண்டால், மதுரங்குளம் - 211ஈ. கிராமசேவையாளர் பிரிவில், உள்ள ஊத்தோடை பகுதிக்குச் சென்று ஒருசிலர் குடியிருப்பதற்காக பார்வையிட்டுச்சென்றுள்ளனர்.

தோணிதாட்டமடு -213சி (புச்சாக்கேணி) கிராமசேவையாளர் பிரிவில் சேருவல தொடக்கம் வெலிக்கந்தைக்குச் செல்லும் புதிய பாதை அருகில் மாவில் ஆறுப்பகுதி இவ்வீதியில் கல்லரிப்புப் பகுதியில் 2013ம் ஆண்டுக்குப் பிறகு 2 கிலோமீற்றர் தூரமளவில் கிட்டத்தட்ட 200 சிங்கள குடும்பங்களை பௌத்த பிக்குவும், இராணுவமுமாகச் சேர்ந்து குடியேற்றி உள்ளனர். இவர்கள் இருக்கும் பகுதி வாகரை பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட தோணிதாட்டமடுவிற்குச் சொந்தமான பகுதியாகும். தற்சமயம் இக்கிராமமும் இராணுவம் இருக்கும் முகாமும் இப்பிரதேச செயலகத்துக்குள் அடங்காது என்றும் கூறிவருகின்றனர்.

கோரளைப்பற்று தெற்கு (கிரான்) பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குடும்பிமலை -209டி கிராமசேவையாளர் பிரிவின் மாந்திரிஆறு, மயிலத்தமடு, பெரிய மாதவணை வேதாள-மலை பிரதேசங்கள் முக்கியமாகப் பிரச்சினைக்குட்படுகின்றன. மந்திரி ஆறு மட்டக்களப்பு மாவட்ட எல்லை இதன் உள்பகுதியில் மயிலத்தமடு உள்ளது. இதனருகில் இராணுவ முகாம் இதிலிருந்து பெரியமாதவணை தொடங்குகின்றது.

இவ்வயல் வெளியில் 2011ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை 40க்கு மேற்பட்ட சிங்களக் குடும்பங்கள் சிறிய வீடுகளை அமைத்து வேளாண்மை, தென்னை, வாழை, உழுந்து, பயறு, கொச்சி போன்ற விவசாயச் செய்கையில் ஈடுபடுகின்றனர். இக்காணிகள் அனைத்தும் கால்நடைகளுக்கு மேய்ச்சற்தரைக்கென ஒதுக்கப்பட்ட காணிகளாகும். இவர்கள் தமிழ் மக்களின் கால்நடைகளைப் பிடித்து வைத்துவிட்டு பணம் அறவீடுசெய்து வருவதும், குறிப்பிடத்தக்கதாகும். இவர்கள் அனைவரும் பொலநறுவை மாவட்டத்தைச் சேர்ந்த அறுகம்வலை, மோடின்வல் இடத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

மண்முனை தென்மேற்கு (பட்டிப்பளை) பிரதேச செயலாளர் பிரிவின், கச்சைக்கொடி சுவாமிமலை -135சி கிராமசேவையாளர் பிரிவில், கோம்பஸ்தலாவ - கெவிளியா-மடு, புளுக்குணாவ பகுதியில், 2012ஆம் ஆண்டு இப்பகுதியில் குடியேறிய 76இற்கு மேற்பட்ட சிங்கள குடும்பங்களுக்கு புதிய விகாரைகளும், புதிய வீடுகளும் பிக்குமாராலும் இராணுவத்தினராலும் அனுமதியற்ற முறையில் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். இதுமட்டுமின்றி இதே வேளை புளுக்குணாவ, ஐம்பது குடும்பங்களும், கெவிளியாமடு 285 சிங்கள குடும்பங்களும், வசித்துவருவதோடு விவசாயச் செய்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

அத்துமீறி விவசாயம் செய்கின்றவர்களினால் கால்நடைகள் சுடப்படுவதும், கால்நடைகளை கட்டிவைத்து பணம் பறிப்பதும், கால்நடைகளை களவாக எடுத்துச்செல்வதும், கால்நடை வளர்ப்போரை இப்பகுதிக்கு வரவேண்டாம் என பாதுகாப்புத்தரப்பினர் அச்சுறுத்தல் செய்வதும் தொடர்ந்துகொண்டே வருகின்றன.

இவற்றினைத் தடுத்துநிறுத்தி வைப்பதற்கு வெறுமனே குரல் 'கொடுப்பதால் மாத்திரம் இந்த அத்துமீறலைத் தடுத்துநிறுத்தி கால்நடை பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பாதிப்பிலிருந்து பாதுகாக்க முடியுமா என்பது இந்த இடத்தில் கேள்வியாகும்.

அந்தவகையில், கிழக்கின் மேய்ச்சல் தரை விவகாரத்தினை ஆராய்ந்து அவற்றுக்குத் தீர்வைத்தரவுள்ள அரசாங்கத்தின் அமைச்சர்கள் எதிர்காலத்திலும் நில அபகரிப்புச் செயற்பாட்டினால் பிரச்சினைகள் தோன்றாத வகையில் முடிவை முன்வைக்க வேண்டும். என்பதனைவிடவும், தமிழ் அரசியல்வாதிகளும், அவற்றுக்கான செயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டுமென்பது தமிழ் விவசாயிகள், கால்நடை வளர்ப்பாளர்களது கோரிக்கையாகும்.

நீண்டகாலமாக இருந்துவரும் இப்பிரச்சினைக்குத் தீர்வு விவசாய, காணி அமைச்சர்கள் எவ்வாறு தீர்வை முன்வைக்கப்போகிறார்கள் என்பது எதிர்பார்ப்பாகவே இருக்கிறது.



# இலக்கிய நயம்



# பிரிவோம் பிரியாதிருக்க

பிரிவு என்ற ஒன்று
இல்லாவிட்டால்
எந்தக் காதலும்
காவியமாகி இருக்காது!

சோகம் என்ற ஒன்று
இல்லாவிட்டால்
எந்தக் காதலும்
அமரத்துவம் பெற்றிருக்காது!

பிரிவு என்ற வாளால்
காயப்பட்ட
இதயத்தில் இருந்து
சோகம் கொட்டுகிறது!

காதலை ஈரப்படுத்தி
இதமாக்குகிறது!

தினமும் பெய்தால்
மழைக்கு
என்ன மரியாதை!

பூமியை ஏங்கவைத்து
பெய்யும் மழைக்கே
பூரண மரியாதை!

ஏங்கிய பூமியே
ஈரத்தின் இதத்தை
உணர்ந்து கரைகிறது!

காதலும் அப்படித்தான்
காதலர்களும் அப்படித்தான்!

தூரம் அதிகமாகும் போதுதான்
காதல் வேகமாகிறது!
பிரிந்திருந்து ஒருத்தி
புலம்புகிறாள் கேளுங்கள்!

இந்தப் புலம்பலில்தான்
எத்தனை இதம்!

'எங்கே போனாய்
என் உயிர் காதலா?

நீயும் நானும்
பஞ்சும் தீயும் அல்ல!

தீயும் தீயுமாகவன்றோ
கலந்து சுகித்தோம்!

தீயும் தீயும்
உரசிக்கொள்ளும்
அற்புத கலப்பில்
நம் தேகங்கள் எப்படி
தீய்ந்து போகலாம்
தப்பித்தன?

நெஞ்சுக்கூடு காட்டிடைப்
பொந்தாய் ஆனது!
அங்கொரு அக்னிக்குஞ்சாய்
எம் காதல் ஆனது!

ஊருக்கே தெரிய
எம் காதல் எரிந்தது!
உறவுகள் எதிர்த்தும்
எம் காதல்
கொழுந்துவிட்டெரிந்தது!

அணைப்பதும் இயலாத
காட்டுத் தீயில்
எம் காமம் குளிர்காய்ந்தது!

உயிரும் உயிரும்
ஒன்று கலந்தன.
உடலும் உடலும்
ஒன்று கலந்தன!

மேகங்கள் மேலே
என்னை வைத்தாய்!
மோகம் தீர
என்னை வதைத்தாய்!

பூமியை விட்டு
வெகுதூரம் போனோம்!
காற்றில் மிகுந்து
சுகத்தினில் லயித்தோம்!

உனக்குள் என்னையும்
எனக்குள் உன்னையும்
ஏந்திச் சுமந்தும்
பஞ்சுப் பொதியாய்
எப்படி உணர்ந்தோம்?!

எத்தனை விசித்திரம்
எத்தனை விநோதம்!
பூமியில் இருந்து
வெண்ணெய் போல
நழுவி நழுவி
எங்கே போனோம்?!

உலகில் இருந்து
அந்தப் பொழுதில்
எப்படித் தொலைந்தோம்?

முத்துக் குளிக்கும்
மீனவர் மூச்சை அடக்கி
பித்துப் பிடித்து
சுகத்தில் குளித்தோம்!

காதல் சுகம்
காமம் இதம்!
காதல் இல்லாத
காமம் ஜடம்!

என் உயிர் காதலா
எப்போது வருகிறாய்?
எப்போதையும் விட
இப்போதுதான்
உன் அருகாமையின்
அருமை புரிகிறது!

இந்தத் தீ தனித் திருந்தால்
தன்னையே
அழித்துக்கொள்ளும்
இந்தத் தீ
வாழ்ந்ததும் உனக்காக
இப்போது வாழ்வதும்
உனக்காக!

பிரிவதற்கு சம்மதித்த
என் பேதமைக்காக
இப்போதுதான்
வருந்துகிறேன்!
இப்படியொரு கொடுமை
என்று தெரிந்திருந்தால்
அன்று சம்மதித்திருப்பேனா?
இனிமேல் பிரியாமல்
இருப்பதற்கு
இந்தப் பிரிவே போதும்!

பொறுத்திருக்கிறேன் -
பிரிவுக்கு
உடன்பட்டது நானல்லவா!
நீயாகப் பிரிந்திருந்தால்
உயிர் விட்டிருப்பேன்!

வா இனி
பிரிவின்றி வாழ
இந்தப் பிரிவில்
இருந்து
கற்றுக்கொள்வோம்!

"அரிதாற்றி அல்லல் நோய் நீக்கி
—பிரிவாற்றிப்
பின் இருந்து வாழ்வார் பலர்"

குறள்: 1160 அதிகாரம்: 116



# சிந்தியா பதில்

**சிந்தியா! வடக்கு மாகாண சபையின் வெற்றியைப் பயன்படுத்தி, தமிழர்கள் தலைநிமிர்ந்து நிற்கும் நிலையை கூட்டமைப்பு உருவாக்குமா?**

**த.சர்வேஸ்வரன், சாவகச்சேரி.**

உருவாக்க வேண்டும். முதலமைச்சரை தனிமைப்படுத்திவிட்டு கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் தமது அரசியல் விண்ணானத்தைக் காட்ட முற்படுவார்கள் போல் தெரிகின்றது. முதலமைச்சருக்கு எதிரிகள் என்று எவரும் இல்லை. கூட்டாளிகள் மீதுதான் அவர் கவனமாக இருக்கவேண்டியிருக்கும்.

**சிந்தியா! வாகன விபத்துக்களை கட்டுப்படுத்த யாருமே ஆரோக்கியமாக சிந்திப்பது போன்று தெரியவில்லையே?**

**என்.ராஜன், மட்டக்களப்பு.**

சாரதிகள்தான் மற்ற உயிர்களை நேசித்து வாகனம் செலுத்தவேண்டும். "திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால், திருட்டை ஒழிக்க முடியாது" என்பதுபோல் சாரதிகளாகப் பார்த்து நிதானமும், கவனமும் கொண்டு செயற்படாவிட்டால் விபத்துக்களை யாரும் தடுக்கமுடியாது.

**சிந்தியா! புலிகளின் தலைவர் பயன்படுத்திய நிலத்தடி வீடு அழிக்கப்பட்டுவிட்டதாமே?**

**கு.சாந்தினி, காலி.**

மக்கள் சொந்த வீடுகள் இல்லாமல் இன்னும் காடுகளிலும், இடம்பெயர்ந்த இடங்களிலும் வாழ்கின்றனர். நீங்கள் புலிகளின் தலைவரின் வீடு உடைக்கப்பட்டதாக அக்கறையோடு கேட்கின்றீர்களே.

**சிந்தியா! ஜனாதிபதியின் முன்னால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பதவிப்பிரமாணம் எடுத்தால் துரோகம்! விக்னேஸ்வரன் பதவிப்பிரமாணம் எடுத்தால் தியாகம். இது எந்தவகையில் நியாயம்?**

**கா.செல்வம், அச்சுவேலி.**

என்னிடமும் இந்தக் கேள்வி உண்டு.

**என் நண்பிக்கு அடிக்கடி கோபம் வருகிறதே. என்ன செய்யலாம் சிந்தியா?**

**எ.கல்யாணி, பேராதனை.**

எதற்காக கோபப்படுகின்றார் என்பதைக் குறிப்பிடவில்லையே. நலன் சார்ந்தா?, பொறாமையாலா? என்பதைப் பொறுத்தே நாம் தீர்வுகளைத் தேடமுடியும்.

**சிந்தியாவுக்கு பிடித்த நீதிக்கதை ஒன்று கூறுங்களேன்?**

**ம.காந்திமதி, சுண்டுக்குளி.**

இரண்டு நண்பர்கள் காட்டுக்குள் போனார்கள். அந்தக் காட்டுவழியே ஒரு கரடி வந்ததாம். அதைப்பார்த்ததும் ஒரு நண்பன் மற்ற நண்பனுக்குச் சொல்லாமலே ஓடிவிட்டான்.

தனித்து நின்ற நண்பன் செய்வது அறியாமல் நிலத்தில் விழுந்து படுத்துவிட்டான். அவன் அருகில்வந்த கரடி மணந்து பார்த்துவிட்டு சென்றுவிட்டது.

இதை தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த நண்பன் மீண்டும் வந்து படுத்துக் கிடந்த நண்பனிடம் கேட்டானாம் கரடி உன் காதில் ஏதோ கூறியதே என்ன கூறியது? என்று கேட்டான். அதற்கு அந்த நண்பன் கூறினான், ஆபத்தின்போது உதவாத நண்பர்களுடன் சேராதே என்று கரடி சொன்னது என்றானாம்.

இந்தக் கதை நீதிக்கதைகளில் பிரசித்தமானது.

**குர்ஷித்தின் வருகை சீனாவுக்கு போட்டியானதா சிந்தியா!**


**ம.ஷர்மிலன், வெள்ளவத்தை.**

இல்லை. பொதுநலவாய மகாநாட்டில் இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்வது தொடர்பான ஆய்வுக்கான விஜயம்.

**சிந்தியா! மேற்கிந்தியத் தீவுகள் அணியின் டுவைன் பிராவோ தமிழ்ப் படமான 'உலா' என்ற படத்தில் நடிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளதே?**

**எம்.கவிந்தன், மாத்தளை.**

படம் வரட்டும் பார்க்கலாம்.



**சிந்தியா! நீங்கள் பெண்கள் தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிக்கும்போது பெண்கள் உரிய மரியாதையை கொடுப்பதாகத் தெரியவில்லை? நீங்கள் ஆணாதிக்கவாதியா?, பெண்ணாதிக்கவாதியா!**

**எஸ்.சஞ்சீவன், வவுனியா.**

எனக்கு 'ஆதிக்கம்' என்ற சொல்லே பிடிக்காது. தேவையற்ற சந்தேகங்களில் உங்கள் நேரத்தை வீண் விரயம் செய்வதைத் தவிர்க்கலாமே.

வை திஸ் கொலவெறி...?


# சிறுவர் பராமரிப்பு




**வேலைக்கு செல்லும் பெற்றோர்களே!**

**உங்களின் அன்புக் குழந்தைகளை காலை 7.00 முதல் மாலைவரை பராமரித்துக் கொடுக்கின்றோம். நீங்கள் அருகிலிருந்து கவனிப்பது போலான சேவை. சுகாதாரத்துடன் கூடிய அரவணைப்பும் சேர்ந்த சேவை. அத்துடன் மாலை நேரக் கற்றல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்.**

தொ.பே: 077 2931279
077 9865679
(யாழ்ப்பாணம், கொக்குவில்)

(C/3106)

ஸ்ரீ ராம ஜெயம்



**ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி, பேராசிரியர்,**
P.K.சாமி JP
**ஐயா**

# மலையாள மாந்திரிக சக்தி

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்ட தெளிவான ஜாதக குறிப்புகளுக்கு....

**MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM**
23, Mayfield Road, Kotahena, Colombo - 13.
Tel : 011 2342463/4, 011 2470615 Fax : 011 2344831
E-mail : drpksamy@sitnet.lk
நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, ஈரான் தேசத்தின் முதலாவது ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள கஷான் ரௌகானியின் அலுவலகத் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு ஏற்படுத்துகிறார்.



ஹிறீங்... ஹிறீங்...

**ரௌகானியின் உதவியாளர்:-** ஹலோ! பிரசிடன்ஸ் ஒவ்வீஸ். மே ஐ நோ, கூ இஸ் ஒன் த லைன்?

**ஒபாமா:-** ஹலோ மிஸ்ரர் ரௌகானியுடன் பேசமுடியுமா?

**உதவி:-** ஹலோ!' மிஸ்ரர் ரௌகானி தொழுகையில் இருக்கின்றார். நீங்கள் யார் என்று கூறமுடியுமா?

**ஒபாமா:-** ஓகோ! யாரென்று தெரிந்தால்தான் உங்கள் தேசத்தின் தலைவர் தொலைபேசியை கரம்தொட்டு எடுப்பாரோ...? (நக்கலாக)

**உதவி:-** ஹலோ மிஸ்ரர் நீங்கள் அழைத்திருப்பது யாருக்கு என்பதைப் புரியாமல் பேசுகின்றீர் போலிருக்கின்றது.

**ஒபாமா:-** ஏ அற்ப பயலே! யாருக்கு அழைப்பை எடுத்தேன் என்று எனக்குத் தெரியவில்லையா! ஹ...ஹ....ஹ..... நான் யார் என்பதை அறிந்து கொள்ளாமல் நீர்தான் சண்டித்தனமாய் கதைத்துக் கொண்டிருக்கிறீர்.

**உதவி:-** மிஸ்ரர் இது சண்டித்தனமல்ல, தைரியம். எங்கள் தேசத்தலைவரின் அலுவலகத்திற்குத் தொடர்புகொண்டு அநாகரிகமாக நடந்துகொள்கின்ற ஒருவரை தட்டிக்கேட்கின்ற துணிச்சல்.

**ஒபாமா:-** இதுதான்! இதேதான் எனக்கு உங்களிடம் எரிச்சலை ஏற்படுத்துகின்ற விடயம். தைரியம், துணிச்சல் என்பவையெல்லாம் உங்களுக்கு இருப்பதாக நீங்கள் நினைத்துக் கொள்வதுதான் எங்களை எரிச்சலடையச் செய்கிறது.

**உதவி:-** நாங்கள் ஏனையவர்களின் உதவிகேட்டு அவர்களின் வாசற்படிகளை நாடாமல் எங்கள் தேவைகளை நாங்களே தீர்த்துக்கொள்கின்ற தன்னம்பிக்கையாளர்களாக இருப்பதனால் எங்களுக்கு வருகிறது தைரியம். எவருக்கும் அஞ்சாமல் சுயமாக வாழமுடியும் என்று மனதில் விழுகிறது நம்பிக்கை. இதை யாருக்காகவும் விட்டுக்கொடுக்க முடியாது. அது சரி, நீர் யார்? நாங்கள் தன்னம்பிக்கையாளர்களாக இருப்பது உமக்கு ஏன் குடைச்சலை ஏற்படுத்துகிறது?

**ஒபாமா:-** நான் யார் என்பது இருக்கட்டும். நீங்கள் தைரியசாலிகள் என்றுசொன்னால் எதற்காக ஏனையவர்களைப் பார்த்து அஞ்சுகிறீர்கள்?

**உதவி:-** அச்சமா? நாம் யாருக்கு அஞ்சவேண்டும்?, எதற்காக அஞ்சவேண்டும்?

**ஒபாமா:-** ஏனைய நாடுகளைப் பார்த்து அஞ்சுவதால்தானே அணு ஆயுதம் செய்கிறீர்கள், படைப்பலங்களை அழித்தீர்கள். இப்போது பேச்சுவார்த்தையென்னு கதைவிடுகிறீர்கள். இவையெல்லாம் அச்சத்தின் வெளிப்பாடுகள் அல்லவா?

**உதவி:-** ஏய்... முட்டாள்! அச்சம் என்பதை அகராதியிலேயே அறியாதவர்கள் ஈரானிய மக்கள். அணு உலைகளை வைத்திருப்பது எங்களின் தேவைகளை நிவர்த்திசெய்து கொள்வதற்கு. படைப்பலத்தைப் பெருக்குவது அமெரிக்கா போன்ற மேற்குலகக் கழுகுகளிடம் இருந்து எங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு. இதனைப் புரிந்துகொள்ளாமல் உளறிக் கொண்டு இருக்கின்ற முகவரியற்ற பேடி நீர் யாரோ?

**ஒபாமா:-** அவசரப்படாதே நண்பா! நான் யார் என்பதை சொல்லுகின்றேன். அதற்குமுன்னர் நான் கேட்பதற்கு பதிலைச் சொல்லு. உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்வதற்குத்தான் அவைகளை நீங்கள் பலப்படுத்திக் கொள்கிறீர்களோ. அப்படியானால் உங்களின் புதிய அரசாங்கம் அமெரிக்க தேசத்தோடு பேச்சுவார்த்தை என்கிறது, நல்லுறவு என்கிறது, புரிந்துணர்வு என்கிறது...?

**உதவி:-** எங்களுடைய புதிய அரசாங்கம் மேற்கொள்கின்ற இராஜதந்திர அணுகுமுறைகள், உங்களுக்கு தவறான புரிதலை ஏற்படுத்துகின்றது. இது பயத்தின் விளைவான நகர்வல்ல. எம்மக்களின் உயிர்கள்மீது இருக்கின்ற அக்கறையின் வெளிப்பாடு.

**ஒபாமா:-** ஷ்.்பாஸ்! பயத்தை மூடிமறைப்பதற்கு அக்கறை என்ற முகமூடியை அணிந்து கொள்கிறீர்கள். ஹ....ஹ...ஹ....

**உதவி:-** உம்மை யார் என்று அறிமுகப்படுத்திக் கொள்ளவே துணிச்சலின்றி இருக்கின்ற உமக்கு நாம் தைரியசாலிகள் என்பதையோ, எமது புதிய அரசாங்கங்கள் எதற்காக அமெரிக்க வல்லாதிக்கத்துடன் கைகுலுக்க விரும்புகிறது என்பதையோ, புரியவைக்க வேண்டிய தேவை எமக்கு இல்லை. இருந்தாலும் சொல்லுகிறோம் கேளும்.

அமெரிக்க வல்லாதிக்க கழுகுகள் தங்களின் இயலாமையை மறைப்பதற்காக தங்களுடைய மக்களுக்கு தங்களை ஹீரோக்களாக காண்பிப்பதற்காக உருவாக்கி வைத்திருக்கின்ற முஸ்லீம் எதிர்ப்புவாதத்தை தொடர்ந்து பேணுவதற்காக இஸ்லாமிய தேசங்கள்மீது பொய்க்குற்றச்சாட்டுக்களை அடுக்கி போரையும் தொடுக்கின்றன. இதனால் மரணபூமிகளாக இஸ்லாமிய தேசங்களாக மாறிவருகின்றன. அப்படியான நிலைமை எங்கள் உயிரிலும் இனிய ஈரானிய தேசத்திற்கு வந்துவிடக்கூடாது என்ற அக்கறையில்தான் எங்களுடைய புதிய அரசாங்கம், புதிய இராஜதந்திர நகர்வை கையில் எடுத்திருக்கிறது. அதை உம்மைப்போன்றவர்களால் விளங்கிக்கொள்ள முடியாது. அதுசரி, இப்போதாவது நீர் யார் என்பதைச் சொல்லும் பார்க்கலாம்

**ஒபாமா:-** ஹ...ஹ....ஹ.... நான்தான் அமெரிக்க அதிபர் ஒபாமா பேசுகின்றேன்.

**உதவி:-** (அலட்சியமாக) அப்படியா? இதுவரை நேரமும் என்னுடன் உரையாடியதற்கு நன்றி. எங்கள் தேசத்தின் தலைமகன் தொழுகையில் ஈடுபட்டிருக்கின்றார். பிறப்பினால் தொழுகையின் மகத்துவம் அறிந்தவர் என்றவகையில் புரிந்துகொள்வீர்கள் என்று நினைக்கின்றேன். தொழுகைமுடிந்ததும் தகவலைத் தெரிவிக்கின்றேன். நன்றி.

(ஈரானிய பிரஜையின் நாட்டுப்பற்றையும், அரசியல் தெளிவையும் பார்த்து மனதுக்குள் வியந்தவராகத் தொடர்பைத் துண்டிக்கிறார் ஒபாமா)

## காதிலை பூ கந்தசாமி



## இலக்கிய இராட்சசன்

ஓடிப்போய் நினைவிழந்து கிடக்கும் தாயாரின் தலைமாட்டில் போய் உட்கார்ந்துகொண்டு, அவளுக்கு ஏதாவது தேவையா என்பதைக் கவனித்துவிட்டு மறுபடி அடுத்த காட்சி ஆரம்பிக்கு முன் அதே ஓட்டத்தில் கொட்டகைக்கு ஓடிவருவார்.

அன்றிரவு அந்த நகரமே அவர் பெயரை, அந்த அற்புத நாடகத்தின் சிருஷ்டிகர்த்தாவை புகழ்ந்து பாராட்டிக் கொண்டிருக்கும்போது - அத்தனை புகழுக்கும், பாராட்டுதலுக்கும் உரியவரான அந்த ராட்சஸன் கிழிந்த பாயிலே கிழித்துப் போட்ட வாழைநாரைப் போலக் கிடக்கும் தன் தாயாரின் காலடியிலே முடங்கிக் கிடந்தார்.

உன்னதமான சிருஷ்டிகளை உலகுக்கு அளித்துள்ள இந்த நாவலாசிரியர் இலக்கியத்தைச் சமைப்பதிலே எவ்வளவு சமர்த்தரோ அதேபோல, சமைத்த உணவுகளைச் சுவைப்பதிலேயும் கெட்டிக்காரர். பெருந்தீனி தின்னக் கூடியவர்.

விதவிதமான உணவு வகைகளை, வரிசையாக பரத்தி வைத்துக்கொண்டு!

பதறாமல் பக்குவமாகப் பகாசுரனைப் போல ஒழித்துக் கட்டுவார். எதையும் ஜீரணிக்கும் நல்ல உடல். வயிறாரத் தின்ற பின், மனமாரக் குடிப்பார் என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. கோப்பியோ, வேறு மதுவகைகளோ எதுவும் குடிக்கமாட்டார். புகைக்கமாட்டார்.

இப்படிப் பெருந்தீனி தின்னக் கூடிய இவர் சுவாரஷ்யமாக எழுதிக் கொண்டிருக்கும் போது மட்டும் உணவைப் பற்றிக் கவலையேபடமாட்டார். சிலவேளைகளில் சாப்பிடவேண்டும் என்பதையும் மறந்து, நாள்முழுதும் எழுதிக்கொண்டே இருப்பார்.

இவர் இலக்கிய சிருஷ்டி செய்துகொண்டிருக்கும் போது, யாராவது நண்பர்கள் இவரைக் காண வந்தால், வந்தவரை உபசரித்து உட்காரச் சொல்ல, தன் வேலையிலிருந்து எழுந்திருக்கமாட்டார். தலையை நிமிராமலே இடக்கையை நீட்டி, வந்தவரின் கையைப் பற்றிக் குலுக்குவார். அவ்வளவுதான்.

(தொடரும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(10.10.2013 தொடக்கம் 16.10.2013 வரை)

### மேடம்

குடும்பத்தில் தடைப்பட்டு வந்த சுப காரிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றிபெறுவீர்கள். பொருளாதாரத்தில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டாலும் மிக சிரமத்தின் பேரில் சரி செய்வீர்கள். கணவன் - மனைவி உறவுகளில் இது நாள்வரையில் இருந்துவந்துள்ள கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமையுடன் காணப் படுவார்கள். நண்பர்கள் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். மற்றவர்களின் விசயங்களில் தலையிட்டு மனநிம்மதி இழக்கவேண்டாம். பொருளாதாரரீதியில் முன்னேற்றம் ஏற்படும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### இடபம்

குடும்பத்தில் இதுவரையில் ஏற்பட்டு வந்துள்ள மருத்துவச் செலவுகள் குறையும். விவசாயம் செய்பவர்களுக்கு புதிய முறை விவசாயங்களின் மூலமாக நல்ல விளைச்சல் காணப்படும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு உத்தியோக உயர்வுடன்கூடிய பணி மாற்றங்கள் ஏற்படலாம். தீராத நாட்பட்ட நோய்கள் தீர்வதற்காகப் புதிய பெண் மருத்துவர்களின் உதவிகளை நாடுவதன்மூலம் நற்பலன் அடைவீர்கள். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகக்கவனதாகப் பேசிப் பழகுதல் நல்லது. பூர்வீகச் சொத்து சம்பந்தமான வழக்கு விசயங்களில் பெரிய மனிதர்களின் தலையிடுதலால் நல்லதொரு முடிவுக்குவரும். வெகுகாலமாகப் பிரிந்துபோன கணவன் - மனைவி இருவரும் ஒன்றுசேரும் காலமாகும்.

### மிதுனம்

சுபகாரிய சம்பந்தமாக வடதிசையில் இருந்து நல்ல செய்திகள் வந்துசேரும் காலமாகும். வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண்பிரச்சினைகளை விலைக்கு வாங்காதீர்கள். குடும்பத்தில் தடைப்பட்டு வந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெற இன்னும் சற்றுக் காலதாமதம் ஆகலாம். புதிய வீடு மற்றும் வாகனங்களை வாங்குவதற்கான முயற்சிகளில் சில பின்னடைவுகள் வந்துசேரும். உடம்பில் வாயு மற்றும் வயிறு சம்பந்தமான உபாதைகள் வந்து போகலாம். தாயின் உடல்நிலையில் இருந்து வந்த பாதிப்புகள் சற்றுக் குறையும். வேலையில்லாத படித்த இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் வந்துசேரும் காலமாகும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### கடகம்

தந்தை வழிச் சொந்தபந்தங்களால் எதிர்பாராத சில ஆதாயங்களை அடைவீர்கள். புதிய நண்பர்களிடம் சற்று எச்சரிக்கையுடன் பேசிப்பழகுதல் நல்லது. குடும் பத்தில் நடைபெறவேண்டிய சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காகப் புதிய கடன்வாங்குவீர்கள். வராத கடன்கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் காவல்துறையினர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். கண், காதுகளில் சிற்சில உபாதைகள் வந்துபோகலாம். நீண்டகாலமாகத் தடைப்பட்டு வந்துள்ள குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவர வாய்ப்பு உள்ள காலமாகும். புதிய கடன்வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

### சிங்கம்

தாய் உடல்நிலை பாதிப்பால் மருத்துவச் செலவுகள் உண்டாகலாம். வீடு மற்றும் தொழிற்சாலைகளை இடமாற்றம் செய்வதற்கு வாய்ப்புகள் உள்ளது. கால்களில் கவனம் தேவை. புதிய பெரிய மனிதர்களின் தொடர்புகள் ஏற்பட்டு அவர்களால் எதிர்பாராத சில ஆதாயங்களை அடைவீர்கள். நண்பர்களால் வீண் பிரச்சினைகள்வர இருப்பதால் மிகக் கவனமுடன் இருக்கவும். உற்றார் உறவினர்களின் வரவுகளால் நன்மை அடைவீர்கள். தீராத நோய்கள் தீருவதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். குலதெய்வ ஆலயத் திருப்பணிகளில் பங்குகொண்டு மனநிறைவடைவீர்கள். வங்கிகளின்மூலமாக நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்த பணம் கிடைக்க இன்னும் சற்றுக் காலதாமதம் ஆகலாம்.

### கன்னி

மாணவர்கள் கல்வி மற்றும் விளையாட்டுக்களில் கவனமுடன் இருக்கவும். மஹான்களின் எதிர்பாராத தரிசனங்களால் மனநிம்மதி அடைவீர்கள். பழைய நண்பர்களின் சந்திப்பால் ஒரு சிலருக்கு ஆதாயம் உண்டாகும். உடம்பில் நரம்பு மற்றும் எலும்பு சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். அண்டை அயலார்களுடன் கவனமாகப் பேசிப் பழகவும். பிள்ளைகளுக்கு மருத்துவச் செலவுகள் உண்டாகும். தந்தை - மகன் உறவுகளில் இதுவரையில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் குறைந்து ஒற்றுமையாய் இருப்பார்கள். செய்யாத குற்றங்களுக்காக வீண் பழிச்சொல் வர இருப்பதால் எந்த விசயத்திலும் மிகவும் கவனமுடன் நடந்துகொள்வது நல்லது.

### துலாம்

அரசியல்வாதிகளுக்கு நல்ல ஆதாயம் பெறக்கூடிய காலமாகும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்க இன்னும் சற்றுக் காலதாமதம் ஆகலாம். அண்டை அயல்வீட்டுக்காரர்களுடன் மிக எச்சரிக்கையாய் பேசிப்பழகவும். வெகுகாலமாக விட்டுப்போன பழைய உறவினர்களுடன் தொடர்புகள் ஏற்படும். வெளிநாடு சென்றுவருவதற்கான முயற்சிகளில் சம்பந்தம் இல்லாத நபர்களின் உதவிகள் கிடைக்கும். காதல் விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேரும். உடல் நிலையில் முதுகு, மூலம் போன்ற தொல்லைகள் வந்துபோகும். சகோதர சகோதரிகளின் சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காகப் புதிய கடன்கள் வாங்குவதற்கு முயற்சிப்பீர்கள்.

### விருச்சிகம்

மற்றவர்களிடம் இருந்த எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கக்கூடிய காலமாகும். பெண் சம்பந்தமான காதல் விசயங்களில் மிகுந்த கவனமுடன் இருப்பது நல்லது. மற்றவர்களை நம்பிப் புதிய கடன்களைக் கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். விட்டுப்போன பழைய உறவுகள்மீண்டும் துலங்கும். பழைய கடன்களை அடைத்துவிட்டுப் புதிய கடன் வாங்குவீர்கள். உற்றார் உறவினர்களின் எதிர்பாராத திடீர் வரவுகளால் பொருட்செலவுகள் வந்துசேரும். வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. கணவன் - மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். வாகனங்கள் மற்றும் மின்சார பணிகளில் ஈடுபடுவோர்கள் மிகக் கவனமுடன் இருக்கவும்.

### தனுசு

நீண்டதூரப் பயணங்களின் மூலம் எதிர்பார்த்திருந்த காரியங்கள் நிறைவேறுதற்கு வாய்ப்புகள் உள்ளது. கணவன் - மனைவி உறவுகளில் காரணமற்ற சச்சரவுகள் வந்து நீங்கும். மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பாராத சில தடைகள் வந்துபோக வாய்ப்பு உள்ளதால் மிக எச்சரிக்கையுடன் பயின்றுவருதல் நல்லது. உற்றார், உறவினர்களின் எதிர்பாராத வரவுகளால் பொருட்செலவுகள் ஏற்பட்டாலும் அவர்களால் சில ஆதாயங்களை அடைவீர்கள். நீண்டகாலமாக வராமல் இருந்த பணம் மற்றும் பொருட்கள் மிகுந்த சிரமத்தின் பேரில் வந்துசேரும் காலமாகும். குலதெய்வ ஆலயங்களை திருத்திக் கட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு நற்பெயர் எடுப்பீர்கள்.

### மகரம்

திருமணம் போன்ற சுபகாரிய சம்பந்தமான முயற்சிகளில் சில தடைகள் வந்து சேரும். நண்பர்களால் வீண் பொருட்செலவுகளும் மனநிம்மதி இன்மையும் ஏற்படலாம். குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக உல்லாசப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். வெகு நாட்களாக வராதகடன் கொடுத்துள்ள பணம் திரும்பக் கிடைக்கும் வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண் வம்புகளை விலைக்கு வாங்காதீர்கள். தந்தை - மகன் உறவுகளில் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் குறைந்து ஒற்றுமையுடன் இருப்பார்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.


### கும்பம்

புதிய வீடு, நிலங்களை வாங்குவதற்காக வங்கிகளில் இருந்து நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்த பணம் கைக்கு வந்து சேரும். உடல்நிலையில் வயிறு மற்றும் மூல சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். விளையாட்டுத் துறை சார்ந்தவர்கள் சற்றுக் கவனமுடன் இருப்பது நல்லது. பிள்ளைகளால் சிற்சில தொல்லைகள் ஏற்பட்டாலும் அவர்களால் பெயர், புகழ் அடைவீர்கள். நீண்டகாலமாக பொருளாதாரத்தில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் மாறிச் சற்று முன்னேற்றமான சூழ்நிலை காணப்படும். ஒரு சிலருக்கு நாட்பட்ட பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்குவதன்மூலம் மனநிம்மதிக் குறைவு ஏற்படலாம்.

### மீனம்

காதல் விசயங்களில் நண்பர்களின் உதவியால் நல்ல செய்திகளைப் பெறுவீர்கள். தொலைதூரப் பயணங்களால் எதிர்பார்த்த காரியம் நிறைவேறும். மாணவர்கள் கல்வியில் சில தடைகள்வர இருப்பதால் கவனமுடன் சென்றுவரவும். நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்த புதிய தொழில்களை ஆரம்பம் செய்வதற்காகப் போட்ட திட்டங்களில் வெற்றி பெறுவீர்கள். தாயின் உடல்நிலை பாதிப்புக்களால் சிற்சில மருத்துவச் செலவுகள் வந்துசேரும். நீண்டகாலமாக வராத கடன் கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் ஆகியன திரும்பக் கை வந்துசேரும். அரசியல்வாதிகளிடம் இருந்து எதிர்பார்த்து இருந்த நல்ல தகவல்கள் வந்துசேரும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)



# ஈதுல் அழ்ஹா ஹஜ்ஜுப் பெருநாள்

வசதியும், வாய்ப்பும்
வாழ்வில் வர
வல்லோன் இல்லம்
செல்வோர் மக்கா.

ஒரே இடத்திலிவர்கள்
ஒரே கோலத்தில்
ஒன்றிணையும் நிகழ்வு
ஒப்பற்ற காட்சி.

மக்கா செல்வோர்
மனத் தூய்மையோடு
பரிசுத்தமாய் அங்கு
பாவமீட்சி பெறுவர்.

அருட்கள் நிறைந்த
ஹஜ்ஜை நிறைவேற்றி
அன்று பிறந்த
பாலகனாய் அங்கிருந்து
ஹாஜிகள்
திரும்புவர் இல்லம்.

வையகம் எங்கும்
வாழும்
முஸ்லிம்களுக்கிதுவே
தீன் மணம் பரப்பும்
தியாகத் திருநாள்
ஈதுல் அழ்ஹா
ஹஜ்ஜுப் பெருநாள்.

எம்.சி. கலீல்,
கல்முனை - 05.

## அழகுராணிப் போட்டி...

கொலம்பியாவிலுள்ள சிறைச்சாலையொன்றில் கைதிகளாகவுள்ள பெண்களுக்கான அழகுராணி போட்டியொன்று அண்மையில் நடைபெற்றது. பகோட்டா நகரிலுள்ள இச்சிறைச்சாலையில் தற்போது 2222 பெண் கைதிகள் உள்ளனர். கடந்த 18 வருடங்களாக அக்கைதிகளிடையே அழகுராணிப் போட்டிகள் நடைபெற்றுவருகின்றன.

இம்முறை நடைபெற்ற போட்டிகளில் தொலைக்காட்சி மற்றும் இசைத் துறை நட்சத்திரங்கள் சிலர் நடுவர்களாகப் பங்குபற்றினர். 56 வயதான மரியா விலேரியல் எனும் பெண்ணும் இப்போட்டியில் பங்குபற்றினார். 3 பிள்ளைகள், 9 பேரப்பிள்ளைகளைக் கொண்ட பெண் இவர். இச்சிறையிலுள்ள கைதிகளில் பெரும்பாலானோர் போதைப்பொருள் கடத்தல் குற்றத்திற்காக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்களும் வழக்கு விசாரணையை எதிர்நோக்கியுள்ளவர்களுமாவர். வெளிநாடு-களைச் சேர்ந்த 50 பெண்களும் இவர்களில் அடங்குவர். இவர்கள் சிறையில் இருந்தபோதிலும் பெண்களுக்கான தன்மைகளை இழந்துவிடவில்லை எனச் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.





## மருத்துவர்கள் அதிர்ச்சி....

சீனாவின் குவாங்சி மாகாணத்தை சேர்ந்த தம்பதியின் 2 வயது மகன் ஷியாவ் பெங். இவன் பிறக்கும்போது மற்ற குழந்தைகளை போலவே இருந்தான், பின்னர் படிப்படியான வளர்ச்சியில் 2 வயதை நெருங்கும்போது அவனது வயிறு மட்டும் பெருத்துக் காணப்பட்டது.

மூச்சுத்திணறலால் குழந்தை கஷ்டப்படவே, 'பிரைமரி கொம்ப்ளக்ஸ்' நோய்தான் என்று பெற்றோர் கருதினர். ஒருநாள் மூச்சுத்திணறல் அதிகரிக்கவே மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றனர்.

அங்கு மருத்துவர்கள் பரிசோதித்தபோது தான் உண்மை தெரியவந்தது, அவனை முழுமையாக ஸ்கேன் செய்து பார்த்தபோது அவனது வயிற்றில் வளர்ச்சி அடையாத கரு ஒன்று இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

அந்தக் கரு பின்னர் வயிற்றுக்குள் கட்டி போல வளரத் தொடங்கியவுடன், அறுவைச் சிகிச்சை மூலம் அகற்ற முடிவுசெய்தனர். இதுகுறித்து மருத்துவர் ஜோனாத்தன் பனராப், குழந்தையின் தாய் கருவுறும்போது இரட்டை குழந்தைக்கான கருவுறுதல் நடந்துள்ளது.

ஆனால் தவறுதலாக ஒரு கரு முட்டை இவனது வயிற்றுக்குள் சென்று வளர்ச்சி அடையாமல் ஒரு கட்டத்தில் நின்றுள்ளது. இது மருத்துவ உலகில் மிக அரிதாக நடக்கக்கூடிய செயல் என்று தெரிவித்துள்ளார்.





## அதிர்ஷ்டம்...

பிரித்தானியாவின் புறநகர்பகுதியில் வசித்துவரும் பெக்கி தொம்சன் தனது கிராமத்தில் உள்ள வீதி ஒன்றில் காரில் சென்றவேளை, அதிவேகமாக வந்த பாரிய லொறி ஒன்றை அவர் எதிர் கொண்டுள்ளார். இதனால் அவர் தனது காரை கரைக்கு கொண்டுவரவே, அந்தக் கார் சறுக்கி அருகில் உள்ள ஏரியினுள் விழுந்துவிட்டது. கார் தண்ணீரில் மூழ்கிய நிலையில் பெக்கி தொம்சன், தன்னை ஆசனப் பட்டியில் இருந்து முதலில் விடுவித்து நீரில் இருந்து வெளியே வந்து, பின்னர் பின் கதவைத் திறந்து தனது 4 மாதக் குழந்தையை வெளியே எடுத்துள்ளார்.

இக்குழந்தை சுமார் 4 நிமிடம் காரில் இருந்திருக்கிறது. குழந்தை மூச்சையுற்ற நிலையில், இருந்ததோடு அதன் உதடுகள் நீல நிறத்திற்கு மாறி குழந்தை இறக்கும் தறுவாய்க்குச் சென்றுள்ளது. இருப்பினும் தாயார் விட்ட பாடாக இல்லை. வாய்மூலமாக ஒட்சிசனை செலுத்திக்கொண்டு 999 அவசர சேவைப் பிரிவுக்கு தொடர்புகொண்டுள்ளார். விரைந்து வந்த பரா மெடிக்ஸ், அக்குழந்தைக்கு நெஞ்சில் ஷாக் கொடுத்து, மீண்டும் இதயத்தை துடிக்கவைத்துவிட்டார்கள்.







## அதிசய மனிதர்

சீனாவைச் சேர்ந்த ஜியோ லியன் (வயது 22) என்பவருக்கு கடந்தாண்டு ஏற்பட்ட சாலை விபத்தில் மூக்கில் பலத்த காயம் ஏற்பட்டது.

இதற்காக அவர் சரியான சிகிச்சை எடுத்துக்கொள்ளாததால், குருத்தெலும்பு முற்றிலுமாக சேதமடைந்து மூக்கு உருக்குலைந்தது.

இதனை மருத்துவர்களால் சரிசெய்ய முடியாத காரணத்தால், தோல் திசு வளர்ப்பு சிகிச்சை முறையில் புதிய மூக்கை உருவாக்க முடிவுசெய்தனர்.

இதற்காக இடுப்பெலுப்பில் இருந்து எடுக்கப்பட்ட குருத்தெலும்பை பயன்படுத்தி, ஜியோலியனின் நெற்றி பகுதியில் புதிய மூக்கு வளர்க்கப்பட்டது.

இது தற்போது முழு வளர்ச்சியடைந்துள்ளதாகவும், விரைவில் அகற்றப்பட்டு ஜியோலியனுக்கு பொருத்தப்பட உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.